KALKI
3.6.2007 ரூ.8.00
80 பக்கங்கள்


கல்கி

குடும்பத்துடன் படிக்க....

+16

இணைப்பைக்
கேட்டு வாங்குங்கள்

**விண்ணை
நோக்கி
விஜயா
வங்கி!**



சிக்கலில் சிவாஜி பிசினஸ்?


அடுத்த இதழ்...
+16
கல்கி
குடும்பத்துடன் படிக்க...
10.6.2007
கல்கி
தரம் நிரந்தரம்
கலைஞரும்
திருச்சியும்...
கலைஞரின்
84வது
பிறந்த நாள்
சிறப்பு மலர்!
வழங்குபவர்:
ப. கதிர்வேல், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர்,
ஊராட்சி மன்றத் தலைவர், மல்லியம்பத்து ஊராட்சி,
திருச்சி மாவட்டம்.



மதிப்பு குறையும் அமெரிக்க

கம்ப்யூட்டர் படித்து முடித்த பெரும்பாலானவர்களின் கனவு தேசம் அமெரிக்கா. நம்மவர்கள் ஈட்டிக் கொடுக்கும் வருமானத்தால்தான் அங்கு சம்பள விகிதங்கள் உயர்கின்றன! ஆனால், அப்படிப்பட்ட நம் கனவு தேசமான அமெரிக்காவின் டாலர் மதிப்பு சமீப காலமாகக் குறைந்து கொண்டே வருகிறது என்றால், நம்புவதற்குக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும்.

அமெரிக்காவுக்குச் சுற்றுலா செல்பவர், மேல்படிப்புக்காகச் செல்பவர், வியாபார விஷயமாகச் செல்பவர் எல்லோரும், அங்கு செல்லுபடியாகும் டாலரை, கரன்சியாக அல்லது டாலர் டிராவலர்ஸ் செக்காக மாற்றி எடுத்துச் செல்வது வழக்கம்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு வரை ஓர் அமெரிக்க டாலருக்கு, நம் இந்திய ரூபாய் 45க்கும் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால், கடந்த சில வாரங்களில் நம் இந்திய ரூபாயின் மதிப்பு உயர்ந்துள்ளது. எனவே, ஒரு டாலருக்கு ரூ.41 என்ற நிலைமை இருக்கிறது. இந்திய ரூபாயின் மதிப்பு அமெரிக்க டாலருக்கு எதிராக உயர்ந்து விட்டது என்றாலும், மற்ற உலக நாடுகளின் நாணயங்களுக்கு எதிராக பழைய நிலைமையிலே இருக்கிறது என்பது உண்மை. ஆகவே அமெரிக்க டாலர், இந்திய ரூபாய்க்கு எதிராக மதிப்பில் குறைந்துவிட்டது என்று சொல்வதுதான் சரி! இதனால் என்னென்ன விளைவுகள் ஏற்படும்?

★ அமெரிக்கா செல்லும் இந்தியர்கள் ஒரு டாலருக்கு 4 ரூபாய் குறைவாகக் கொடுத்துப் பயனடையலாம்.

★ அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை மதிப்பு குறைகிறது.

★ நேர்மாறாக, அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் மதிப்பு குறைந்து விடுவதால், ஏற்றுமதியாளர்களுக்கு இலாபம் குறையவோ அல்லது நஷ்டம் ஏற்படவோ வாய்ப்பு அதிகம்.

★ இந்நிலையால் ஏற்றுமதியாளர்கள் மத்திய அரசிடமும், ரிசர்வ் வங்கியிடமும் நிவாரணம் வேண்டி விண்ணப்பிக்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அமெரிக்க டாலர் மதிப்பு ஏன் குறைந்தது?

★ பிரம்மாண்டமான பொருளாதாரத்தைக் கொண்ட அமெரிக்க நாட்டின் உற்பத்தித் தொகையின் மதிப்பு மற்ற நாடு



டாலர்!

–வி.கோபாலன்

களைவிட மிக அதிகம். எனினும், அமெரிக்க மக்கள் பெரும்பாலும் ஜப்பான், சீனா, போன்ற வளரும்/வளர்ந்த நாடுகளின் பொருளாதாரத்தை நம்பியே இருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. காரணம், அமெரிக்க அரசாங்கமும், அமெரிக்கர்களும் செலவழிக்கும் தொகை, அவர்களின் வருமானத்தைவிட (கிரெடிட் கார்டுகள் புண்ணியத்தில்) அதிகம் என்பதே ஆகும்! இந்தச் செயல்பாடும் டாலரின் மதிப்பு குறைந்ததற்கு மிக முக்கிய காரணம் எனலாம். எனினும், இந்தக் காரணங்களினால் அமெரிக்கா திவாலாகுமா எனில், ஆகாது. ஏனெனில் அதன் பொருளாதாரக் கட்டமைப்பு அப்படி!

டாலர் மதிப்புக் குறைவினால் நம் நாட்டுக்கு ஏற்படக்கூடிய தீமையைவிட நன்மையே அதிகம். இறக்குமதி செய்யப்படும் பெட்ரோலியப் பொருட்களுக்கு, நாம் செலுத்தும் இந்திய ரூபாயின் அளவு குறையும். ஆனால், டாலர் வலிமை இழந்ததால் ரூபாய் சற்று மதிப்புக் கூடியதில் நாம் மகிழ்ச்சி கொள்வதில்லை. நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிதான் நமது நாணயத்தின் மதிப்பை நிரந்தரமாக உயர்த்தும். நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி உலகப் பொருளாதாரத்துடன் பிணைந்திருக்கிறது. அதற்கு ஏற்ப நமது பொருளாதாரக் கொள்கைகளை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன், எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623, 2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

சிக்கலில் சிவாஜி

தமிழ்ப் புத்தாண்டுக்கு வெளியாகும் என்று சொல்லப்பட்ட சூப்பர் ஸ்டார் ரஜினியின் சிவாஜி, மே மாதம் 31-ம் தேதி வெளியாகும் என்று பின்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால், ரஜினி ரசிகர்களுக்கு மீண்டும் ஏமாற்றம். இப்போது தியேட்டர் உரிமையாளர்கள் சங்கம் போட்ட தீர்மானம் காரணமாக பட ரிலீஸ் ஜூன் 15-ஆம் தேதிக்குத் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. ரஜினி - ஷங்கர் - ஏவி.எம். கூட்டணியில் மிகப் பெரிய பட்ஜெட்டில் எடுக்கப்பட்டுள்ள சிவாஜி படத்தின் வியாபாரம் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தமிழ்த்திரை உலகமே கிசுகிசுக்கிறது. என்னதான் நடக்கிறது- கோலிவுட்டில்? களத்தில் இறங்கினோம்...

பொதுவாக தமிழகத் திரையரங்குகளில், திரைப்படங்களை வெளியிடுவதில் வாடகைக்கு எடுத்துத் திரையிடுவது, மினிமம் கியாரண்டி, பர்சன்டேஜ் என்று ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. இதுவரை பரவலாக முதல் இரண்டு முறைகள்தான் நடைமுறையில் இருந்து வந்திருக்கின்றன. ஒரு படம் வெளியாகும்போது வினியோகஸ்தரும் தியேட்டர்க்காரரும், தியேட்டருக்கு ஒரு வாரத்துக்கு இவ்வளவு வாடகை என்று பேசி முடிவு செய்து கொள்வார்கள். படம் எத்தனை வாரங்கள் ஓடுகிறதோ, அதற்கேற்ப வசூலிலிருந்து வாடகையைக் கழித்துக் கொண்டு, தியேட்டர்க்காரர் வினியோகஸ்தருக்குப் பணத்தை செட்டில் செய்து விடுவார். மினிமம் கியாரண்டி முறையில், படம் ஓடி கலெக்ஷன் ஆகிறதோ இல்லையோ, வாரத்துக்கு இவ்வளவு தொகை என்று குறைந்த பட்சத் தொகை நிர்ணயிக்கப்பட்டு, அந்தத் தொகை தியேட்டர்க்காரரிடமிருந்து வினியோகஸ்தருக்கு வந்துவிட வேண்டும் என்பது ஒப்பந்தம்!

இந்த மினிமம் கியாரண்டி முறைக்குத்தான் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று போர்க்கொடி பிடிக்கிறார்கள் தியேட்டர் உரிமையாளர்கள். "தயாரிப்பாளர்கள் ஹீரோக்களுக்கும், சில டைரக்டர்களுக்கும் ஏகமாய்ப் பணம் கொடுத்தும், கட்டுப்பாடு இல்லாமல் செலவு செய்தும், படத்தின் பட்ஜெட்டை தாராளமாக உயர்த்தி விடுகிறார்கள். தங்கள் செலவுக்கு ஏற்ப, வினியோகஸ்தர்களிடம் வியாபாரமும் செய்து விடுகிறார்கள். அதிகமான விலை கொடுத்துப் படத்தை வாங்கும் வினியோகஸ்தர்கள், தாங்கள் நஷ்டப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, எங்களிடம் குறைந்த பட்சத்



"சாப்பிட்டா செரிக்கணும். படுத்தா நிம்மதியா தூக்கம் வரணும். எனவே கருப்பு. வெள்ளை என்று இரண்டு கணக்குகள் என்பதே என்னிடம் கிடையாது!"

பிசினஸ்?

-அதிரடி ரிப்போர்ட்



தொகை நிர்ணயிக்கிறார்கள். படம் ஓடாதபோது, நாங்கள் பாதிக்கப்படுகிறோம். உதாரணமாக, சமீபத்தில் வெளியான ஒரு பிரபல இயக்குநரது படத்துக்கு, மதுரை தியேட்டர் ஒன்றில் பத்து லட்ச ரூபாய் குறைந்தபட்சத் தொகை நிர்ணயம் செய்தார் ஒரு விநியோகஸ்தர். ஒரே வாரத்தில் படத்தைத் தூக்கும்படியானது. வசூல் ஒரு லட்சம்தான். அந்த தியேட்டர் உரிமையாளருக்கு ஒன்பது லட்ச ரூபாய் நஷ்டம். வரிசையாக நாலு படம் இப்படி ஆனால் தியேட்டர் உரிமையாளர் என்ன செய்வார்?'' என்கிறார் தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளரான பன்னீர் செல்வம்.

'சிவாஜிக்காகத்தான் இந்த முடிவா?' என்று கேட்டால், ''இல்லை'' என்று மறுக்கிறார் பன்னீர் செல்வம். ''கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகவே மினிமம் கியாரண்டி அடிப்படையில் படங்களை வாங்கி ஓட்டி, தியேட்டர்க்காரர்கள் நஷ்டப்படுவதும் அதிகமாகி வருகிறது. ரஜினியின் பாபா படம் வெளியானபோது, மினிமம் கியாரண்டி அடிப்படையில் எடுத்த எல்லா தியேட்டர்க்காரர்களுக்கும் பெருத்த நஷ்டம். ஆனால், ரஜினி அந்த நஷ்டத்தைத் தானே முன்வந்து ஈடுகட்டினார். இந்த நல்ல குணம் எல்லாருக்கும் இருக்கிறதா? தியேட்டர் உரிமையாளர்கள் நலனைப் பாதுகாக்க வேண்டியே இப்படிப்பட்ட முடிவை எடுக்கும்படி ஆனது. பர்சன்டேஜ் அடிப்படையில் வசூல் ஆகும் தொகையினைப் பிரித்துக் கொள்ளலாம் என்பது தான் எங்கள் தரப்புக் கோரிக்கை'' என்கிறார் அவர்.

அது என்ன பர்சன்டேஜ் முறை? படம் ரிலீஸ் ஆன முதல் வாரம் வினியோகஸ்தர் வசூலில் 65% எடுத்துக்கொள்வார். தியேட்டர்காரர் மீதி 35% எடுத்துக்கொள்வார். அடுத்த வாரம் வினியோகஸ்தர் வசூலில் 60% எடுத்துக்கொள்வார். தியேட்டர்க்காரர் மீதி 40% எடுத்துக்கொள்வார். இது அடுத்த வாரத்தில் 55%, 45% என்று ஆகும். இந்த அடிப்படையில் பிரித்துக் கொள்வதால், இலாபமானாலும், நஷ்டமானாலும் வினியோகஸ்தர்கள், தியேட்டர்க்காரர்கள் இரு தரப்பினரும் பகிர்ந்துகொள்வார்கள். படத்தின் கதாநாயகன், டைரக்டர், தயாரிப்பு கம்பெனி, காமெடியன் என்று பல்வேறு அம்சங்களையும் பொருத்து இந்த விகிதம் சில படங்களில் மாறுபடும்.

"பல வருடங்களாக தியேட்டர் உரிமையாளர்கள் சங்கம் இப்படித்தான் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறது. ஆனால், தியேட்டர் உரிமையாளர்கள் மத்தியில் ஒற்றுமை கிடையாது. அதனால், அவர்கள் எடுத்த முடிவை அவர்களே மீறுவதும் சகஜமாக உள்ளது'' என்கிறார் பிரபல வினியோகஸ்தரான சிந்தாமணி முருகேசன்.

இந்தக் கருத்தை பலமாக மறுக்கிறார் பன்னீர்செல்வம். ''சங்கத்தின் முடிவை எல்லா உறுப்பினர்களும் கடைபிடிப்பதற்குக் கொஞ்ச காலம் பிடிக்கும். எங்களை மீறி மினிமம் கியாரண்டி அடிப்படையில் படங்களைத் திரையிட்டு நஷ்டமடைந்தவர்கள், இப்போது நாங்கள் சொல்வதை ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். இப்போது பல மாவட்டங்களிலும் எங்கள் முடிவுக்கு ஆதரவு பெருகி வருகிறது. இன்னும் சில வருடங்களில் பர்சென்டேஜ் முறை முழுமையாகக் கடைபிடிக்கப்படும்'' என்கிறார் அவர்.

'இந்த முடிவினால் சிவாஜி படம் எந்த வகையிலாவது பாதிக்கப்படுமா? என்றால், ''ரஜினிக்கு இருக்கும் மார்க்கெட் வேல்யூவுக்கு தயாரிப்பாளர், வினியோகஸ்தர், தியேட்டர் உரிமையாளர் யாருக்கும் நஷ்டம் வராது என்பது உறுதி. ஒரு வேளை முன்னே, பின்னே ஆனாலும் அவர்கள் தப்பித்துக் கொள்வார்கள். அப்போது தியேட்டர் உரிமையாளர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைதான் இது!'' என்கிறார் பன்னீர்செல்வம்.

இந்தப் பிரச்னைகள் குறித்தெல்லாம் 'சிவாஜி' படத் தயாரிப்பாளர் ஏவி.எம். சரவணன் என்ன சொல்கிறார்?

''சாப்பிட்டா செரிக்கணும்; படுத்தா



"எல்லா பிரச்னைகளையும் சமாளித்து சிவாஜி வெளியாகி மாபெரும் வெற்றி பெறும் என்பது நிச்சயம்!"

நிம்மதியா தூக்கம் வரணும் என்று நினைக்கிறவன் நான். எனவே கருப்பு, வெள்ளை என்று இரண்டு கணக்குகள் என்பதே என்னிடம் கிடையாது. எல்லாமே வெள்ளைதான். 'ஒரு முப்பது பர்செண்ட்டையாவது பிளாக்குல வாங்கக் கூடாதா?' என்று சிலர் கேட்கிறார்கள். 'ரொக்கமாகப் பணத்தை எடுத்துக்கொண்டு என்னிடம் பிசினஸ் பேச வராதீர்கள்' என்று நான் ஒப்பனாகச் சொல்லிவிடுகிறேன். சிவாஜி பட விற்பனை தாமதமாவதற்கு இதுவும் ஒரு காரணம்!

எந்த ஃபைனான்சியரிடமும் சிவாஜிக்காக நான் கடன் வாங்கவில்லை. நாங்கள் பல வருடங்களாகக் கணக்கு வைத்திருக்கும் ஒரே வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இதுவரை எந்த ஒரு தமிழ்ப் படத்துக்கும் இல்லாத அளவுக்குப் பெரிய தொகையைக் கடனாகக் கொடுத்திருக்கிறது. படம் ரிலீஸ் ஆவதற்கு முன்பாக, ஏரியாக்கள் விற்று வரும் பணத்தை வங்கியில் கட்டியாக வேண்டும். வங்கிக் கடனைத் தவிர, என் நண்பர்கள் பலர் எனக்கு உதவி செய்திருக்கிறார்கள்.

ஒரு பக்கம் படத்தின் விற்பனைக்கான பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னொரு பக்கம் படத்தின் பப்ளிசிட்டிக்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எந்தெந்த தியேட்டர்களில் படத்தை ரிலீஸ் பண்ணுவது என்று விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அது முடிவான பின்னர்தான் எத்தனை பிரிண்ட்டுகள் தேவை என்பது தெரியும்.

என் வாழ்க்கையில் நான் இவ்வளவு டென்ஷனாக இருந்ததே இல்லை. இது போதாதென்று தியேட்டர் உரிமையாளர்களின் திடீர் முடிவினால் எங்களுக்கு வீணாகப் பிரச்னைகள். அவற்றைச் எல்லாம் சமாளித்து, சிவாஜி வெளியாகி மாபெரும் வெற்றி பெறும் என்பது நிச்சயம்.''

- எஸ்.சந்திரமௌலி

"எங்களைக் கடத்தியது விடுதலைப் புலிகள்தான்!"

கடந்த மார்ச் மாதம் ஆறாம் தேதி மீன் பிடிக்கச் சென்றபோது கடத்தப் பட்ட கன்னியாகுமரி கோடிமுனை மீனவர்கள் பதினொரு பேர், கடந்த வாரம் இராமேஸ்வரத்தில் கடத்தப்பட்ட வர்களாலேயே கொண்டு வந்து இறக்கி விடப்பட்டனர். போலீஸ் விசா ரணைக்குப் பிறகு முதல்வரைச் சந் தித்துவிட்டுச் சொந்த ஊருக்குத் திரும் பியவர்களை நாம் சந்தித்தோம்...

''ஏர்வாடி கடல் பகுதியில் மார்ச் ஆறாம் தேதி பகல் பதினொரு மணி அளவில், இரண்டு படகுகளில் வந்த பதினெட்டுப் பேர் எங்களி டம் எல்.டி.டி.இ.க்கு அலுமினியம் கடத் துகிறீர்களா?' என்று கேட்டனர். 'நாங்கள் குமரி மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்கள். நீங்கள் நினைப்பது போல் யாருக்கும் எந்தப் பொருளும் கடத்தவில்லை' என்று சொன்னோம். எங்கள் படகுக்குள் வந்த இலங்கையைச் சார்ந்த ஐந்து பேர், 'எங்கள் பெரிய படகு ஒன்று பழுதடைந்துள்ளது. அதைக் கட்டி இழுக்க நீங்கள் வர வேண்டும்' என்று துப்பாக்கி முனையில் கேட்டு, எங்கள் படகைச் சார்ந்த பதினொரு பேரை இலங்கைப் படகில் ஏறினார்கள். இலங்கையின் இரண்டு படகுகளையும் ஓட்டி வந்தவர்கள் பெண்கள். அவர்கள் யாரும் எவ்விதச் சீருடையும் அணிய வில்லை. சாதாரண உடையில் இருந்தனர். எங்கள் படகின் ஓட்டுநர் சைமனையே படகை ஓட்டச் சொல்லி, இலங்கையைச் சார்ந்த எட்டு பேர் எங்களுடன் வந்தனர்.

நாங்கள் இலங்கைக்குக் கொண்டு செல் லப்பட்டு, ஒரே இடத்தில் முப்பத்தைந்து தினங்கள் தங்க வைக்கப்பட்டோம். எங்களைக் கடத்திச் சென்றவர்கள் அவர் கள் உண்ணும் உணவையே எங்களுக்குத் தந்தனர். இந்த அறுபத்தெட்டு நாட்களில் மொத்தம் பதின்மூன்று இடங்களுக்கு மாற்றினர். திடீரென்று கடந்த பதினெட் டாம் தேதி எங்களை ஒரு வாகனத்தில் ஏற்றி, மூன்றரை மணிநேரப் பயணத்துக்குப் பின் கடற்கரைப் பகுதிக்குக் கொண்டு



* அனீஸ்டன்



கடத்தப்பட்ட மீனவர்கள்

ஜான்ரோஸ்



"இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் எங்கள் மக்களைக் காப்பாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை!"

வந்தனர். அங்கிருந்து இரண்டு ஃபைபர் படகுகளில் கடலுக்கு அழைத்துச் சென்றனர். அது சமயம் இலங்கை இராணுவம் என்று அவர்களால் குறிப்பிடப்பட்டவர்கள், எங்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். எங்களுடன் வந்த இலங்கையைச் சார்ந்தவர்கள் செல்ஃபோனில் பேசி 'நாங்கள்தான் வருகிறோம்' என்றனர். அதன்பின் துப்பாக்கிகள் வெடிக்கவில்லை. பெரிய படகில் எங்களை ஏற்றி விட்டு, 'இவர்கள் உங்களை இராமேஸ்வரத்துக்குக் கொண்டு போய் விட்டுவிடுவார்கள்' என்று சொல்லிச் சென்றுவிட்டனர்'' என்றனர் கடத்தப்பட்ட மீனவர்கள் அனைவரும் ஒரே குரலில்.

"எங்களைக் கடத்தியவர்களில் ஒருவர் மட்டும்தான் தமிழ் பேசினார். அவர்களுக்குள் பேசும்போது வேறு மொழியில் பேசிக் கொண்டனர். எங்களை அவர்களின் ஒரு தேவைக்காகக் கடத்துவதாகவும் நான்கு நாட்களில் விட்டுவிடுவதாகவும் சொன்னார்கள். அதனால் மனத்தில் அவ்வளவாக பயம் ஏற்படவில்லை. ஒரு காட்டுப் பகுதியில் மரங்களிடையே சாக்கைக் கட்டி அதன் அடியில் தங்க வைத்தனர். அந்தப் பகுதியில் யானைகள் மற்றும் விஷப் பாம்புகள் அதிகமாக இருந்தன. 'குறிப்பிட்ட எல்லையைத் தாண்டிச் செல்லாதீர்கள். அங்கெல்லாம் கண்ணி வெடி வைத்திருக்கிறோம்' என எச்சரித்தார்கள். எங்களுக்குப் பாதுகாப்பாக இருந்த இரண்டு அண்ணன்கள் எப்போதும் துப்பாக்கியுடனே இருந்தார்கள். இவர்களெல்லாம் விடுதலைப்புலிகள் என்பதை, அவர்கள் கழுத்தில் இருந்த, 'த.வி.பு.' என்று எழுதப்பட்ட டாலர், சின்ன குப்பி போன்றவற்றைக் கொண்டு அறிந்தோம்'' என்றார் பதினான்கே வய



■ கடத்தப்பட்டவர்கள் மீட்கப்பட்ட மகிழ்ச்சியில் கிராம மக்கள்

“இலங்கை விமானத் தளத்தை வான்வழித் தாக்குதல் நடத்தி பெற்ற வெற்றியை, விடுதலைப் புலிகள் எங்களுக்கு கேக் தந்து மகிழ்ச்சியாகக் கொண்டாடினார்கள்!”

தான அனீஸ்டன்.

“ஒவ்வொரு முறையும் இடம் மாற்றும் போதெல்லாம் இந்த ஒரு முகமூடி மனிதர் வந்து 'உங்களை வேறு இடத்துக்கு அழைத்துச் செல்கிறோம்' என்ற தகவலைச் சொல்வார். நாங்கள் அங்கிருந்த நேரத்தில்தான் விடுதலைப்புலிகள் இலங்கை விமானத் தளத்தை வான்வழித் தாக்குதல் நடத்தி, பெற்ற வெற்றியை எங்களுக்குக் கேக் தந்து மகிழ்ச்சியாகக் கொண்டாடினார்கள். பட்டாசுகள் வெடித்தார்கள். அதேபோன்று மற்றொரு முறை 'இலங்கையிலுள்ள பெட்ரோல் கிடங்குகளையெல்லாம் தாக்கி அழித்து விட்டோம். எங்களிடம் விமானம் இருக்கிறது என்பதை உலகுக்குத் தெரிவித்துவிட்டோம்' என்று மகிழ்ச்சியோடு சொல்லிக் கொண்டிருந்தார்கள். இதேபோன்று 'நீங்கள் ஊருக்குச் சென்ற பின் உங்களை யார் கடத்தினார்கள் என்று கேட்டால், விடுதலைப்புலிகள் கடத்தினார்கள் என்று சொல்லுங்கள்' என்றும் சொன்னார்கள்'' என்றார் கடத்தப்பட்ட கிளமென்ஸ்.

“எங்கள் மீனவர்களைப் பிடித்துக் கொண்டுபோனவர்களே அவர்களைப் பத்திரமாகத் திரும்பக் கொண்டுவந்து விட்டுவிட்டார்கள். எங்கள் மக்களை மீட்க இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இனியாவது தமிழக அரசு, கடலில் ஒரு நிரந்தர ரோந்துப் பாதுகாப்பு படை அமைப்பது, தேவைப்படும்போது கொண்டுவரத் தயாராக ஹெலிகாப்டர் அமைத்துத் தருவது உள்ளிட்டவற்றைச் செய்து தர வேண்டும்'' என்கிறார் கோடிமுனை பங்குத் தந்தை ஜான்ரோஸ்.

- த.இ.தாகூர்

SRI VENKATESHWARAA
MEDICAL COLLEGE HOSPITAL & RESEARCH CENTRE

Pondy-Villupuram Main Road, Ariyur, Puducherry. Ph: 0413 - 2644482 / 2645927.
Email: svmch_pondy@yahoo.com. Website: www.svmcpondy.com

(Approved by Medical Council of India & Ministry of Health & Family Welfare, New Delhi)

MBBS 2007 - 08

Come, join the White revolution



- Ultra Modern 500 bedded Multi Speciality Hospital to be developed to 1000 bedded within 2 years
- Well equipped Diagnostic Laboratories
- Sophisticated operation theatres
- Hi-tech Imaging facilities
- 24 x 7 Emergency Services
- Well stacked library with Internet facilities
- Dedicated team of Faculty members
- Separate Air-conditioned Hostel for boys & girls
- Playground, Recreation and Health Care facilities

Invites Application, in the prescribed form from candidates seeking Admission to MBBS Course in our institution, for writing Common Entrance Test conducted by the Pondicherry Linguistic & Religious Minority Medical and Dental Colleges Welfare Association, Pondicherry, CETPPMC-2007, at our institution on 13.06.2007.

For Application form & other details regarding Entrance Exam please contact our College Office or our Admin Office.

Admin. Office: **Ramachandra Educational Trust:** #31, Jawaharlal Nehru Salai, Vadapalani, Chennai 600 026. ✆ 044 - 23620877 / 2362 2728. Email: br_ret@yahoo.co.in



பாஸ்போர்ட் இன்றைக்கு இன்றியமையாத தேவைகளுள் ஒன்றாகிவிட்டது. சுற்றுலா செல்ல, வேலை வாய்ப்புக்கு, அயல்நாட்டில் தங்கிவிட்ட சொந்தங்களைப் பார்க்க என்று பாஸ்போர்ட்டின் தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. சரி, அதனை எப்படிப் பெறுவது? இதோ வழிமுறைகள்...

● தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, கோயமுத்தூர் ஆகிய இடங்களில் பாஸ்போர்ட் வழங்கும் அலுவலகங்கள் இயங்குகின்றன. இங்கு பாஸ்போர்ட் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்ட தனியார்களால் விற்கப்படுகின்றன. தபால் அலுவலகம், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் (பாஸ்போர்ட் பிரிவு) ஆகிய இடங்களிலும் கிடைக்கும். இவை ஆங்கிலத்தில் மட்டுமே இருக்கின்றன.

● பாஸ்போர்ட் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து, கேட்கப்பட்டுள்ள இடங்களில் புகைப்படங்களை ஒட்டி, கையெழுத்துப் போட்டு அதை இரண்டு காப்பி ஜெராக்ஸ் எடுத்து (ஒரு ஒரிஜினல், இரண்டு ஜெராக்ஸ் காப்பிகள்) அலுவலகத்தில் கொடுக்க வேண்டும். கட்டணம் ஆயிரம் ரூபாய் பணமாகவும் கட்டலாம்; வரைவோலையாகவும் கொடுக்கலாம்.

● பாஸ்போர்ட் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதில் சற்றுக் கவனமாக இருக்க வேண்டும். நீலம் அல்லது கறுப்பு பால் பாயிண்ட் பேனா உபயோகித்துப் பூர்த்தி செய்ய வேண்டும். இங்க் பேனா கூடாது. கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களுக்குள் எழுத்துகளை அடக்க வேண்டும். வார்த்தை முடிந்தபின் ஒரு கட்டம் இடைவெளி விட வேண்டும். கேப்பிட்டல் லெட்டரில் பூர்த்தி செய்ய வேண்டும். இனிஷியலை விரிவுபடுத்தி எழுத வேண்டும். கைநாட்டு வைப்பவர்கள் கட்டங்களுக்குள் வைக்க வேண்டும். பாஸ்போர்ட் அளவு கலர் படம் பயன்படுத்த வேண்டும். கறுப்பு வெள்ளைப் படம் கூடாது.

● பாஸ்போர்ட்டுக்குப்



பாஸ்போர்ட் பெறுவது



பாஸ்போர்ட் விண்ணப்பத்தில் பொய் சொல்லாமல் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்!

புதிதாக விண்ணப்பிப்பவர்கள் அப்ளிகேஷனுடன், தான் வசிக்கும் முகவரியை நிரூபிக்கும் அத்தாட்சி ஒன்றை (நகல்) இணைக்க வேண்டும். அது ரேஷன் கார்டு, டெலிஃபோன் பில், வங்கிக் கணக்குப் புத்தகம், வாக்காளர் அடையாள அட்டை, மின் கட்டண பில் ஆகியவற்றில் ஒன்றாக இருக்கலாம். இது தவிர பிறப்புச் சான்றிதழ் அல்லது அதைத் தெரிவிக்கும் முறையான அத்தாட்சி, அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தால் எதிர்ப்பில்லாச் சான்றிதழ் ஆகியவற்றின் நகல்களையும் இணைக்க வேண்டும்.

- சிறு குழந்தைகளுக்கு (மைனர்) பாஸ்போர்ட் வாங்குவதென்றால் அப்பா, அம்மா யாராவது ஒருவரின் பாஸ்போர்ட் நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

- பாஸ்போர்ட் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து நேரிடையாக பாஸ்போர்ட் அலுவலகத்தில் கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கும்போது நீங்கள் எந்தெந்தச் சான்றிதழ்கள், அத்தாட்சிகள், அடையாள கார்டுகள் ஆகியவற்றின் நகல்களை விண்ணப்பத்துடன் வைக்கிறீர்களோ அவற்றின் ஒரிஜினல்களையும் பரிசோதனைக்காகக் கொண்டு வர வேண்டும். அங்கீகாரக் கடிதம் கொடுத்து, வேறு ஒருவர் மூலமும் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம். மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தின் மூலமும் அனுப்பலாம், தபாலிலும் அனுப்பி விடலாம். தபாலில் அனுப்பும்போது சான்றிதழ்கள் கெசட்டட் அதிகாரியால் 'உண்மை நகல்' என்று கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.



எப்படி?

- சாதாரணமாக பாஸ்போர்ட் வழங்க குறைந்தபட்சம் 45 நாட்கள் ஆகும் சமயத்தில் அது மூன்று மாதங்களாகலாம். இதற்குக் காரணம் போலீஸ் என்கொயரி முடிய வேண்டும். ஆனால், பலர் கையில் விமான டிக்கெட்டோடு, பாஸ்போர்ட் அலுவலகத்தின் கதவைத் தட்டுவார்கள். இவர்களுக்காகவே இருக்கிறது தத்கால் (உடனடி) பாஸ்போர்ட் முறை. இதில் என்ன சிறப்பு என்றால், விண்ணப்பத்துடன் முகவரிச் சான்றிதழை இணைத்து அத்துடன் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை இரண்டின் காப்பியை இணைத்து 2000 ரூபாய் பணம் கொடுத்தால், பதினான்கு நாட்களில் பாஸ்போர்ட் கிடைக்கும். அதுவே மூன்று அடையாள அட்டை காப்பிகளைக் கொடுத்து 2500 ரூபாய் பணம் கட்டினால் ஏழு நாட்களில் கிடைக்கும். அவசரத்துக்கான காரணம் சொல்ல வேண்டியதில்லை. பாஸ்போர்ட் கொடுத்த பிறகு போலீஸ் விசாரணையும் உண்டு.

- பாஸ்போர்ட் விண்ணப்பத்தில் பொய் சொல்லாமல் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். ஏதேனும் பொய் சொல்லி மாட்டிக் கொண்டால் பாஸ்போர்ட் எடுக்கும் வாய்ப்பே உங்கள் வாழ்க்கையில் இல்லாது போகலாம்.

- பாஸ்போர்ட் வழங்குவது தவிர, இ.சி.என்.ஆர். போலீஸ் கிளியரன்ஸ், சர்டிஃபிகேட், பெயர் மாற்றம், முகவரி மாற்றம் என்று பல சேவைகள் குறைந்த கட்டணத்துடன் துரித காலத்தில் செய்து தரப்படுகின்றன.

– கௌசி



கல்கி



2007 ஜூன் 3
சர்வஜித் வைகாசி 20
மலர் : 65
இதழ் : 44

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்றதாயென்று
கும்பிடடி பாப்பா

- பாரதியார்

பயங்கரவாதிகளின் மறைமுக யுத்தம்!


ஹிந்து வழிபாட்டுத் தலங்களைத் தாக்கி வந்த இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புகள் இப்போது மசூதிகளையும் தாக்க ஆரம்பித்துள்ளன. ஹிந்துக்கள் தாக்கியதாகத் தோற்றத்தை ஏற்படுத்தி, ஹிந்து - முஸ்லிம் விரோத உணர்வுகளைத் தூண்டி, இந்தியாவின் முதுகெலும்பை முறிப்பதே இவற்றின் நோக்கம். அரசும் காவல்துறையும் இதை உணர்ந்துள்ளன.

ஆர்க்காடு நவாபும் ஓரிரு இஸ்லாமிய அமைப்புகளும் தவிர, இதர முஸ்லிம் மதத் தலைவர்கள், ஹைதராபாத் மெக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பை வலுவாகக் கண்டனம் செய்யவில்லை என்பது கவனத்துக்குரியது.


இஸ்லாமியர்கள் தங்களை இந்தியர்களாகக் கருதி இந் நாட்டுடன் ஒன்றுவோராயிருந்தால் இந்நேரம் திக்குகள் எட்டிலும் பலத்த எதிர்ப்புக் குரல் எழுந்திருக்க வேண்டும்.

தொடர்ந்து முஸ்லிம் பயங்கரவாதிகள் தாக்கி உயிர்ச் சேதமும் பொருள் சேதமும் விளைவித்து, ஒற்றுமையைக் குலைப்பதை எத்தனைக் காலத்துக்கு நாம் கைகட்டி வேடிக்கை பார்ப்பது?

பயங்கரவாதம் என்பது சுலபத்தில் வெற்றிகொள்ளக்கூடிய விஷயம் அல்ல. அதைப் பூண்டோடு அழிப்பது அதைவிடக் கஷ்டம். ஆனால், கஷ்டமான காரியம் என்பதற்காகச் சும்மா இருந்துவிட முடியாது. நமது மத்திய அரசு திட்டமிட்டுச் சுறுசுறுப்பாக இயங்கவேண்டும். ஒவ்வொரு குண்டு வெடிப்புக்குப் பிறகும் தலைவர்களின் வழக்கமான கண்டனத்தையும் ஒரே மாதிரியான அறிக்கையையும் கேட்டுக் கேட்டு அலுத்துவிட்டது.



பொதுவாகவே நம் நாட்டில் எந்தக் குற்றத்துக்கும் விரைவில் நீதி விசாரணை நடந்து தண்டனை வழங்கப் படுவதில்லை. மும்பை தொடர் குண்டு வெடிப்பு வழக்கின் குற்றவாளிகளுக்கே இன்னும் தண்டனை வழங்கியபாடில்லை என்கிறபோது, மேலும் அதே வகையிலான குற்றங்கள் புரிய துணிவு பிறப்பது இயல்பு.



திட்டமிட்ட அழிவுச் செயல்களுக்கும் கொலைப் பாதகங்களுக்கும் காலந்தாழ்த்தாமல் விசாரணை நடத்தி, வெகு விரைவில் தண்டனை வழங்குவதற்குச் சட்டமும் நீதியும் வழிசெய்ய வேண்டும். நிரபராதிகளைப் பாதுகாக்கும் உயர்நோக்கு, பாதகர்கள் தண்டிக்கப் படுவதற்குக் குறுக்கே நிற்கக் கூடாது.


இஸ்லாமிய பயங்கரவாதம் பாகிஸ்தானின் தூண்டுதலாலும் ஆதரவுடனும் தலை விரித்தாடுவது கண்கூடு. இதனை எதிர்கொள்ள உள்நாட்டுப் பாதுகாப்பு பலம் பெறட்டும். காவல்துறையும் இராணுவமும் இவற்றுடன் உளவுப் பிரிவுகளும் இணைந்து சிந்தித்து இயங் கட்டும். அவசியமானால், அயல்நாட்டுப் புலனாய்வு மற்றும் காவல்துறை அமைப்புகளிட மிருந்து உதவி கோரவும் தயங்கக் கூடாது.

பாதுகாப்புச் சட்டங்களும் கடுமையாக்கப்பட்டுள்ளதை பகிரங்கமாக உணர்த்திவிட்டு, பயங்கரவாதத்தை ஒடுக்கும் திட்டங்களை மட்டும் ரகசியமாகவே வைத்திருந்து செயல்படுத்த வேண்டும்.

அயலுறவுக் கொள்கைகளைத் துணிந்து மாற்றி, பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண்ணான பாகிஸ்தானை அடக்கியாக வேண்டும். அமெரிக்கா, பிரிட்டனின் நம்பிக்கையையும் உதவியையும் பெற்று, அவர்கள் ஆதரவுடன் இதைச் செய்கிறபோது பயங்கரவாதத்தின் கொட்டம் அடங்கும்.

இவையெல்லாவற்றையும் மத்திய அரசு, யுத்தகால அடிப்படையில் செய்ய வேண்டும். ஏனெனில் பயங்கரவாதிகள் நம் மீது தொடுத்துள்ளது மறைமுக யுத்தமே. அதில் அவர்கள் அதிநவீன அழிக்கும் ஆயுதங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். இதைத் தீவிரமாக எதிர்த்து அரசு செயல்படாத போது, அவர்கள் குறுகிய காலத்தில் தங்கள் நோக்கங்களில் வெற்றி அடைய அனுமதித்ததாகிவிடும். பயங்கரவாதத்தை எதிர்த்து அழிக்க, கூடுதலாகச் செலவழிக்கவும் தயங்கக் கூடாது.

எல்லாவற்றுக்கும் மேலாக, பா.ஜ.க.வும் ஹிந்து அடிப்படைவாத அமைப்புகளும் இதை மதப் பிரச்னையாகக் கருதி அரசியல் பண்ணலாகாது. அவ்வாறு செய்தால், அது பயங்கரவாதிகளின் வெற்றியாகிவிடும். எல்லோரும் ஒன்று சேர்ந்து, ‘எதிர்க்கப்பட வேண்டியது இஸ்லாம் அல்ல; பயங்கரவாதம் மட்டுமே’ என்ற தெளிவுடன் இயங்கினால் நிலைமை கட்டுக்குள் வரும். ●




''நான் எடுக்கப்போற சினிமாவுக்கு பெண்கள் கூட்டம் வந்து அலை மோதணும்... ஒரு நல்ல டைட்டில் சொல்லுங்க!''

''ஆனந்தமாய் அரசி போட்ட கோலங் கள்னு படத்துக்கு டைட்டில் வைங்க!''

- ராம் ஆதிநாராயணன்

நீல எம்.ஜி.ஆர். வாழ்க!



''தாமிரபரணி எங்கே ஓடுது?''

''நம்ம ஊர் அபிராமி தியேட் டர்ல சார்!''

- ஆர்.ராஜகோபால்



''ஏன் சார் உங்க மகன், பொண்டாட்டிதாசனா இருக்கான்?''

''என்ன பண்றது? சின்ன வயசு லேர்ந்து அப்பா மாதிரியே வளர்ந் துட்டான்.''

- ஆர்.சுந்தரராஜன்


''நம்ம தலைவர் தவறுதலா நீலச்சாயம் வச்சிருந்த தொட்டியில வழுக்கி விழுந்துட் டாரு.''

''அச்சச்சோ... அப்புறம்?''

''உடனே தொண்டர்கள் 'நீல எம்.ஜி.ஆர். வாழ்க'னு கோஷம்போட ஆரம்பிச்சுட்டாங்க.''

- அஜித்லால்





''என் மனைவி கண்ணில் தூசி பட்டதால் ஐம்பது ரூபாய் செலவு ஆயிடுச்சு.''

''என் மனைவி கண்ணில் புடைவை பட்டதால் எனக்கு ஐந்நூறு ரூபாய் செலவு ஆயிடுச்சு.''

- எம்.சரவணன்

''நீ ஒரு பொண்ணை லவ் பண்ணியே... அவளையே கல்யாணம் பண்ணிக்கிட்டியா? இல்லை இன்னும் அவளையே நெனைச்சுக்கிட்டு கவலையோடு இருக்கியா?''

''ரெண்டும்தான்.''

- எம்.சரவணன்





''உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே. உங்க பேர் என்ன?''

''பார்த்தசாரதிங்க!''

- அ.ராதா

''நல்ல நேரம் முடியறதுக்குள்ளாற பையன் தாலி கட்டிடட்டும்!''

''ஓஹோ... தாலி கட்டியாச்சுன்னா பையனோட நல்ல நேரம் முடிஞ்சிடுமா..!''

- நா.நாகராஜன்



ஓசை



'மணிக்கொடி' புகழ் பி.எஸ்.ராமையா அவர்கள் எழுதிய கதை ஒன்றில், பெண் ஒருத்தி உரிய நேரத்தில் கல்லூரி சென்றடைய, இளைஞன் ஒருவன் தன்னுடைய (மிதி) சைக்கிளில் அவளை ஏற்றிக் கொண்டு போகிறான். இளைஞன் சில அடிகள்கூடப் போயிருக்கமாட்டான், ஒரு போலீஸ்காரர் பிடித்து விடுகிறார்!

(அதாவது கதை எழுதப்பட்ட நாட்களில் சைக்கிளில் ஒருவருக்கு மேல் போவது தண்டனைக்குரியது. எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில்தான் இந்தத் தடை நீக்கப்பட்டது என்று நினைக்கிறேன். முறையான அறிவிப்பு கிடையாது. ஆனால், நடைமுறையில் இரட்டைச் சவாரி அனுமதியுண்டு என்றாகிவிட்டது. அதுமட்டுமல்ல, சைக்கிளுக்கு விளக்கு வேண்டாம். பிரேக் வேண்டாம். மணி வேண்டாம்.)

ஆனால், இந்த நான்குக்கும் ஒவ்வொரு முறை நான் சைதாப்பேட்டை கோர்ட்டுக்கு வரவழைக்கப்பட்டு அபாராதம் விதிக்கப் பட்டிருக்கிறேன். எனக்குச் சாலை விதிகளை மீறுவதில் வீராப்பு ஏதும் கிடையாது. மணி அடிக்கவில்லை என்று அபராதம் செலுத்தியிருக்கக்கூடிய மிகச் சிலரில் என் பெயரும் இருக்கும். என் பெயருடன், என் அப்பாவின் பெயரும் இருக்கும். காவல் துறையினரிடம் எந்தச் சம்பந்தம் ஏற்பட்டாலும் தந்தை பெயரைத் தெரிவித்துவிட வேண்டும். இன்றும் சைதாப்பேட்டை நீதிமன்றத்தின் ஐம்பதாண்டு தஸ்தாவேஜுகளைப் பார்த்தால், என் அப்பாவின் பெயர் பல முறை பதிவு செய்யப்பட்டிருக்கும். ஆனால், ஒரு தடவையாவது சரியாக எழுதப்படவில்லை. அந்த நேரத்தில் அந்தக் காவலருக்கு எது சரியென்று தோன்றியதோ அதை எழுதுவார். என் பெயர்கூட ஒவ்வொரு முறையும் ஒரு மாதிரி.

என் சைக்கிளைப் பிடுங்கி வைத்துக் கொண்டவர், காலை ஆறு மணிக்கு சைதாப்பேட்டை கோர்ட்டுக்கு வரச் சொன்னார். எனக்கு ஆச்சரியமாயிருந்தது. நான்தான் சைக்கிளில் போகிறவன் அதிகாலையிலேயே எழுந்திருக்க வேண்டும். ஆனால், நீதி வழங்குபவர்கள்கூட ஒழுங்காகத் தூங்கக் கூடாதா?

சைதாப்பேட்டை சிவப்புக் கட்டடத்தில் காலை ஆறு மணிக்கு மாடியிலும் கீழும் நல்ல கூட்டமிருந்தது. ஆறு மணிக்கே அந்த இடத்தில் கூடச் செய்ததே எல்லாக் குற்றத்துக்கும் போதுமான தண்டனை என்று தோன்றியது.

நிறையப் பெண்மணிகள் இருந்தார்கள். அவர்களுக்கு வறுமையும் இல்லாமையுமே பெரிய தண்டனை. அதற்கு மேல் சைதாப்பேட்டை கோர்ட்டு என்ன தண்டனை தரவேண்டும்?

என்னைப் பிடித்த போலீஸ்காரரைக் கண்டுபிடித்து அவர் அருகில் சென்றேன். ''நீ என்ன நியூசென்ஸா?'' என்று கேட்டார். எனக்கு அன்று அது புரியவில்லை.

''என்ன?'' என்று கேட்டேன்.

''நடுத்தெருவிலே ஒண்ணுக்கு அடிச்சியாடா?''

''இல்லை. சைக்கிளுக்கு மணி இல்லை.''

''மணியே இல்லையா?''

''மணி இருந்தது. நீங்க அடிச்சப்போ அடிக்கலே. அது அப்பப்போ அப்படிச்



சிக்கிக்கும்.''

''அது என்ன அப்பப்போ?''

''இப்போ அடிச்சுப் பாருங்க, அடிக்கும்.''

''நான் உன்னைப் பிடிச்சப்போ அடிச்சுதா?''

''இல்லே.''

''ஜட்ஜு எது கேட்டாலும் சரி, சரின்னு சொல்லிடு. பேசினே! டபுள் டபுள் ஃபைன் விழும்.''

''இப்போ எவ்வளவு?''

''ஜட்ஜு சொல்லுவாரு.''

அந்தப் பெரிய அறையைப் பார்த்தேன். ஒரு மின்சார விசிறி கிடையாது. விசிறி என்ன, விளக்கே கிடையாது.

யாரோ பெண்மணி மேடையில் உட்கார்ந்து கொண்டார். அன்று பெண் ஜட்ஜு.

யார் யாரைக் கூப்பிடுகிறார்கள் என்றே புரியாது. தடதடவென்று கூண்டுக்குப் போவார்கள். ஜட்ஜு என்ன சொல்கிறார் என்று தெரியாது. கூண்டில் நின்ற ஆளை ஒரு போலீஸ்காரர் கீழே இழுத்துப் போவார்.

இரண்டு பெண்மணிகள் ஒரே சமயத்தில் கூண்டில். அவர்கள் நடுத் தெருவில் சண்டை போட்டுக் கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டு. கைகலப்பு இருந்திருக்காது. பேச்சுதான்! பேச்சே சைதாப்பேட்டை வரையில் அவர்களை இழுத்துப் போய் விட்டது. சண்டை போட்டவர்கள் அந்தச்

அசோகமித்திரன்

படமாகும் வரலாறு!

175 வருடங்களுக்கு முன்பு திருச்செந்தூர் கடலில் தோன்றியவர் வைகுண்டசாமி. இவருக்கு தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான கோயில்கள் உள்ளன. சுமார் எட்டு லட்சம் பக்தர்கள் இருக்கிறார்கள். இவர்களை அய்யா வழி அன்பர்கள் என்று அழைப்பார்கள். நெல்சன்டேவி என்ற பக்தர் முன்மொழிய, அய்யா வழி அன்பர்கள் பலர் கூடி வைகுண்டசாமியின் வரலாற்றை கூறும் திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கிறார்கள். படத்தின் பெயரே 'அய்யாவழி'தான்.

''அம்பேத்கர், பெரியாருக்கு முன்பே சமத்துவத்தை உணர்த்தியவர் வைகுண்டசாமி. பெண்ணின் மார்பகத்துக்கும் ஆணின் மீசைக்கும் வரி கேட்ட தறுதலை மன்னனை தட்டிக் கேட்டு மனிதர்களையும் கடவுளாகக் கண்ட கடவுளின் கதை இது. உலகம் சமன் செய்யப்பட்டு பரிசுத்த ஆன்மாக்கள் இளைப்பாறும் தர்மயுகக் காட்சி படத்தில் இடம் பெறுகிறது. வைகுண்டசாமியாக ராஜா என்ற புதுமுகம் நடிக்கிறார். கதாநாயகனாக சஞ்சய் நடிக்க, அவருக்கு ஜோடியாக சுஜிபாலா நடிக்கிறார். இயக்குநர் மணி பாரதி, தினகரன், எழுத்தாளர் பொன்னீலன் ஆகியோர் கதை ஆய்வுக் குழுவில் இடம் பெற்றிருக்கின்றனர்'' என்கிறார் இப்படத்தின் இயக்குநர் பி.சி.அன்பழகன்.

- அஞ்சலி



* 'அய்யாவழி' படத்திலிருந்து...

சிறு கட்டத்தில் இடித்துப் பிடித்துக் கொண்டு நிற்க வேண்டும். அவர்களையும் 'சரி, சரி என்று சொல்லு' என்று போலீஸ்காரர் சொல்லியிருப்பார். முதலில் சரி என்றுதான் ஓர் அம்மாள் சொன்னாள். அடுத்த அம்மாளுக்குத் தன் கட்சி ஜெயித்து விட்டது என்று தோன்றிவிட்டது. ஜட்ஜு இரண்டு பேருக்கும் மூன்று நாட்கள் சிறைவாசம் கொடுத்து விட்டார்.

எனக்கு, நான் அங்கு சென்ற காரணமே மறந்துவிட்டது. மௌன நாடகத்தைப் பார்ப்பதுபோல வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். நான் சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் போலீஸ்காரர் என்னைக் கூண்டுப் பக்கம் தள்ளினார். தட்டுத்தடுமாறி நான் நின்றேன். அவர் தன் உடுப்பை நன்றாக இழுத்துவிட்டுக் கொண்டு விரைப்பாகக் கூண்டுக்கு வெளியே நின்றார்.

ஜட்ஜம்மா என்னைப் பார்த்தார். காவல் துறைக்காரர் ஏதோ சொன்னார். நான் ஒரு கொலை செய்துவிட்டேன் என்றுகூடச் சொல்லியிருக்கலாம். எனக்கு எதுவுமே சரியாகக் காதில் விழவில்லை. போலீஸ்காரர் என்னைப் பார்த்து, ''சரின்னு சொல்லு'' என்றார்.

''சரி'' என்றேன்.

இன்னும் ஏதோ கேள்வி.

''சொல்லுடா!'' என்று போலீஸ்காரர் என்னைப் பார்த்துச் சீறினார்.

''சரி'' என்றேன்.

ஜட்ஜம்மா புன்னகை செய்துகொண்டே ஏதோ எழுதினார். போலீஸ்காரர் என்னை இறங்கச் சொல்லி இழுத்துப் போனார்.

''என்னாச்சு? சைக்கிள் எங்கே இருக்கு?'' என்று நான் அவரைக் கேட்டேன்.

அவர் என்னைச் சட்டை செய்யாமல் அந்தக் கோர்ட் சிப்பந்தி ஒருவரிடம் போய்ப் பேசினார். பிறகு ஒரு நீண்ட அச்சுப் படிவத்தை எடுத்து வந்தார்.

''எழுதத் தெரியுமா?'' என்று கேட்டார்.

எனக்குப் பயம். எனக்குத் தெரியாதது எதையாவது எழுதச் சொன்னால்?

''இதுலே உன் பேரும் உன் அப்பா பேரும் எழுது. மூணு இடத்திலேயும்.''

அப்போதுதான் அந்தப் படிவம் மூன்று பாகங்களாக இருந்தது தெரிந்தது. நானே எழுதியதால் சரியாக எழுதினேன். இங்கே 'ரூ', 'ரூ'ன்னு இருக்கே?'' என்று கேட்டேன்.

''அதுதான் அபராதம்.''

''எவ்வளவு?''

''அஞ்சு ரூபா.''

நான் வெறும் எண்ணில் எழுதினேன். அந்த போலீஸ்காரர் என் தலையில் ஒரு தட்டுத் தட்டி அதை எழுத்தில் எழுதச் சொன்னார். ஏற்கெனவே நான் அப்பாவின் பெயரை மூன்று முறை எழுதியிருந்தேன். ''இதை எடுத்துண்டு போய்க் கட்டிட்டு வா'' என்று போலீஸ்காரர் சொன்னார்.

''உடனே சைக்கிள் கொடுத்திருவீங்களா?''

''போய்க் கட்டிட்டு வா!''

''எங்கே?''

மீண்டும் என் தலையில் ஒரு தட்டு, ''அங்கே வெராண்டால ஒருத்தர் வாங்கிண்டிருக்கார், பாரு.''

நான் வெராண்டாவுக்குப் போனேன். நல்ல கூட்டம். எல்லாம் நான்கு, ஐந்து ரூபாய் கூட பணம் கட்ட முடியாதவர்கள் சிறை. அவர்கள் வெரண்டா சுவரோரமாக முழங்காலைக் கட்டியபடி உட்கார்ந்திருந்தார்கள். தெருவில் சண்டை போட்ட பெண்மணிகளும் அங்கு அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். சிறையில் இவர்களை ஒரே அறையில் அடைத்து வைப்பார்களா?

நான் அபராதம் கட்டிவிட்டு மீண்டும் போலீஸ்காரரிடம் போனேன். அந்தப் படிவத்தில் இரண்டு ரகங்களை மட்டும் என்னிடம் கொடுத்திருந்தார்கள்.

''உனக்கு பாண்டிபஜார் ஸ்டேஷன் தெரியுமா?''

''என்னைப் பழைய மாம்பலம் ரயில் கேட்டாண்டேதானே பிடிச்சீங்க?''

''உன் சைக்கிள் வேணும்னா பாண்டி பஜார் போ.''

எனக்கு அந்த ஸ்டேஷன் தெரியாது. ஆனாலும், ''சரி'' என்றேன்.

''இனிமே எப்போ போலீஸ் பிடிச்சாலும் சரி, சரின்னு சொல்லு.''

''சரி.''

''போ.''

''ஒரு விஷயம்.''

''என்னடாது?''

''ஏன் இவ்வளவு காலையிலே இங்கே?''

''வெயில் வந்தா உக்கார முடியாது. அதுதான்.''

அந்த ஜட்ஜம்மாவுக்கு விளக்கும் கிடையாது. விசிறியும் கிடையாது. சம்பளம் கூடக் கிடையாது என்றுதான் சொன்னார்கள். அவர்களுக்குப் பெயரே கௌரவ மாஜிஸ்டிரேட்கள்.

பாண்டிபஜாரில் டஜன் கணக்கில் குவிக்கப்பட்டிருந்த சைக்கிள்களிலிருந்து என்னுடையதை மிகவும் சிரமப்பட்டுத்தான் எடுத்துக் கொண்டேன்.

இப்போது அதில் மணி சரியாக அடித்தது!

''நீங்க இன்பேஷண்ட்டா? அவுட் பேஷண்ட்டா?''

''டவுட் பேஷண்ட் டாக்டர். பிழைப்பேனா இல்லையான்னு ஒரே டவுட்டா இருக்கு!''

- பம்மல் நாகராஜன்





காதல் நந்தவனம்



இது கருத்துக் கணிப்பு சீஸன். போன வாரம் மெரீனா, பெசன்ட் நகர், சிறுவர் பூங்கா பக்கம் ஒரு ரவுண்ட் அடிச்சு, நான் காதல் சம்பந்தப்பட்ட சர்வே எடுத்தேன். அதை முதல்ல உங்கள் பார்வைக்கு வைக்கறேன்.

காதலர்கள் அதிகம் விரும்பிச் சாப்பிடுவது எது?

- 72% கடனுக்கு வாங்கிய சுண்டல்
- 13% காசுக்கு வாங்கிய சுண்டல்
- 6% ஐஸ்க்ரீம்
- 3% பஜ்ஜி,போண்டா
- 5% ஒண்ணுமில்லே, வெறும் கடலை போடறதுதான்
- 1% கருத்து இல்லை

காதலர்களுக்கு அதிகம் வில்லனாக இருப்பது யார்?

- 48% காதலியின் அப்பா, அம்மா
- 32% காதலனின் அப்பா, அம்மா
- 10% கூடவே இருக்கும் நண்பன் (சான்ஸ் கிடைச்சா இவன் காதலனாயிடறான்)
- 10% கருத்து இல்லை

(பின் குறிப்பு : சர்வேயின் உண்மைத்தன்மைக்கோ, அதனால் ஏற்படும் பக்க விளைவுகளுக்கோ நான் பொறுப்பல்ல.)

இந்த வாரம் காதல் நந்தவனத்தை அலங்கரிக்கும் ஜோடி ஐஸ்வர்யா - கீர்த்திரெட்டி. போட்டோவை அனுப்பியர் ஐஸ்வர்யாவின் தாய் எஸ்.ஜானகி.

''காதலுக்கு 'ஜே' போடுவது சந்தோஷமாயுள்ளது. காதல் திருமணம் இரு வீட்டாருடைய மனப்பூர்வமான சம்மதத்துடன் நிகழ்கையில்தான் நந்தவனமாக இருக்க முடியும். அப்படி நந்தவனமாக வாழ்வை அமைத்துக் கொண்டவர்கள் என் மகள் ஐஸ்வர்யா - மருமகன் கீர்த்திரெட்டி. இருவரும் தற்போது யு.கே.யில் உள்ளனர். அவர்களை கல்கியின் காதல் நந்தவனத்தில் அறிமுகப்படுத்துவதில்



பெருமைப்படுகிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

(காதல் திருமணத்தை அங்கீகரித்த ஜானகி அம்மாளுக்கு எல்லோருமா சேர்ந்து 'ஓ' போடுங்க. அப்புறம் ஒரு வேண்டுகோள்: ஜோடி போட்டோவை அனுப்பும்போது, கல்யாண போட்டோவை அனுப்பாம கேஷுவலா இருக்கிற ஃபோட்டோவை அனுப்பினா நல்லது.)

காதலை விட்டுக் கொடுக்கலாமா?

- இந்தக் கேள்விக்கு வந்த பதில்களில் எனக்கு கவையா பட்ட பதில்...

கிரிக்கெட் வீரர்கள் விளம்பரங்களில் நடிப்பதை விட்டுக் கொடுத்தால், போலீஸ்காரர்கள் மாமூல் வாங்குவதை விட்டுக் கொடுத்தால், அரசியல்வாதிகள் ஊழல் செய்வதை விட்டுக் கொடுத்தால், கர்நாடகா காவிரி நீரை தமிழகத்துக்கு விட்டுக் கொடுத்தால் காதலையும் விட்டுக் கொடுக்கலாம்!

-கே.ஜி.எஸ்.,
கிருஷ்ணாபுரம்

என்கிட்டே ஒரு நல்ல பழக்கம் இருக்குங்க. வேலை இல்லாத நேரத்துல அடுத்தவங்க டேபிள்ல என்ன இருக்குன்னு நோட்டம் போடுவேன். 'அப்படி நோட்டம் விட்டு 'நீங்கள் கேட்டவை' 'கிரேஸியைக் கேளுங்கள்' பகுதிக்கு வந்த கடிதங்களைச் 'சுட்டு' இங்கே கொண்டு வந்திருக்கேன். படிச்சுப் பாருங்க. முதல்ல தராசு...

காதல், பைத்தியம் இரண்டுக்கும் தொடர்புண்டா?

- வசீகரன், சென்னை - 18

உண்டு! உண்டு! காதலர்கள் பிறருக்குப் பைத்தியமாகத் தெரிவார்கள். காதலர்களுக்கோ தங்களுக்கு அப்பாற்பட்ட பிற விஷயங்கள் எல்லாமே பைத்தியக்காரத்தனமாகத் தோன்றும்.

காதலிக்கும் வயதில் படிக்கலாமா? சாரி கிரேஸி சார், படிக்கும் வயதில் காதலிக் கலாமா?

- அ.அப்துல் மஜீத்
பூலாங்குடியிருப்பு

வாசகர்களே... இந்தக் கேள்வியில 'கிரேஸி'ங்கற இடத்துல உங்க பேரை நினைச்சுக்கிட்டு அசத்தலா ஒரு பதிலைச் சொல்லுங்க. சிறந்த பதிலுக்குப் பரிசுண்டு!

*** ஐஸ்வர்யா - கீர்த்தி ரெட்டி**





வயிற்றுக்குள்

கங்கா

மிக்ஸி, மொபைல், டி.வி என்று எதை வாங்கினாலும் கியாரண்டி தருகிறார்கள். குறைந்தது, ஒரு வருடத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்காவது. மருத்துவமனையிலும் இதே முறையைக் கொண்டு வந்தால் என்ன? பென்ஸில்வேனியாவில் உள்ள Geisinger Health System என்னும் அமைப்பு திடீரென்று இப்படி யோசித்தது. ஆனால், எப்படிச் செயல்படுத்துவது?

தலைவலி, வயிற்றுவலி, காய்ச்சலுக்கு மருந்து மாத்திரை தருகிறோம். குறைந்தது இன்னும் ஒரு மாதத்துக்கு உங்களுக்கு மீண்டும் பிரச்னை வராது. வந்தால் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். இப்படித் தைரியமாக சொல்ல முடியுமா? முடியாது. எலும்பு முறிவுக்குச் சிகிச்சை அளித்துவிட்டு, ஆறு மாதங்கள் கியாரண்டி தர முடியாது. இறுதியில், மூன்று மாதங்கள் என முடிவு செய்து அறிவிப்பு வெளியிட்டார்கள்.

மொத்தமாக ஒரு தொகையை வசூலித்துவிடுவார்கள். அதன் பிறகு, 90 நாட்களுக்கு கியாரண்டி. எந்தச் சங்கடமாக இருந்தாலும் நயா பைசா வாங்கிக்கொள்ளாமல் பூரணமான சிகிச்சை அளிக்கப்படும்.

பைபாஸ் சர்ஜரியில் ஆரம்பித்தார்கள். சிகிச்சை பெறுபவர்கள் உற்சாகத்துடன் ஒத்துழைத்தார்கள். பொதுவாக, அறுவை சிகிச்சை முடிந்ததும் சம்பந்தப்பட்டவர்கள் சில தினங்களுக்காவது மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டியிருக்கும். ஆனால், கியாரண்டி இருக்கும் தைரியத்தில் அவர்கள் எழுந்து சட்டையை மாட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டார்கள்.

இந்தச் சிகிச்சை முறைக்கு Provencare என்று பெயர் வைத்திருக்கிறார்கள். சிகிச்சை முடிந்தும்கூட திரும்பத் திரும்ப செலவு செய்ய வேண்டியதில்லை. தவிரவும், மற்றொரு பெரிய ஆபத்திலிருந்து தப்பிக்கலாம்.

அமெரிக்காவில் இன்ஷூரன்ஸ் மிகவும் பிரபலம். குழந்தை தவழ ஆரம்பிக்கும்போதே, ப்ரீமியம் எடுத்துவிடுவார்கள். 'ங்கா' சொல்வதற்காக, அந்தக் குழந்தை வாயைத் திறப்பதற்குள் இரண்டு மாத தவணைகள் செலுத்தியிருப்பார்கள். மருத்துவமனைக்குச் செல்ல நேர்ந்தால், அனைத்துச் செலவுகளையும் அவர்கள் கவனித்துக்கொள்வார்கள்.

விஷயம் இதுதான். எப்படியும் இன்ஷூரன்ஸ் அதிகாரிகள் பணத்தைச்

செலுத்திவிடுவார்கள் என்ற தைரியத்தில் சில மருத்துவர்கள் (சில அல்ல பல என்கிறார்கள்) மிகவும் அசட்டையுடன் இருப்பது தெரிவந்துள்ளது.

ஆன்டிபயாடிக் தராமல் விட்டுவிடுவார்கள். எந்த கலர் மாத்திரையை எப்போது விழுங்க வேண்டும் என்று சொல்வதில்லை. சாப்பாட்டுக்கு முன்பா, பின்பா? அல்லது அதுவேதான் சாப்பாடா? கூல்டிரிங்ஸ் சாப்பிடலாமா, மாங்காய் ஊறுகாய் சேர்த்துக்கொள்ள விடலாம். அமெரிக்காவில் பாதி பேருக்குப் பரிபூரணமான சிகிச்சை கிடைப்பதில்லை. மிச்சம் சொச்சம் வைத்துத்தான் அனுப்புகிறார்கள்.

இனி, அந்தப் பிரச்னை இருக்காது என்கிறார்கள் கெய்ஸிங்கர் அமைப்பினர். சம்பந்தப்பட்ட சர்ஜன் முழு பொறுப்புடன், முழு விழிப்புடன் செயல்பட வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் அவர் சட்டையைப் பிடித்துக் கேட்பார்கள். பொறுப்பு கூடி

கத்திரிக்கோல்!



லாமா என்று சொல்வதில்லை. தையல் போட்டு முடித்ததும், கையுறையைக் கழற்றிக் கடாசி விட்டுப் போயே போய் விடுகிறார்கள்.

இதற்கு பிறகு, சம்பந்தப்பட்ட சர்ஜன் காற்றில் கலந்து காணாமல் போய்விடுவார். ஃபோன் செய்தால் மீட்டிங் என்பார்கள்; சர்ஜரி என்பார்கள்.

சரி, ஏதாவது பிரச்னை வந்தால்? வரட்டுமே. சாய்ந்த படுக்கையில் படுக்க வைத்து, உருட்டிக்கொண்டு உள்ளே தள்ளிவிடலாம். இன்னொரு பில் தீட்டி விடும். தப்பு செய்தால் நம்மைதானே கேட்பார்கள் என்ற பயம் இருக்கும். அப்புறம் எடுத்துக்கொள்ளலாம் என்று வயிற்றுக்குள் கத்திரிக்கோல், பிச்சுவா எதையும் வைக்க முடியாது.

'ம்ஹூம்... இதெல்லாம் சரிப்பட்டு வராது' என்று சில மருத்துவமனை அதிகாரிகள் தலையை அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் ஆட்டிக் கொண்டிருக்கிறார்கள். எதைப் பற்றியும் அலட்டிக் கொள்ளாமல் புதிய பரிசோதனைகளில் இறங்கியிருக்கிறது கெய்ஸிங்கர். ●



* முஷாரஃப்

பாகிஸ்தானின் பரம்பொருள் பர்வேஸ் முஷாரஃப். அவரைத் தாண்டி இன்னொரு பெயர் வெளிச்சத்துக்கு வராது. உள்துறை அமைச்சர், தகவல் தொழில்நுட்ப அமைச்சர், எதிர்கட்சித் தலைவர் என்று எந்தவொரு அரசியல் ஆத்மாவைப் பற்றியும் துண்டுச் செய்திகூட அங்கே பிரசுரமாகாது. விடமாட்டார்கள். மீறி, வெளியில் தெரிந்து விட்டால் பிரச்னை, கைகலப்பு, வன்முறை.

பாகிஸ்தானின் தலைமை நீதிபதி இதிகார் சவுத்தியின் விஷயத்திலும் அதுதான் நடந்திருக்கிறது. கேஸ் ஃபைல், சுத்தியல், நீதி தேவதை என்று அடங்கி இருந்தால் எந்தப் பிரச்னையும் இல்லை. ஆனால், சவுத்தி மக்களிடம் பிரபலமாக ஆரம்பித்து விட்டார். வெளியில் வந்தால் அவரைப் பார்த்துக் கையசைக்க தெருவுக்கு நான்கு பேர் என கூட ஆரம்பித்தார்கள். தப்பு தானே?

இத்தனைக்கும், முஷாரஃப் அட்சதை தூவியதால் தலைமை நீதிபதி பதவியில் அமர்ந்தவர் சவுத்தி. பிடிக்கும்வரை வைத்துக்கொண்டார். பிறகு, ஒரு நல்ல நாளாகப் பார்த்து சவுத்தியை அழைத்து, சரி போதும் கிளம்பு என்று சொல்லி அனுப்பிவிட்டார் முஷாரஃப். ஏன் எதற்கு என்றெல்லாம் அநாவசியமாக விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கவில்லை அவர்.

ஆனால், சவுத்திக்கு விளக்கம் தேவைப்பட்டது. நான் என்ன தவறு செய்தேன்? எதற்காக இந்தப் பதவி நீக்கம்? தலைமை நீதிபதி என்றால் சும்மாவா? ஒரு மரியாதை வேண்டாமா? மதிப்பு வேண்டாமா? அதிபர் என்பதற்காக இப்படியா அராஜகம் செய்வது?

சவுத்திக்கு நிறைய நண்பர்களும் ஆதரவாளர்களும் உண்டு. 'தலைவா' என்று முஷ்டியை உயர்த்தும் தொண்டர்களும் உண்டு. சவுத்தி பதவி நீக்கம் செய்யப்பட்ட அடுத்த கணமே, ஒன்றுகூடி போர்க் கொடி தூக்கிவிட்டார்கள் அவர்கள்.

மே முதல் வாரம். லாகூர் உயர்நீதி மன்றம் வரை போக வேண்டிய வேலை இருந்தது முஷாரஃப்புக்கு. காரில் ஏறிப் புறப்பட்டார். கொஞ்ச தூரத்துக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. வெண்ணெய் போல் வழுக்கிக்கொண்டு ஓடியது அந்தக் கார். ஒரு மணி நேரம் கடந்திருக்கும். எங்கிருந்து வந்தார்கள் என்று தெரியவில்லை. அப்படி ஒரு கூட்டம். எதற்காக காரை மறிக்கிறார்கள்? யோசித்துக்






என்ன நடக்கிறது பாகிஸ்தானில்?

கொண்டிருக்கும்போதே, கூடையிலிருந்து ரோஜா இதழ்களை எடுத்து காரின் மீது தூவினார்கள் சிலர். அந்த டிரைவர் மிரண்டு விட்டார். குண்டு ஏதாவது வீசுகிறார்களா? சிறிது நேரத்தில் மேளச் சத்தம் கேட்க ஆரம்பித்தது. முன்னால் போக முடியவில்லை. காருக்குப் பின்னாலும் கூட்டம். எந்தப் பக்கம் திரும்பினாலும் மனிதத் தலைகள். பல மணி நேரம் ஆகியும் வண்டி நகரவில்லை. போதாது? கார் கண்ணாடியைச் சற்றுக் கீழே இறக்கியதும்தான் அவர்கள் போடும் கோஷம் காதில் கேட்டது. 'முஷாரஃப் ஒரு நாய்' முகம் சிவந்து போனது முஷரஃபுக்கு. என்ன திமிர்! என்ன அடாவடித்தனம்! ஓர் அதிபரை இத்தனை இளக்காரமாகத் திட்டும் அளவுக்கு இவர்களுக்கு யார் தைரியம் கொடுத்தது? நசுக்கிவிடவேண்டாமா? கண்களைக் குறுக்கியபடி ஒரு பதாகையை ஏறிட்டுப் பார்த்தார். 'இதிகார் சவுத்திரியை பதவி நீக்கம் செய்ததைக் கண்டிக்கிறோம்.'

ஓஹோ! இத்தனைக்கும் காரணம் அந்த நீதிமானா? அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று முஷாரஃபுக்குத் தெரிந்துவிட்டது. யாரங்கே? கூப்பிடுங்கள் எம்.க்யூ.எம் ஆட்களை. தீ பரவட்டும் உடனே.

எம்.க்யூ.எம். என்றால் Mohajir Quami Movement. மொஹஜிர் என்பவர்கள் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குள் குடிபெயர்ந்த முஸ்லிம்கள். 1947 பிரிவினையின்போது, இந்தியாவிலிருந்து பல ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்தார்கள். குறிப்பாக, கராச்சிக்கு. அப்போதே முடிவு செய்துவிட்டார்கள் அவர்கள். இனி, பாகிஸ்தான் எங்கள் தேசம். வேறு யாரும் இங்கே





இனி உரிமை கொண்டாடக் கூடாது.

ஆனால், முழுக்க முழுக்க மொஹஜீர்கள் மட்டுமே கொண்ட தேசமாக இல்லை பாகிஸ்தான். இந்துக்கள், பஷ்டுன்கள், பலுசிஸ்தானியர்கள் என்று பல்வேறு இன மக்கள் படர்ந்து பரவியிருந்தனர். இத்தனை பேர் இருப்பது ஆபத்து அல்லவா? 1980-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மொஹஜீர்கள் முதல் முறையாக உட்கார்ந்து பேசினார்கள். இப்படி கண்டவர்களும் உள்ளே நுழைந்தால், நம் கதி என்னத்துக்கு ஆகும்? பாகிஸ்தான் என்பது மொஹஜீர்களின் புண்ணிய பிரதேசம் அல்லவா?

மோதல்கள் வெடிக்க ஆரம்பித்தன. தனித்தனியே பிரிந்து சண்டைப் போட ஆரம்பித்தார்கள். கராச்சி பற்றி எரிந்தது.

அப்போது தோன்றிய அமைப்பு எம்.க்யூ.எம். ரிப்பன் வெட்டி தோற்றுவித்தவர் அல்டாஃப் உசைன். இது நடந்தது 1986-ல். அன்று தொடங்கிய இனக்குழு மோதல். இன்று வரை நீடிக்கிறது.



காலப்போக்கில் ஏகப்பட்ட செல்வாக்கை சம்பாதித்துக்கொண்டு விட்டது எம்.க்யூ.எம். 'வா' என்று அழைத்தால், 'வருகிறேன் தலைவா' என்று ஓடிவர ஒரு லட்சம் பேர் கராச்சியில் மட்டும். கொடி கட்ட, கட் அவுட் வைக்க, கைகலப்பு செய்ய தனியொரு கூட்டம். தவிரவும், முஷாரஃப் ஆட்சிக்கு வந்ததும், எம்.க்யூ.எம் ஆட்கள் அரசியலிலும் நுழைந்துவிட்டார்கள்.

சரி, சவுத்தியால் பிரச்னை என்றதும் முஷாரஃப் ஏன் எம்.க்யூ.எம்.ஐ அழைக்க வேண்டும்? காரணம் முஷாரஃப்பும் ஒரு மொஹஜீர்தான்.

மே 12. சவுத்தி கராச்சிக்கு வருவதாக இருந்தது. எம்.க்யூ.எம். தயாரானது. எல்லோருக்கும் தெளிவான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. 'கராச்சியின் மூலை முடுக்குகளில் எல்லாம் காற்று போல் பரவுங்கள். சவுத்திக்கு ஆதரவாக யார் கோஷம் போட்டாலும் சரி, தலை மட்டும் தனியாக உருள வேண்டும்.'

கராச்சி விமான நிலையத்தைச் சுற்றிலும் ஆட்கள் பரவினார்கள். கம்பு, உருட்டுக் கட்டை, துப்பாக்கி என்று அவரவர் சக்திக்கு ஏற்ப வகை வகையான ஆயுதங்கள். சவுத்தி கராச்சியில் கால் பதித்த மறுகணமே துப்பாக்கிகள் வெடிக்க ஆரம்பித்தன. சவுத்தியின் ஆட்கள் ஏற்கெனவே கராச்சியில் திரண்டிருந்தனர்.

கராச்சி பற்றி எரிய ஆரம்பித்தது. யார் எம்.க்யூ.எம்., யார் சவுத்தியின் ஆள் என்று அடையாளம் காண முடியவில்லை. இடையில் சிக்கிக்கொண்ட மக்கள் அவிழ்ந்த நெல்லிக்காய் மூட்டையைப் போல் திசைக்கொருவராகச் சிதறினார்கள்.

கூச்சல், குழப்பம், மரண ஓலம். கண் மூடித் திறப்பதற்குள் வீதிகளில் நாற்பது உடல்கள். சவுத்திக்கு ஒன்றும் ஆகவில்லை. இன்னொரு விஷயம். இத்தனை களேபரம் நடந்து கொண்டிருந்தபோதும், ஒரு காவல் துறை ஆசாமிகூட அந்தப் பகுதியை எட்டிப் பார்க்கவில்லை.

வரும் நவம்பர் 15-ம் தேதியோடு முஷாரஃபின் ஆட்சிக்காலம் நிறைவடைகிறது. முற்றிற்று என்று சொல்ல முஷாரஃபுக்குத் துளியும் விருப்பமில்லை. அரசியலமைப்பை மாற்றியமைக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார். ●

வாட்டம் தீர்க்கப் போகிறவர்!




சிவாஜி நாயகி ஸ்ரேயாவின் கால்ஷீட்டுக்கு அடித்துக்கொள்ளும் தமிழ்த் திரையுலகம்போல வாட் மோர் என்கிற பங்களாதேஷ் பயிற்சியாளரைக் கவர்ந்து செல்ல இந்தியா, பாகிஸ்தான் அணிகள் பகடை உருட்டி ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கின்றன.


நடந்து முடிந்த உலகக் கோப்பை ஆட்டங்களில் இந்தியா, தென் ஆப்பிரிக்கா அணிகளைச் சிறிய நாடான பங்களாதேஷ் தோற் கடித்தவுடன் எல்லோர் பார்வையும் வாட்மோர் பக்கம் திரும்பியது. திறமையானவர். நம்பகமானவர். உழைப்பதற்குத் தயங்காதவர். பங்களாதேஷ் என்கிற களிமண் ணைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு, மண்பாண்டம் செய் தவர் என இவர்மீது மற்ற அணிகள் காதல்கொள்ள ஆயிரம் காரணங்கள் இருந்தன.

உலகக் கோப்பை போட்டி பாதி நடந்து கொண்டிருக்கும்போது இந் தியாவும் பாகிஸ்தானும் வாட்மோ ருக்குத் தூது அனுப்பின. முதலில் பாகிஸ்தான் துண்டு போட்டது. ஆனால், பாகிஸ்தானின் முன் பதிவை ஆரம்பம் முதலே வெயிட்டிங் லிஸ்ட்டில் வைத்திருந்தார் வாட் மோர்.

பேய், பிசாசுகளைவிட பீதி விளைவிக்கும் மனிதர்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் உள்ளனர். இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகிகள் பேச வந்தாலும் பிடி கொடுக்காமல் பேசினார் வாட்மோர். ஆனால், அவர் விருப்பம் இந்தியா. மிக அற்பமான இழப்புகளுக்கு உலகமே அஸ்தமித்ததுபோல் நடந்துகொள்கிறவர்கள் இந் தியர்கள். எனினும் டெண்டுல்கர், டிராவிட், கங்கூலி போன்ற நட்சத்திரங்கள் இங்கு உண்டு. யாருக்குத்தான் நட்சத்திரங்களைப் பிடிக்காது?

தொண்ணூற்று ஆறு உலகக் கோப்பையை ஸ்ரீலங்கா தட்டிச் செல்ல சூத்ரதாரியாக இருந் தவர் வாட்மோர். அதன்பின்பு நான்கு வருடங்கள் பங்களாதேஷ் அணிக்குப் பயிற்சியாளர். கையில் ஏந்திக்கொண்டபோது குழந்தையாக இருந்த பங்களாதேஷுக்கு களைப்பாறாமல் நடைபழகக் கற்றுக்கொடுத்தார். கூடவே வெற்றி என்கிற ருசியையும் பழக்கப்படுத்தினார். ஒருநாள் போட்டிகளில் ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா அணிகளுக்கு ஒரு முறை மின்சார அதிர்ச்சி கொடுத்





தது பங்களாதேஷ் அணி (இந்தியாவுக்கு இருமுறை). ஒரு டெஸ்ட் மேட்சில் மயிரிழையில் தோற்க இருந்தது ஆஸ்திரேலிய அணி. நிறைய இள ரத்தங்களை உள்ளே கொண்டு வந்தார். பலனாக, இன்றைய பங்களாதேஷ் வீரர்களின் சராசரி வயது இருபத்தி மூன்று.

ஆட்ட அனுபவங்களோடு நேரடித் தொடர்பு ஏற்படுத்தாத எந்த உத்திகளையும் இவர் கற்றுத் தருவதில்லை. வீடியோ கிளிப்பிங்ஸ், லேப்டாப், ஸ்லைட் ப்ரசண்டேஷன் ஆகிய நவீன உத்திகள் இவருக்கு அலர்ஜி. 'மைதானத்தில் என்னை இறக்கிவிடுங்கள். வித்தை காட்டுகிறேன்' என்று தன்னை நச்சரிப்பவர்களிடம் சொல்லிவிடுவார். டீம் மீட்டிங்குகளில் அடுத்தவர்களைப் பேசவிட்டு வேடிக்கை பார்ப்பார். வீரர்களை சகஜமாக வைக்க ஒவ்வொருவரிடமும் ஏதாவது பேசிக் கொண்டிருப்பார். பயிற்சியாளர் என்பவர் காதையும் கூர்மையாகப் பயன்படுத்த வேண்டும் என்கிற இலக்கணம் அறிந்தவர். பணம் கொழிக்கும் கிரிக்கெட் உலகில் தன் திறமைகளை காசாக்கத் தெரியாதவர் என்கிற நல்ல பெயர் இவருக்கு உண்டு. பொதுவாக கிரிக்கெட் போர்டுகள் கோச்சுகளுடைய காலரைப் பிடித்து உலுக்காத குறையாகச் சண்டை போடும் வல்லமை உடையவை. ஆனால், வாட்மோர் கலகங்களுக்கு அப்பாற்றப்பட்டவர். அகிம்சைதான் இவரது பாலிசி.

ஓர் ஆட்டக்காரராக வாட்மோர் ஒரு துரும்பைக்கூட கிள்ளிப்போடவில்லை என்பது ஆச்சர்யமூட்டும் செய்தி. ஏழு டெஸ்ட்டுகள் ஆடி முந்நூறுக்கும் குறைவான ரன்கள் எடுத்திருக்கிறார். ஒரே ஒரு ஒரு நாள் போட்டியில் இரண்டு ரன்கள். ஆனால், எண்ணி இரண்டு அணிகளுக்கு மட்டும் பயிற்சியாளராக இருந்தவர் அதற்குள் எத்தகைய சிகரங்களை எட்டினார்!

பங்களாதேஷ் அணியைக் கைகழுவுவதால் இவர்மீது சமயம் பார்த்துக் குற்றம் சொல்கிறது பங்களாதேஷ் கிரிக்கெட் வாரியம். 'இவர் ஆஸ்திரேலியன் வழியில் கோச்சிங் கொடுப்பவர். ஏதாவது விளக்கம் கேட்டால் வாயைத் திறக்க மாட்டார்' என்கிறார் பங்களாதேஷ் கிரிக்கெட் போர்டு தலைவர். 'என்னை சந்தோஷமாக வழியனுப்புங்கள்' என்று சொல்லியிருக்கிறார் வாட்மோர்.

பி.சி.சி.ஐ.யின் எதிர்பார்ப்புகளுக்கு ஊட்டம் கொடுக்கின்றன வாட்மோரின் சாதனைகள்.

சமீபகாலத் தோல்விகளால் கண்ணீர் வற்றிப்போன கண்கள், இப்போது வாட்மோரைக் கண்டவுடன் ஆனந்தக் கண்ணீரை ஊற்றெடுத்துப் பெருக்குகின்றன. தன் கண்ணுக்குத் தெரியும் துன்பங்களை வாட்மோரால் களைந்துவிட முடியும். ஆனால், இந்திய அணியில் கண்ணுக்கும் கற்பனைக்கும் எட்டாத தளங்களிலிருந்து சிக்கல்கள் வருவது சகஜம். என்னச் செய்யப்போகிறார் வாட்மோர்?

- ச.ந.கண்ணன்



● வாட்மோர்

பனை

அம்மாவின் ஒடிசலை
உன் மெலிந்த தேகத்திலும்
பற்களை
மட்டையிலும்
அவள் அன்பை
இள நுங்கிலும் வைத்திருக்கிறாய்
கனிவை பழத்திலும்
செம்பட்டை முடியை
உச்சியிலும் உறுதியை
வைரத்திலும் வைத்திருக்கிறாய்

ஏர் முடிந்து
கூழ் அருந்திய வேளைகளில்
உன் ஓலையே
அம்மாவின் கைகளாக
மழைக் காலங்களில்
முந்தானையாக

மேலாக
அம்மாவைப் போலவே கறுத்திருக்கிறாய்
வறட்சியிலும்
உயிர்த்திருக்கிறாய்
எல்லாவற்றிலும் அம்மாவாக இருக்கிறாய்

கருக்கும் கறுப்புமற்ற
வெண் பனைகளை வாசலில் வளர்க்கிறேன்
கவனிப்பின்றிக் கிடக்கிறாய்
அம்மாவைப் போன்றே



யாழினி முனுசாமி

வாரம் ஒரு பாசுரம்

சுஜாதா

காலையில் என்னை எழுப்புவது முதல் காகங்கள், ஒற்றைக் குயில், சிங்கப்பூரிலிருந்து வந்து தாழ்வாகப் பறந்து மீனம்பாக்கத்தில் தரையிறங்கும் விமான சத்தம், ஸ்டேட் பாங்க் காலனியில் கறிகாய் விற்பரின் சத்தம், பிள்ளைகளைப் பள்ளிக்கு அழைக்க அவசரப்படுத்தும் வேனின் ஹாரன் ஒலி, தரையடித் தண்ணீரை உறிஞ்ச மோட்டார் போட்ட சத்தம். இதெல்லாம் 2007-ன் அதிகாலை சத்தங்கள்.

தொண்டரடிப் பொடி ஆழ்வார் காலத்தில் திருவரங்கத்தில் அதிகாலை சத்தங்கள் வேறு. காலை வேளையில் ஆழ்வாருக்கு முதல் வேலை உறங்கிக் கொண்டிருக்கும் அரங்கனை எழுப்புவது.


'கதிரவன் குணதிசைச் சிகரம் வந்து அணைந்தான்;

ஏழாம் நூற்றாண்டின் சத்தங்கள்!



கன இருள் அகன்றது காலை அம் பொழுதாய்;
மது விரிந்து ஒழுகின மா மலர் எல்லாம்;
வானவர் அரசர்கள் வந்து வந்து ஈண்டி,
எதிர்திசை நிறைந்தனர்; இவரொடும் புகுந்த
இருங் களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்;
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.'

(அணைந்தான் - அடைந்தான்; ஈண்டி - திரண்டு; ஈட்டம் - கூட்டம்)



அதிகாலைச் சூரியன் கிழக்கே சிகரத்தை அணுகிவிட்டான். இருள் நீங்கியது. பூக்கள் எல்லாம் தேன் சொரிந்தன.

அதிகாலைச் சூரியன் கிழக்கே சிகரத்தை அணுகிவிட்டான். இருள் நீங்கியது. பூக்கள் எல்லாம் தேன் சொரிந்தன. தேவலோகத்து மன்னர்கள் ஒவ்வொருவராக நெருங்கி வந்து நிற்கிறார்கள். இவர்களோடு புகுந்த யானைக் கூட்டமும் அதிரும் முரசங்களும் அலைகடல்போல ஒலிக்கின்றன. 'அரங்கநாதனே படுக்கையிலிருந்து எழுந்து எங்களுக்கு அருள்வாய்'- இது ஏழாம் நூற்றாண்டில்.

இன்றைய தின நாராசங்களில் அரங்கன் உறங்க மாட்டார் என்றுதானே தோன்றுகிறது.

(படிக்கலாம்)

ருசி



சாதாரணமாகவே ஓர் இயக்கத்துக்கு அது சொல்கிற எதிர்ப்புக் கார்யத்தை வைத்துத்தான் பொது ஜன ஆதரவு கிடைக்கிறது; இந்த அளவுக்கு அது விதிக்கிற விதிகளுக்கு ஆதரவு கிடைப்பதில்லை. 'வெள்ளைக்காரனை விரட்டு' என்று காந்தி சொன்னதால் எல்லாரும் அவர் கீழே எதிர்ப்புக் கார்யத்தில் ஒன்று சேர்ந்தார்கள். ஆனால், அவர் விதித்த அஹிம்ஸை, ஸத்யம், ஒழுக்கம், ஈச்வர பக்தி முதலானதை எத்தனை பேர் எடுத்துக் கொண்டார்களென்று பார்த்தால் வருத்தமாகத்தான் இருக்கும். வெள்ளைக்காரனிடம் ஏன் நாம் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பதாக, அந்நிய ஆட்சியின் அதர்மத்துக்காக அவ்வளவு இல்லாமல், நம்முடைய ஸ்வேச்சா ஸ்வதந்த்ரங்களின் ஆசையால்தான் பெரிய போராட்டம் நடத்தியது. அந்த காந்தியே நம்மை சில தர்மங்களில் கட்டுப்படுத்துகிறார் என்னும்போது அவற்றை ஏற்றுக்கொள்ள மனஸ் இல்லை. பொதுவாக நம்முடைய தப்பை உணர்ந்து நம்மைத் திருத்திக் கொள்வதைவிட, பிறன் தப்பைச் சொல்லி எதிர்ப்பதில்தான் நமக்கு ருசி. நானே உங்களிடம் நாஸ்திகத்தையோ, கன்வர்ஷனையோ எதிர்த்துக் கூட்டம் போடுங்கள் என்று ஒரு வார்த்தை சொன்னால், உடனே பெரிசாக மஹாநாடு நடத்திக் காரஸாரமாகப் பேசி, தீர்மானங்கள் நிறைவேற்றுவீர்கள். அதுவே, சாஸ்த்ர ஆசாரப்படி இப்படி இப்படி இருங்கள் என்று ஓயாமல் சொன்னாலும் கேட்கத் தோன்றுகிறதா?

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

அருள்வாக்கு

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் எனக்கும் இருபதாண்டுகளாகத் தொடர்புண்டு. அப்போது நான் கோவையில் இருந்தேன். ஊருக்குள் பிளேக் நோய் பரவிக் கொண்டிருந்த காரணத்தால் குடும்பத்தை ஊருக்கு அனுப்பிவிட்டு, கலைஞர் என் வீட்டில் வந்து தங்கினார். என் வீடு என்றால், அப்போது 12 ரூபாய் வாடகை வீடுதான். இரண்டு பேரும் ஒன்றாக இருந்தோம். ஆனால், அவர் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவராகவும், நான் காங்கிரஸ்காரனாகவும் இருந்தேன். அப்போதெல்லாம் அவரை என் பக்கம் இழுக்க முயற்சித்தேன். ஆனால், நிலைமை எப்படி ஆயிற்று? நான் அவர் பக்கம்தான் ஈர்க்கப்பட்டேன். இன்று அவர் கழகத் தலைவராகவும், நான் கழகத்தின் பொருளாளராகவும் இருக்கும் நிலைமைக்கு அந்த ஈர்ப்பு நடைபெற்றுள்ளது.

கலைஞர் 84

'கழகத்துக்கு ஒரு கேடு வருகிறதென்றால் தன் உயிரைக்கூட மதிக்காமல், முனைந்து பாடுபடுவதில் அவருக்கு இணையான செயலாற்றல் யாருக்கும் இருந்திருக்க முடியாது!'



கடமையைச் செய்யும்

எம்.ஜி.ஆர். துடிப்பு!



கலைஞர் அவர்கள் இன்று முதல்வராக இருக்கிறார் என்பதால்தான் அவருக்குப் பெருமையும் புகழும் என்று யாராவது நினைத்தால் அது மாபெரும் தவறாகும். இந்தப் பதவிகளெல்லாம் அவரைத் தேடி வந்து அமைவதற்கு முன்பே பேருக்கும் புகழுக்கும் உரியவராக இருப்பவர் கலைஞர். கோவையில் இருந்தபோது பல்லாண்டுகளுக்கு முன்பு ராஜகுமாரி, அபிமன்யு என்ற படங்களுக்கெல்லாம் கலைஞர் உரையாடல்களை எழுதினார்.

அந்தப் படங்களில் அவருடைய பெயர் வெளியிடப்படவில்லை. இப்படிப் பிரபலப்படுத்தப்படவில்லையே என்பதற்காக அவர் தம்முடைய உழைப்பை - திறமையைக் காட்டாமல் இருந்ததில்லை. சலியாது உழைத்தார். அதுவும் கொள்கைப் பிடிப்புள்ள தம் கருத்துகளைப் படத்தில் அவர் நுழைக்கத் தவறியதே இல்லை.

தனக்கென ஒரு கொள்கை, தனக்கென ஒரு தலைவன் என்று வகுத்துக் கொண்டு பற்றோடும், பிடிப்போடும் அயராது உழைத்து வந்தவர் கலைஞர். கொள்கைப் பிடிப்புக் காரணமாகச் சமயம் வரும்போது அண்ணாவுடனும் சரி... என்னுடனும் சரி... கலைஞர் வாதிடுவதற்கு ஒரு போதுமே தயங்கியதில்லை. அதேபோல கழகத்துக்கு ஒரு கேடு வருகிறது என்றால் தன் உயிரைக்கூட மதிக்காமல் முனைந்து பாடுபடுவதில் அவருக்கு இணையான செயலாற்றல் யாருக்கும் இருந்திருக்க முடியாது.

சிலருக்குப் பதவி கிடைத்தால் நாடு குட்டிச்சுவராகி விடுகிறது. ஆனால், நமது கலைஞருக்குப் பதவி கிடைத்ததால் நாடு வாழ்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், தமிழகத்தின் முதலமைச்சர் ஆகிய இந்த இரண்டு பெரிய பொறுப்புகளையும் வகித்து வரும் கலைஞர் அவர்கள், எத்துறையில் திரும்பினாலும் அத்துறை சிறப்படைகிறது. ஒவ்வொரு தொண்டனையும் தலைவனையும் நன்றாகப் புரிந்து வைத்துக்கொண்டு அவர் கழகத்தைச் சீராக நடத்திச் செல்கிறார்.

தமிழர்களுக்குத் தனது கடமையைச் செய்ய வேண்டும் என்கிற துடிதுடிப்பு கலைஞருக்கு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அதிகாரிகளிடம் பேசிக் கொண்டிருந்தபோது நான் அறிந்தேன்.

டாக்டர் கலைஞரின் திட்டம் - அண்ணா அவர்களின் கொள்கை - ஏழை எளிய மக்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் - அவர்கள் வாழ்வு முன்னேற திட்டம் தீட்டப்பட வேண்டும் என்பதுதான். டாக்டர் கலைஞரின் அமைச்சரவை செய்து வருகின்ற நல்ல பல காரியங்களை எண்ணி எண்ணி நாடு மகிழ்ந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நமது தலைவர் - முதல்வர் டாக்டர் கலைஞர் பல்லாண்டு வாழ வேண்டும் - பல்லாண்டு ஆள வேண்டும்.

- கலைஞரின் சட்டப்பேரவை பொன்விழா மலரிலிருந்து...

தேவமருந்து

பரிசுப் போட்டி முடிவுகள்

தன்வந்திரி டாலர் பரிசுப் போட்டி 17ல் பங்கேற்று, பிள்ளைப்பேறு காலத்தில் தாய்ப் பால் கட்டிக்கொண்டால் செய்ய வேண்டிய எளிய சிகிச்சை முறையை எழுதி, முதல் பரிசாக தன்வந்தரி டாலர் பரிசு பெறும் வாசகர் ஆர்.பிரசன்னா, கரூர். அவரது குறிப்பு...

பிள்ளைப்பேறு காலத்தில் தாய்ப் பால் கட்டிக்கொண்டால் பச்சைப் பயறு மாவினை வெந்நீர் விட்டு நன்கு பிசைந்து மார்பில் பற்றுப் போட வீக்கம் குறையும்.

கைபொறுக்கும் அளவு சூடான வெந்நீரில் சுத்தமான துணியை நனைத்துப் பிழிந்துவிட்டு, மார்பில் ஒத்தடம் கொடுத்தால் பால் கட்டு கரைந்து நிவாரணம் கிடைக்கும்.

இரண்டாவது பரிசாக டாக்டர் மஹாதேவனின் தேவமருந்து முதல் பாகம் புத்தகம் பரிசாகப் பெறும் வாசகர் எஸ்.இராஜேந்திரன், சீகாழி. அவரது குறிப்பு...

பசலைக் கீரையைச் சுத்தம் செய்து கைப்பிடி அளவு எடுத்துக் கழுவி, அம்மியில் வைத்து அரைத்து, ஒரு டம்ளர் பசும் பாலில் கலந்து, காலையில் மட்டும் ஐந்து நாட்கள் குடித்தால் தாய்ப்பால் சுரக்கும்.

மேலும், ஆலம் விழுதுத் துளிர் மற்றும் விதைகளையும் அரைத்து உண்ணலாம். பாகற்காயின் இலையை அரைத்து மார்பகங்களில் பற்றுப் போடலாம். தாளிக் கீரை இலைகளை கொதிநீரில் போட்டுப் பிழிந்து சாப்பிடலாம். சீரகத்தை வறுத்துப் பொடியாக்கிச் சம அளவு சேர்த்துச் சாப்பிடலாம். காட்டாமணக்கு இலையை வதக்கி மார்பில் கட்டலாம். முருங்கைக் கீரைப் பொறியல் சாப்பிடலாம். பால் பெருக்கி இலையை அரைத்து துவையல் செய்து சாப்பிடலாம். கரையான் புற்று மண்ணைக் கஞ்சியில் குழைத்து மார்பில் தடவிக் கொள்ளலாம்.

பெண்களுக்கான இரும்புச்சத்து

தன்வந்தரி டாலர் பரிசுப் போட்டி 18ல் பங்கேற்று, பெண்களுக்கான இரும்புச் சத்து மிகுந்த உணவுப் பொருட்களை எழுதி, முதல் பரிசாக தன்வந்தரி டாலர் பரிசு பெறும் வாசகர் கே.எஸ்.சுப்ரமணி, சென்னை. அவரது குறிப்பு...

கைக்குத்தல் அரிசி, மீன் வகைகள், டர்னிப் கீரை, சோயாமொச்சை, தட்டைப் பயிறு, கொண்டைக்கடலை, மூலாம்பழம், கிஸ்மிஸ் பழம், உலர்ந்த பட்டாணி, சம்பா கோதுமை ரவை போன்றவை பெண்களுக்கான இரும்புச் சத்து மிகுந்த உணவு வகைகளாகும்.

இரும்புச் சத்தை உடல் உறிஞ்சிக் கொள்ள உடலில் வைட்டமின் சி போதிய அளவில் இருக்க வேண்டும். எனவே, தினமும் மதிய உணவுடன் சாத்துக்குடி, ஆரஞ்சுச் சாறு ஒரு கப் அருந்தினால் போதும். எலுமிச்சம்பழச் சாறிலும் வைட்டமின் சி இருக்கிறது.

இரண்டாவது பரிசாக டாக்டர் மஹாதேவனின் தேவமருந்து முதல் பாகம் புத்தகம் பரிசாகப் பெறும் வாசகர் அசம்பத், திருவரங்கம். அவரது குறிப்பு...

இரும்புச் சத்து உணவுகள்: ராகி அடை, ராகி கஞ்சி, பேரிச்சம் பழம், அவல், தேங்காய்த் துருவல், உப்பு கலந்த பேரிச்சம்பழ அவல் புட்டு, முருங்கைக் கீரை, காய் மற்றும் பூ, அவரைக்காய், அத்திக்காய், நெல்லிக் காய், வெள்ளை முள்ளங்கி, காலி ஃப்ளவர், முட்டைகோஸ், ஆவாரம்பூ, வெந்தயம், ஓமம், கிராம்பு, பாதாம் பருப்பு, கறிவேப்பிலை, புதினா, அரைக் கீரை, பசலை வெந்தயக் கீரை, தூது வளை, மஞ்சள் கரிசலாங்கண்ணி, பலாப் பழம் மாம்பழம், சீமை அத்திப் பழம், மாதுளை ஆப்பிள், தேன், இளநீர்.

மிகுந்த உணவுகள்...



தன்வந்திரி டாலர் பரிசுப் போட்டி 19ல் பங்கேற்று குழந்தைகளுக்கான சளி, இருமலுக்கு கைமருந்து குறிப்பெழுதி, முதல் பரிசாக தன் வந்திரி டாலர் பரிசு பெறும் வாசகி சரோஜா, சென்னை - 92. அவரது குறிப்பு...

சுக்கு, மிளகு, திப்பிலி முதலியவற்றை நன்றாக நசுக்கி, ஒவ்வொன்றிலும் ½ டீஸ்பூன் போட்டு கால் படி நீரில் கொதிக்க வைத்து, அரைக்கால் படியாக வற்ற வைத்து, அதில் பனங்கற்கண்டையும் சேர்த்துக் கொள்ளவும். பின் அதில் அரைச்சங்கு கஷாயத்துடன், கால்சங்கு தேன் ஊற்றி காலையும் மாலையும் கொடுத்தால் சளி இருமல் போய்விடும்.

இரண்டாவது பரிசாக டாக்டர் மஹாதேவனின் தேவமருந்து முதல் பாகம் புத்தகம் பரிசாகப் பெறும் வாசகி ரொஸாரியோ ரவிச்சந்திரன். அவரது குறிப்பு...

கற்புரவள்ளி இலையை எடுத்துச் சுத்தப்படுத்தி அனலில் காட்டி விரலிடுக்கில் வைத்துப் பிழிந்தால் சாறு வரும். இதனை காலையும் மாலையும் கைக்குழந்தைகளுக்குக் கொடுக்க, இருமல், சளி கட்டுப்படும்.

(போட்டி முடிவுகள் தொடரும்)





முகம் மாறும் ஜெயம் ரவி!

'உன்னாலே உன்ன
ஜீவாவை உற்சாகத்தில் த
சூடாக அடுத்து ஜெயம் ர
களமிறங்கிவிட்டார்.


''உன்னாலே உன்



பே
ஆரம்பிச்சதுலே
வச்சு, சீட் நுனியில உட்கார
பாதி த்ரில்லை ஹாரிஸ் ஜெ
அவரோட மியூசிக் என்னோட
தூம்லயும் அது நிருபணமாகு
ஜெயம் ரவிக்கு ஜோடியா க
டிருக்கோம். ஹிந்தியில் 'கேங்ஸ்
வங்க. பக்காவான கிராமத்து கேரக்
துல காட்ற பொண்ணு தேவைப்ப
வைப் பிடிச்சோம். கங்கணா தமிழ்
நடிப்புல பின்னி எடுக்குறாங்க. இய

லே' வெற்றி, டைரக்டர் ஷியிருக்கிறது. சூட்டோடு 'யை வைத்து 'தாம்தூமி'ல்





னாலே நிச்சயம் ஹிட்டடிக்கும்னு எனக்கு முன்னாலே முன்னாலே தெரியும். அது உலகக் காதலர்களுக்கான படம். காதலைச் சொல்ற விதத்துல சொன்னா ஜனங்க ஏத்துப்பாங்கங்கறதுக்கு இந்தப் படம் ஒரு முன்னுதாரணம். அடுத்து தாம்தூம். இது ரெகுலரான ஆக்ஷன் மூவி கிடையாது. புத்தம்புதுசா ஒரு விஷயத்தை ட்ரை பண்ணியிருக்கோம். ஒரே ஆள் பதினைஞ்சு பேரைத் தூக்கிப் ட்டு துவைக்கிற விஷயம் இல்ல அது. படம் ர்ந்து முடியற வரைக்கும் உள்ளூர பதைபதைக்க வைக்கிற படம் தாம்தூம். இதுல சரி ராஜ் கொடுக்கப் போறார். எப்பவுமே படத்துக்கு மிகப்பெரிய பலம். தாம்

ங்கணான்னு ஒரு புதுமுகத்தைப் போட் டார்'ங்கற படத்துல ஹீரோயினா நடிச்ச டார்ங்கிறதுனால அதை அப்படியே முகத் ., ரொம்பப் பிரயத்தனப்பட்டு கங்கணா பேசத்தான் தடுமாறுறாங்களே தவிர, பான குழந்தை முகம் எல்லாத்தையும் ரொம்ப அழகா பிரதிபலிக்குது. நமக்கும் அது தானே வேணும். படத்துக்கு கேமராவும் நா' பிடிக்கிறதுனால ஒவ்வொரு ஃப்ரேமையும் ஓவியம் மாதிரி பார்த்துப் பார்த்துச் செதுக்கிட்டிருக்கேன்.

முழுநீள ஆக்ஷன் படமா இருந்தாலும் கிராமத்து சீன்கள்ல காதல் தூக்கலா இருக்கும். அதுக்காக என்னமோ ஏதோன்னு பயந்துட வேணாம். எல்லோரும் ரசிக்கிற மாதிரி, உள்ளுக்குள் காதல் பூக்குற மாதிரி ரம்யமான காட்சிங்க நிறைய உண்டு. படத்துல கதை பாதிக்கு மேல் ரஷ்யாவில் நடக்கறதால அங்க 45 நாட்கள் ஷூட்டிங் நடக்குது. ஆக்ஷன் சீன்கள் ஒவ்வொண்ணும் மிரட்டலா, பிரம்மாண்டமா இருக்கும். படத்தோட ஸ்டண்ட் மாஸ்டர் கனல் கண்ணன் படம் சிறப்பா வர ரொம்ப மெனக்கெடுறார்'' என்று கூறும் ஜீவா,



''என்னோட படங்கள்ல இளமை கொஞ்சம் தூக்கலாவே இருக்கும். தாம்தூமும் அதுக்கு விதிவிலக்கல்ல. ஜெயம் ரவியோட முகத்தை மாத்திக் காட்டப் போற படமா இது அமையப் போறது உறுதி'' என்கிறார்.

- நிதர்சனா

பே சுகிற வார்த்தைக்கு ஜனங்கள் கொடுக்கிற மதிப்பைக் காட்டிலும், அச்சு எழுத்துக்கு அதிக மதிப்புக் கொடுக்கிறார்கள். பத்திரிகையில் அச்சிட்டு வந்தால் அது உண்மையாகத்தான் இருக்கும் என்று நம்புகிறார்கள்.

ஆனால், பத்திரிகைக்காரர்கள் பத்திரிகை தர்மத்தை மறந்து வரம்பு கடந்து செல்லும்போது, பத்திரிகைகளிடம் ஜனங்களின் மரியாதையும் நம்பிக்கையும் குறைந்துபோய் விடுகின்றன.

சமீபத்தில் அமெரிக்காவில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் வரம்பு மீறிய பத்திரிகைகளுக்கு பொது ஜனங்கள் ஒரு பாடம் கற்பித்தார்கள்.

இருபது லட்சம் முதல் நாற்பது லட்சம் வரையில் விற்பனையாகும் பெரிய பெரிய அமெரிக்கப் பத்திரிகைகள் எல்லாம் ஜனாதிபதி தேர்தலில் ட்யூயி என்பவரை ஆதரித்தன. ஆதரித்ததோடு நிற்கவில்லை; ட்யூயிதான் வெற்றியடைவார் என்று உறுதி கூறின.

ஆனால், அத்தகைய பத்திரிகைகளுக்கெல்லாம் அமெரிக்கப் பொது ஜனங்கள் நாமத்தைப் போட்டுவிட்டு ட்ருமனை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

அமெரிக்கப் பத்திரிகைகள் எல்லாம் தங்களுடைய தவறை ஒப்புக்கொண்டு 'செய்த தவறுக்காகத் தோப்புக்கரணம் போடத் தயார்' என்று வாசகர்களுக்குத் தெரியப்படுத்தின.

கடைசியாக இந்தியாவுக்கு வந்திருக்கும் 'லைஃப்' பத்திரிகையின் தலையங்கம் 'அமெரிக்காவில் 100-க்கு 90 பத்திரிகைகள் செய்த தவறை நாமும் செய்ததாக ஒப்புக் கொள்கிறோம்; அதற்காக மன்னிப்புக் கோருகிறோம்' என்று ஆரம்பமாகிறது.



"பத்திரிகைச் சுதந்திரம் கோரும் பத்திரிகைகாரர்கள், ஆபாசக் குப்பைப் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த வழி கண்டுபிடிக்க வேண்டும்!"

தமிழ்நாட்டுக்கு

அமரர் கல்கி



பேசிக்கொள்ள ஏதுவாகும்.

ஆகையினாலேயே, பத்திரிகைச் சுதந்திரம் கோரும் பத்திரிகைக்காரர்கள் ஆபாசக் குப்பைப் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த வழி கண்டுபிடிக்க வேண்டும்'' என்று ஸ்ரீ தேவதாஸ் கூறுகிறார்.

பத்திரிகைக்காரர்களால் ஒன்றும் செய்ய முடியாவிட்டால் சர்க்காரை நடவடிக்கை எடுக்கும்படிக் கேட்பதைத் தவிர வேறு வழி என்ன? அப்போது பத்திரிகைச் சுதந்திரம் ஓரளவு பாதிக்கப்பட்டுத் தானே தீரும்?

பத்திரிகைகள் தங்களுடைய மதிப்பையும் மரியாதையையும் எப்படிக் குறைத்துக் கொள்ளலாம் என்பதற்கு அமெரிக்கப் பத்திரிகைகள் ஜனாதிபதி தேர்தலில் அடைந்த அனுபவம் நல்ல உதாரணம்.

பத்து லட்சம் பிரதி விற்பனையாகும் அமெரிக்கப் பத்திரிகையைக் காட்டிலும், பத்தாயிரம் பிரதி விற்பனையாகும் இந்தியப் பத்திரிகைக்கு அதிகமான செல்வாக்கு உண்டு.

ஆனால், ஆபாசக் குப்பைப் பத்திரிகைகள் ஜனங்களிடையே பரவப் பரவ, எல்லாப் பத்திரிகைகளின் மதிப்பும் செல்வாக்கும் குறையத்தான் செய்யும்.

''பத்திரிகையில் வந்தால் புளுகாகத்தான் இருக்கும்'' என்றும், ''பத்திரிகைக்காரனுக்கு விவஸ்தை கிடையாது'' என்றும் நாளடைவில் பொதுமக்கள்

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இவ்விதம் சர்க்கார் நடவடிக்கை எடுப்பதற்கு அவசியமில்லாமல் போகும்படி பார்த்துக்கொள்ளுமாறு பத்திரிகாசிரியர்களையும் தொழிலாளர் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

அகில இந்திய பத்திரிகாசிரியர் தலைவரான ஸ்ரீ தேவதாஸ் காந்தியின் எச்சரிக்கைகளை மனதிற்கொண்டு, அவருடைய வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கும்படிக் கோருகிறோம்.

எல்லாரும் ஒத்துழைத்து, 'தமிழ்ப் பத்திரிகை' என்றாலே 'உயர்தரப் பத்திரிகை' என்ற பொருள் ஏற்பாடுமாறு செய்தால், தமிழ்நாட்டுக்கு எவ்வளவு கௌரவமாயிருக்கும்!

– கல்கி 23.01.49 இதழிலிருந்து...


கௌரவம்!


நடத்திக்

ரா. கணபதி

1932ஆம் ஆண்டு இறுதியில், ஸ்ரீ பெரியவாள் வடசென்னையில் திரளான அடியார் கூட்டமொன்றில் ஜீவன்முக்தர்கள் குறித்த உபந்நியாஸம் செய்யும்போது, நிகழ் காலத்தில் ஞானானுபவம் தரவல்ல மஹா குரு 'ரமணஸ்வாமி' என்று போற்றிக் கூறி னார்.

1944 இல் ரமணாச்ரமத்துக்கு வருகை தரா மலே அவர் கிரிப் பிரதக்ஷிணம் செய்ததை மட்டும் கூறி அதோடு விடலாமா? அருணா சலப் பதியில் அவர் நிகழ்த்திய உபந்நியாஸத் தில், 'மத ஸ்தாபனங்களான மடம் முதலான வற்றில் தலைவர்களாக உள்ளவர்கள், அந்தந்த ஸ்தாபனத்துக்கும் ஸம்பிரதாயபூர்வ





மாக ஏற்பட்டுள்ள வழிமுறைகளையெல் லாம் பிசகாமல் அனுஷ்டித்தாக வேண்டும். ஆனால், நிஜமாகவே அப்படிப்பட்ட நிலையை அடைவதென்பது மிகவும் சிரம மானது. ரமணரிஷி போன்ற ஒரு மஹாத்மா தான் அதை ஸாதிக்க முடிகிறது' என்று கூறி னார்.

1957 நவராத்திரியிலிருந்து ஒன்றரை ஆண்டு சென்னை மாநகரில் முகாமிட்ட ஸ்ரீ சரணர் விடைபெற்ற அன்று ஜன சமுத்திர மாகவே அடியார்கள் கூடியிருந்தனர். அப்போது நிகழ்த்திய நெஞ்சை நெகிழ்த்திய உரையில் அவர் கூறி யது மறக்கவொண்ணாதது.

'நான் ஊர் ஊராகப் போய் உப தேசம் பண்ணுவதில் இங்கே நீண்ட காலமே தங்கி உங்களுக்கெல்லாம் திரும்பத் திரும்ப தர்ம விஷயங்கள் சொல்லி யிருக்கிறேன். அப்படியிருந்தும், இதுவரை உங்களுடைய பிரதிநிதிகளாகப் பேசிய அவ் வளவு பேரும் நான் சொன்னபடி உங்களால் நடக்க முடியவில்லை என்றே ரொம்பவும் வருத்தப்பட்டுக் கொண்டு சொன்னார்கள். திருவண்ணாமலையில் ரமணர் இருந்தார். பாண்டிச்சேரியில் அரவிந்தர் இருந்தார். அவர் கள் என் மாதிரி ஊர் ஊராகச் சுற்றவில்லை; உபந்நியாஸம் பண்ணவில்லை. இருந்த இடத்திலேயேதான் இருந்து கொண்டிருந்தார் கள். அப்படியிருந்தும், பல தேசங்களிலிருந் தும் பல பேர் அவர்களைத் தேடிக்கொண்டு வந்து பிரயோஜனம் அடைந்தார்கள். கார ணம் என்ன? அவர்களுக்கிருந்த தபஸ் சக்திதான். நான் ஊர் ஊராய்ப் போய் ஜனங்களின் கூடவே இருந்தும், அவர் கள் நான் சொல்கிறதைச் செய்யவில் லையென்றால் எனக்கு அப்படி அவர் களைச் செய்யப் பண்ணுகிற தபஸ் இல்லை என்றே அர்த்தம். ஆகை யினால் நீங்கள் குறைப்பட்டுக் கொள்ள வேண்டாம்'' என்றார்.

தமது அதீதமான வினயப்பாங்கினாலும், அடியார்கள் குறைப்பட்டுக் கொள்வதைத் தாமே தாங்கிக்கொண்ட அநுதாபக் கருணை யாலும், சேய்க்கு வந்த நோய்க்குத் தானே மருந்துண்ணும் தாய்மைப் பண்பினாலுமே ஸ்ரீ சரணர் இப்படிச் சொன்னார். அது முழு உண்மையும் ஆகாது.

ஞானி ரமணர் ஞானமே உபதேசித்தார். யோகி அரவிந்தர் யோகமே உபதேசித்தார். பக்குவம் பெற்ற சிலரே அம்மார்க்கங்களில் ஈர்ப்புக் கொள்வார்கள். ஈர்ப்பு வலியதாகவே யிருக்கும். இத்தகைய பக்குவிகளுக்கு இறை வனே அவர்களுக்கான குருவை ஸூக்ஷ்ம மாகக் காட்டியும் விடுவான்.

ஆயின் பெரியவாளோ? இங்கே அவர் எவ்வளவு மாறுபட்டு நிற்கிறார்! அவர்

காஞ்சி மகான் ஜெயந்தி

மே 31

ஞானி, யோகி இரண்டுந்தான்; மேலும் பக்த சிகாமணியுந்தான். ஆயினும், பராசக்தி அவரை ஜகத்குருவாக ஒரு பீடத்திற்குத் தலைமை தாங்க வைத்ததால், அவர் மிகப் பெரும்பாலும் அபக்குவிகளையே கொண்ட ஜகத்துச் சமூகம் முழுவதற்கும் அதற்கான மார்க்கத்தை உபதேசிக்க வேண்டியிருந்தது. இவ் விஷயமாக அத்தெய்வத்தின் குரலையே சற்றுக் கேட்போம்:

''அத்வைத ஸ்தாபகர் என்றே (சங்கர) பகவத்பாதாள் புகழ் பெற்றிருக்கிறாராயினும் அதன் ஞான மார்க்கத்தை அவர் பொது ஜனங்களுக்கு விதிக்கவேயில்லை. பக்குவஸ்தர் களுக்கு மாத்திரமே அதை வைத்தார். மற்ற பொதுச் சமூகம் வாழ்க்கை நடத்துவதில் செய்ய வேண்டிய கார்யங்களெல்லாம் நம்முடைய சித்தத்தைச் சுத்தம் செய்யும்படியான 'கர்ம மார்க் கம்' என்று தர்ம சாஸ்திரங்கள் வகுத்துக் கொடுத்துள்ளவாறே நடத்துமாறு உபதேசிப்பதுதான், பொதுஜன ஸமுதாயத்துக்கான வழி என்று ஆசாரியாள் அபிப்ராயப்பட்டார். அதோடு நமக்கு மூலமாக, நாம் வாழ்க்கை நடத்துகிற ஜகத்துக்கும் மூலமாக இருந்துகொண்டு, இந்த இரண்டும் சேர்த்து லோகம் நடக்கும் படிச் செய்கிற ஈச்வரனைப் பற்றிய சிந்தனையும் எல்லாருக்கும் அவசியம். நம்மை தர்ம வழியில் போகப் பண்ண அவனுடைய அநுக்ரஹம் அவசியம் என்பதால், ஈச்வர பக்

காட்டிய உறுதி!



தியை விருத்தி செய்வதையும் தமது மடங்களிலே (ஆசாரி யர்களாக) வருகிறவர்களுக்கு ஒரு கடமையாகக் கொடுத்தார்.

ஸ்ரீ சரணர் தமது காலம் வரையில் பல நூற்றாண்டுகளாகப் பூர்வீக மடாதிபதிகள் சாஸ்திர ஆசாரங்களையே வழுவாது பின்பற்றியிருக்க, இன்று தாம் சில விதிகளை வயலில் தோன்றிய களையாக எண்ணிக் களைந்தெடுக்கத் தொடங் கினால், தமது பின் பரம்பரை மடாதிபதி ஒவ்வொரு வரும் அவ்வாறே களை என்று சில சிலவற்றை அகற்றி, முடிவில் பயிர் என்ற ஒன்றே நிற்காமல் ஆகி விடக்கூடிய ஆபத்தல்லவா இருக்கிறது எனச் சிந்தனை செய்தார். ஆகை யால், லோகமே எதிர்த்துப் புரண்டு வந்தாலும், தாம் ஆதி சாஸ்திர நெறிகளிலேயேதான் ஒட்டி நின்று, மற்றோ ருக்கும் அதையே வலியுறுத்திக் கூற வேண்டும் என்று தீர் மானித்தார். அத் தீர்மானத்தை அவர் நடத்திக் காட்டிய உறுதி அவரொரு வரால்தான் முடியும்; முடிந்தது!

– 'தரிசனம்' புத்தகத்திலிருந்து... திவ்ய வித்யா ட்ரஸ்ட் வெளியீடு

கொசு

"ஒனக்கு என்னா வயசாவுது? ஒன் வயசுல நான் மூணு புள்ள பெத்தவன் தெரியுமா? நீயாச்சும் குடிசைல வாள்றவன். நான் பக்கா ப்ளாட்ஃபார்ம். தப்பு செஞ்சிட்டேன்னா, ஆமான்னு ஒத்துக்க மொதல்ல. நான் மன்னிக்கறனா, இல்லியாங்கறதெல்லாம் அப்பால. மொதல்ல நீ ஒத்துக்க. இல்ல, மவன ஒன்னிய போட்டுத் தள்ளிட்டு செயிலுக்குப் போனாலும் போவனேகண்டி வெறுங் கையோட திரும்பறவன் இல்ல நான்.''

- சன்னதம் வந்தவர்போல் குதித்துக்கொண்டிருந்தார் சிங்காரவேலு. முத்துராமன் உள்ளுக்குள் பதறவில்லை. நிதானமாகத்தான் இருந்தான். தனது அதிகாரத்தை நிலைநிறுத்த சிங்காரண்ணன் வீடு வரைக்கும் அரிவாளெடுத்து வந்திருக்கிறார். இப்படிப் பேசுகிறவர் வெட்டக்கூடியவர் இல்லை. இருப்பினும் ஒரு மரியாதை கருதி, பதற்றமுற்றவன் மாதிரி நடந்துகொண்டான்.

''அண்ணே, என்னியவா சந்தேகப் படுறீங்க? உங்க உப்பத் தின்னவண்ணே நான்! நீங்க பாத்து வளர்ந்த புள்ள. சே.. என்னண்ணே நீங்க?''

''ஏண்டா பரதேசி, என் கைக்காச செலவழிச்சி உன் குப்பத்து கப்பெல்லாம் போவுறதுக்கு வேலை செஞ்சிக்கிட்டிருக்கேன். குப்ப மேட்ல கெடந்த ஒனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சிக் குடுக்கப் பாக்குறன்.. என்னியவே நீ போட்டுப் பாக்குறியா? நேத்து பெஞ்ச மழையில இன்னிக்கி மொளச்ச காளான் உங்க எம்.எல்.ஏ. நீ அவனுக்கு சப்போர்ட்டா?''

21

''அண்ணே.. ஒரு நிமிசம்ணே.. நான் சொல்றத மட்டும் கேட்டுட்டு அப்பறம் நீங்க என்ன செஞ்சாலும் ஏத்துக்கறேன். கண்டிப்பா நான் நியாயம் கேக்கத் தாண்ணே அவுரு வூட்டுக்குப் போனேன். சிங்காரண்ணன் ரத்தத்த சிந்தி பாடுபடுறாரு, இப்படி கெடுக்கப் பாக்குறீங்களேன்னு சட்டைய புடிக்கத்தாண்ணே போனேன். அவுரு துண்ட போட்டுத் தாண்டுறாருண்ணே...



அவர் அனுப்பவே இல்லன்னிட்டு..''

''தபாரு முத்துராமா. எல்லாம் எனக்குத் தெரியும். உங்கப்பாரு மூஞ்சிக்காக உன்னிய ஒண்ணும் பண்ணாம வுட்டுட்டுப் போறேன். ஆனா ஒண்ணுகண்டி தெரிஞ்சிக்க. எவன் தடுக்க நெனச்சாலும் என் இலச்சியம் தோக்காது! இதே தொகுதிக்கு அடுத்த எம்.எல்.ஏ. நாந்தான். எளுதி வெச்சிக்க. நலத்திட்டத்துக்கு இன்னிக்கி ஆளனுப்பன அதே சிங்காரம் அன்னிக்கி கொளுத்தறதுக்கும் ஆள் அனுப்புவான். அதையும் சொல்லுறேன். நோட் பண்ணிக்க.''



பா.ராகவன்

''ஐயோ அண்ணே.. என்ன பேசுறீங்க? நீங்களா..''

''டாய், இதுக்கு மேல பேசாத. நீ எதுக்குப் போனங்கறது எனக்கு முக்கியமில்ல. எனக்குத் தெரியும்டா. அவன் ஆள் அனுப்பல. வேலைய கெடுத்ததும் அவன் இல்ல. நான்தான்!''

ஒரு கணம் முத்துராமன் வாயடைத்துப் போனான்.

''என்னண்ணே சொல்லுறீங்க?''

''ஆமாண்டா. நாந்தான் அனுப்பினேன். நானே தொடங்கின வேலைய நானே நிறுத்தினேன். நிறுத்திட்டு என்னா செஞ்சேன்? கட்சிப் பத்திரிகை எடிட்டர நேராப் போயி பாத்தேன். தலைவர் பேருல நான் தொடங்கின காரியத்த கட்சி ஆளுங்க சிலரே கெடுக்கறாங்கன்னு புகார் அறிக்கை குடுத்துட்டு, ஊட்டிக்குப் போயி ஒரு வாரம் ரெஸ்ட் எடுத்தேன். என்னா ஆச்சி தெரியுமா? நோட்டு வந்திருக்குது. தலைவர் என்னிய பாக்கணும்னு சொல்லியிருக்காரு. அவ்ளதாண்டா! இன்னமே கடவுளே நெனச்சாலும் என்னிய ஒண்ணும் பண்ண முடியாது. போய்ச் சொல்லு உங்க எம்.எல்.ஏவாண்ட. ஏற்கெனவே கட்சிக்குள்ளார அவனுக்கு ஏகப்பட்ட கெட்ட பேரு. தலைவருக்குப் புடிக்காத ஆளுங்களோட சகவாசம் வெச்சிக்கினு ரியல் எஸ்டேட் பிசினசு பண்றான்... இந்த வருசத்தோட அவன் ஆட்டம் க்ளோஸ். போய்ச் சொல்லுடா பரதேசி!''

முத்துராமனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. மண்டைக்குள் பரபரவென்று பல விஷயங்கள் ஓடிக்கொண்டிருந்தன. இது அரசியல், இது அரசியல் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டான்.

''அண்ணே, நீங்க என்னா வேணா

நம் நாடு!

ஒரு பக்கம் தனித் தீவாக அரசியலில் கோலோச்சிக் கொண்டிருக்கும் சரத், இன்னொரு பக்கம் சினிமாவிலும் தன் கவனத்தைச் சிதறவிடாமல் சீர்தூக்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறார். 'போக்கிரி' படத்தைத் தயாரித்த கனகரத்னா மூவிஸ், அடுத்ததாக சரத்தை வைத்து 'நம்நாடு' படத்தைத் தயாரிக்கிறது. இயக்கம் சுரேஷ். அரசு, கம்பீரம், சபரி படங்களை இயக்கியவர். 'சரத்தின் அரசியல் பிரவேசத்துக்கு அஸ்திவாரமாக இப் படம் அமையுமா?' என்றால் இரகசியப் புன்னகை பூக்கிறார் சுரேஷ். இந்நிலையில் காமராஜரின் பிறந்தநாளான ஜூலை 15ம் தேதி தமது புதுக் கட்சி அறிவிப்பை வெளியிடலாமா

நெனச்சிக்கங்கண்ணே. நான் சொல்லுறது இதுதான். என்னிக்கி இருந்தாலும் நான் உங்க ஆளு. நீங்க செய்யச் சொன்ன வேலையச் செஞ்சேன். எவனோ தடுக்க வந்தப்ப, ஏண்டான்னு கேக்கத்தான் அவரு வூட்டுக்குப் போனேன்.''

''எலேய், திரும்பத் திரும்ப அதையே சொல்லாத. எனக்கு வர்ற ஆத்திரத்துல ஒன்னிய போட்டு மிதிச்சிருவேன். வேலையக் கெடுக்க ஆள் அனுப்பனதே நாந்தான்னு சொல்லிட்டன்ல? அப்பறம் என்ன அதையே சொல்லிக்கிட்டு? உண்மை உன் வாயிலேருந்து வருதான்னு பாத்தேன். வரல. சரி, நானே சொல்லுறேன். நீ ஏன் அவன் வீட்டுக்குப் போனன்னு நான் கேக்கல. அவன் உன்னிய எதுக்கு திருநவேலிக்கு அனுப்பினான்னு கேக்குறன். அட, அனுப்பினான். போவச் சொல்ல என்னாண்ட ஒரு வார்த்த சொன்னியா?''

''சொல்லாம இருப்பனாண்ணே? நம்ம ஒட்டலுக்கு ஒடனே ஓடியாந்தேண்ணே. நீங்க ஊர்ல இல்லன்னுட்டாங்க. எங்க போயிருக்கீங்க, போன் நம்பர் என்னா, எது கேட்டாலும் தெரியல. அவுரானா, அவசரப்படுத்தறாரு. கட்சி வேலதானே, நீங்க ஒண்ணும் சொல்ல மாட்டீங்கன்னுதாண்ணே போனேன்.''



''கட்சி வேலையா? டேய், எனக்குத் தெரியாதாடா அவனை?'' சிரித்தார். முத்துராமன் தலை குனிந்து நின்றான்.

''தபாரு முத்து. நீ எவனோட வேணா போ. எப்படி வேணா வீணா போ. எனக்குப் பிரச்னை இல்ல. ஆனா, எனக்குத் துரோகம் பண்ணணும்னு நெனச்சா வுட மாட்டேன். இன்னிக்கி ஹோல்டு நம்மாண்ட வந்திருக்குது. தலைவர பாத்துட்டு வந்துட்டன்னா தீர்ந்துது விசயம். இத்தன வருசமா தவம் இருந்திருக்கண்டா.. சொம்மா இல்ல. இனிமே எவன் நெனச்சாலும் என்னிய அழிக்க முடியாது. போய்ச் சொல்லு அவனாண்ட.''

பேசியபடியே துண்டை உதறித்

''ஸ்டேஷன் ஜன்னல் கம்பி ஏன் வளைஞ்சிருக்கு?''

''கபாலி அவன் வழியில வந்து மாமூல் கொடுத்துட்டுப் போறான்!''

— அம்பைதேவா

என்று சரத் வட்டாரம் ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது. விரைவில் தமிழகம் முழுக்கச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவும் திட்டமிட்டிருக்கிறாராம். அனைத்துக்கும் பின்னணியில் அரசி இருப்பதாகத் தகவல்!

– ரேவதி



தோளில் போட்டுக்கொண்டு வேகமாக வெளியேறினார். அவருடன் வந்திருந்த இரண்டு பேரும் முறைத்தபடி பின்னால் போனார்கள்.

முத்துராமன் வியர்வையைத் துடைத்துக்கொண்டான். ''என்னடா இது?'' என்றார் அவனது அப்பா.

''வந்து சொல்றேம்பா'' என்று உடனே கிளம்பி வண்டியை எடுத்து வேறு வழியில் பாய்ந்தான். இருபது நிமிடத்தில் வேளச்சேரி எம்.எல்.ஏ. வீடு. ''ஐயா இருக்காரா?''

மேலே வரச்சொன்னார். ''சொல்லு முத்து''

''அண்ணே ரொம்ப முக்கியமான விசயம்.. கொஞ்சம் தனியா பேசணும்'' என்றான் அருகே வந்து காலடியில் அமர்ந்தவாறு.

எம்.எல்.ஏ. தீர்த்தவாயில் இருந்தார். அரை மயக்கம். அரை நிதானம். கண்ணைக் காட்டினார். அருகில் இருந்த எடுபடி வெளியேற, முத்துராமன் இடைவெளியே விடாமல் நடந்த அனைத்தையும் ஒப்பித்தான்.

''எனக்கு என்னா பண்றதுன்னே தெரியலண்ணே. இந்தாளு இப்படி ஒரு தில்லாலங்கடியா இருப்பாருன்னு கனவுலகூட நெனச்சிப் பாத்ததில்லண்ணே.''

''அப்பிடியா சொன்னான் அவன்? அடப்பாவி! அவனே ஆளனுப்பி வேலைய நிறுத்தினானாமா? அவ்ளோ மண்டை ஏதுரா அவனுக்கு?''

''தெரியலண்ணே. தலைவராண்ட அப்பாயின்மெண்ட் வாங்கியிருக்காராம். என்னா தெனாவட்டுங்கறீங்க? ஒங்கள ஒழிக்காம ஓயமாட்டேங்குறாருண்ணே.'

தங்கவேலு யோசித்தார்.

''இப்பம் புரியுதுடா எனுக்கு. தலைமை அலுவலகத்துல நம்மளுக்குச் சரிப்படாத ரெண்டு மூணு பெருச்சாளிங்க இருக்குது. எப்பப்பாரு எதுனா போட்டு குடுத்துக்கினே இருக்குங்க. அதுங்களோட இவன் நெருங்கிட்டான்னு நெனைக்குறே... தலைவரு உத்தமருடா. அவருக்கு நம்ம முக்கியத்துவம் தெரியும். இப்பம் நான் சொன்னபடி பாளையங்கோட்டை மாநாடு டயத்துல நீ அந்த நெல விஷயத்த அம்மிணியாண்ட கரெக்டா பேசி என்னிய பத்தி நாலு வார்த்த எடுத்துவிட்டு, அம்மிணிய பாக்க அப்பாயின்மெண்டு வாங்கிட்டன்னு வையி. எல்லாத்தையும் தீத்துருவேன்.''

''கண்டிப்பாண்ணே. எவ்ளோ பெரிய காரியம். என்னிய நம்பிக் குடுத்திருக்கீங்க. நல்லபடியா முடிச்சிருவண்ணே.''

''அதுக்கு முன்னாடி இந்தப் பன்னாடையோட கதைய முடிச்சிட்டாக்கூட நல்லதுரா. ஒண்ணு செய்யிறியா?''

''சொல்லுங்கண்ணே.''

''கன்னு ஒண்ணு ரொம்ப நாளா வேலையில்லாம உள்ளார கெடக்குது. லைசென்சு இல்லாத கன்னு. எடுத்துட்டுப் போயி அந்தாள போட்டுத் தள்ளிட்டு வந்துரேன்?'

(தொடரும்)

* வனிதா * இமலி



கல்லூரி நிர்வாகம் மாணவர்களை ஒடுக்கக்கூடாது'' என்கின்றனர் ஒரே குரலில்.

திருச்சியில் யூ.ஜி. முடித்துவிட்டு பி.ஜி. படிப்பதற்காக சென்னைக்கு வந்திருக்கும் மாணவிகள் இமலி மற்றும் வனிதா.

''அளவுக்கு மீறினா அமுதமும் நஞ்சுங்கிற மாதிரி ஜாலியா ஆரம்பிக்கிற ராகிங், கடைசியில தற்கொலை, கொலை லெவலுக்குக் கொண்டு போய் விட்டுடுறது பரிதாபம். ஒரு

ராகிங் குற்றமா!

கடந்த வாரத்தில் சுப்ரீம் கோர்ட் ராகிங் குறித்து அதிரடியான தீர்ப்பு ஒன்றை வழங்கியிருக்கிறது. 'ராகிங் செய்யும் மாணவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்பதுதான் அந்தத் தீர்ப்பின் சாராம்சம். சில வருடங்களுக்கு முன்பு அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர் நாவரசு, ராகிங் கொடுமையால் படுகொலை செய்யப்பட, சி.பி.ஐ. முன்னாள் இயக்குனர் ராகவன் தலைமையில் விசாரிக்க ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில்தான் சுப்ரீம் கோர்ட் இந்த அதிரடித் தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

லயோலா கல்லூரியில் முதலாமாண்டு சேரவிருக்கும் மாணவர்களான ரான்சன், பிரவீன் இருவரும் இந்தத் தீர்ப்பை ஆதரித்து நம்மிடம் பேசினார்கள்.

''ராகிங்... சீனியர் மற்றும் ஜூனியர் மாணவர்களுக்குள்ள ஒரு நல்ல ஃப்ரண்ட்ஷிப்பை ஏற்படுத்த உருவானதுதான். ஆனா, நாளடைவில எல்லை மீறி பிரச்னையா வெடிச்சது பரிதாபமானது.

எல்லை மீறாம இருக்கணும்னா இந்த மாதிரியான அதிரடி தீர்ப்பு அவசியம்தான். அதுக்காக இதையே சாக்கா வெச்சுக்கிட்டு

சில மாணவர்கள் ராகிங்கில் ஈடுபட்டு ஒட்டு மொத்த மாணவச் சமுதாயத்து பேரையே கெடுத்துடுறாங்க. இருந்தாலும் கிரிமினல் குற்றமா ராகிங்கைப் பார்க்கறது கொஞ்சம் ஓவர்தான். ராகிங் அத்துமீறும்போது கண்டிப்பா காலேஜ்லேயே தண்டனை தரலாம்; சஸ்பெண்ட் பண்ணலாம். ஆனா, கிரிமினல் வழக்குப் போட்டு மாணவர்களோட எதிர்கால வாழ்க்கையைச் சிதைக்கக் கூடாது. தவறு செஞ்சவங்க திருந்த வாய்ப்புத் தரணும். இந்தத் தீர்ப்பால் அது நடக்காது போல'' என்கிறார்கள் இவர்கள்.

இவர்களோடு சேர்ந்து கல்லூரி மாணவர் சுரேஷும் தமது சகாக்களுக்கு பலமாகவே வக்காலத்து வாங்குகிறார்.

''ராகிங், பலவிதமான போராட்டச் சூழலை சந்திக்க வாழ்க்கைல உறுதுணையா இருக்கு. ராகிங்கைச் சந்திக்கும்போது சவாலுக்கு ஆளாகுற மாணவன், அதில் ஜெயிக்கும்போது பிரச்னைகளைச் சமாளிக்கிற திடமனதைப் பெறுகிறான்.

ராகிங்கை பாசிட்டிவாக எடுத்துக்கொண்

டால் அதைவிட ஜாலியான, சந்தோஷமான விஷயமே இல்ல. ஜூனியர் மாணவனுக்கு ஒரு பிரச்னைன்னா உடனே பொங்கி எழுந்து பிரச்னையைத் தீர்த்து வைக்கிறது சீனியர்ஸ் தான். எனக்குத் தெரிஞ்சு நான் ஜூனியரா இருக்கும்போது, என்னை 'ராகிங்' பண்ணின சீனியர் ஸ்டூடண்ட், எனக்கு ஃபீஸ் கட்டுற துக்குப் பணம் இல்லைன்னு தெரிஞ்சதும் உடனே கொடுத்து உதவினாரு. அதனால கிரிமினல் அது இதுன்னு பெரிய வார்த்தை பேசாம தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வாய்ப்பிருந்தா நல்லது'' என்கிறார்.

ஆனால், பெற்றோரின் கணிப்பு வேறு மாதிரியாக இருக்கிறது. குடும்பத் தலைவி யான பிரிட்டோவிடம் கேட்டபோது, ''இந்தத் தீர்ப்பு ரொம்ப வரவேற்கத்தக்க துங்க. ராகிங் கொடுமையினால பல பேரு டைய வாழ்க்கை நாசமாகுது. என் பிள் ளையை காலேஜ்ல சேர்க்க வந்திருக்கேன். அவனை காலேஜுக்கு அனுப்பிட்டு என்ன ஆச்சோ, ஏதாச்சோன்னு தினம் தினம் வயித்துல நெருப்பைக் கட்டிக்கிட்டு உட் கார்ந்திருக்கணும். கஷ்டப்பட்டு காசு பணத்தை செலவு செஞ்சுப் படிக்கப் போற புள்ள ராகிங்கால தன்னோட தைரியம், படிப்பை இழந்து தாழ்வு மனப்பான்மை யோட கஷ்டப்படுறதுக்கா கல்லூரிக்கு அனுப்பி வைக்கிறோம்? இதுவரைக்கும் ஹெல்மெட் போடுங்க உயிருக்கு ஆபத் துன்னு பல தடவை சொல்லியாச்சு. எத் தனை பேரு ஹெல்மெட் போட்டுட்டுப் போறாங்க? ஆனா, சட்டம் போட்டதுக்கப் புறம் கண்டிப்பா போடுவாங்கள்ல. அதே மாதிரி கண்டிப்பா இந்த தீர்ப்பால ஒரு விடிவுகாலம் பொறக்கும்னு நம்புறோம்'' என்கிறார்.

பச்சையப்பா கல்லூரி முதல்வர் டாக்டர் டி.வி.ராஜேந்திரனும் இது குறித்து நம்மிடம்

> ''என் பிள்ளையை காலேஜ்ல சேர்க்க வந்திருக்கேன். அவனை காலேஜுக்கு அனுப்பிட்டு என்ன ஆச்சோ, ஏதாச்சோன்னு தினம் தினம் வயித்துல நெருப்பைக் கட்டிக்கிட்டு உட்கார்ந்திருக்கணும்!''



* பிரவீன்
* சுரேஷ்
* ரான்சன்



* ஷீட்டேனல்

பேசினார்...

''இந்தத் தீர்ப்பு தேவையான ஒன்று தான். கிண்டல், கலாட்டான்னு தான் நட்பை வளர்க்கணுமா என்ன? பரஸ்பர புரிதலோடு மாணவர்கள் தங்களுக்குள் நல்லெண்ணத்தை வளர்த்துக்கணும். கல்லூரிங்க இந்த விஷயத்துல கட்டுப் பாட்டோட நடந்து, ஜூனியர் மாண வர்களைக் காப்பாத்தணும்.

போன வருஷம் எங்களது கல் லூரியில் ராகிங் மற்றும் ஒழுக்கக்கேடு உள்ளிட்ட காரணத்தினால் 12 மாண வர்களை டிஸ்மிஸ் செய்து விட்டோம். ராகிங் செய்வதால் எந்த அட்வான் டேஜூம் இல்லை. தன்னை மற்ற மாணவர்களிடம் ஹீரோவாக காண் பிக்கத் துடிக்கும் எண்ணத்தினால்தான் இந்த விபரீதச் செய லில் ஈடுபடுகிறார்கள். இப்படிப்பட்ட மாண வர்களைத் தண்டிப் பதைத் தவிர வேறு வழியே இல்லை'' என் கிறார் ராஜேந்திரன் அதி ரடியாக.

* டி.வி. ராஜேந்திரன்



பகவான் பராக் பராக்!

'தவமாய் தவமிருந்து' மூலம் ரீ என்ட்ரியான ராஜ்கிரண், 'முனி' மூலம் குழந்தைகளின் உள்ளத்தை யும் கொள்ளை கொண்டார். அடுத்து பகவானாக 'பகடை' படத்தில் பட்டையைக் கிளப்புகிறார்.

''ஜெயில் தண்டனைக் கைதியாக இருக்கும் பகவான், தான் செய்ய நினைக்கும் காரியங்களைச் செய்வதற்கு மாசி என்கிற குற்றவாளியை உபயோகப் படுத்துகிறான். அவனிடம் தர்மத்தைக் காப்பாற்றும் பொறுப்பை ஒப்படைக் கிறான். இப்படி அதிரடியாக வடிவமைக் கப்பட்டுள்ள பகவான் கேரக்டர் என்னை பிரமிக்க வைத்துவிட்டது'' என்கிறார் ராஜ்கிரண்.

'சரி, அடுத்து எப்போது மீண்டும் கதாநாயக வலம்?' என்றால்,

''கதை நாயகனாக இருப்பதே போதும்'' என்று திருத்துகிறார்.

- ராகவ்



தொகுப்பு : மனோ

படங்கள் : பொள்ளாச்சி சுந்தரம்

கார் கதவைத் திறந்துவிட்டு, ''வாங்க ஸார், ஃப்ளைட் லேட்டுங்களா?'' என்று பவ்யமாய் வரவேற்ற சுந்தரை அலட்சிய மாய்ப் பார்த்து, ''யா! எனி ஃபோன் கால்ஸ், விசிட்டர்ஸ்?'' என்றான் விஷ்வா.

''லக்கேஜ் எடுத்து மேல வெச்சிடுங்க!'' என்று டிரைவரிடம் சொல்லி, மறுபடியும் சுந்தரிடம் திரும்பினான். ''யெஸ்...''

''ஊர்லேர்ந்து அம்மா, அப்பா வந்திருக்காங்க ஸார்!''


''ஐ ஸி! டேக் கேர் ஆஃப் தெம்... ஓகே? நான் ஒன் அவர் ரெஸ்ட் எடுத்துட்டு, திரும்பக் கிளம்பணும்...'' படபடவென்று பேசியபடியே போய்விட்டான் தன் அறைக்குள். ''அம்மா முழிச்சிட்டு தான் ஸார் இருக்காங்க...'' என்ற சுந்தரின் வார்த்தைகள் அவனைச் சென்றடைவதற்குள்ளேயே கதவு சாத்தப்பட்டது. பெருமூச்சுவிட்டு, விஷ்வாவுக்கென்று பதமாய் ஆற்றிய காஃபியை தான் குடித்து முடித்தார் அவன் அம்மா மரகதம்.

''ஹாய்மா..! ஹாய்ப்பா...!'' என்று எட்டரை மணிக்கு அவர்களோடு காலை உணவுக்காக டைனிங் டேபிளில் சேர்ந்துகொண்டான் விஷ்வா. வெந்தயத் தோசையை விண்டு வாயில் வைக்கும் முன்னரே செல்ஃபோன் அலறத் தொடங்கியது.

''யா...ஷிட்...! ஓ...யா...'' என்று பேசிக்கொண்டே சாப்பிட்டு, பேசிக்கொண்டே கைகழுவி, பேசிக்கொண்டே காரில் ஏறியவன், சட்டென்று ஞாபகம் வந்தவனாய் ஜன்னல் வழியே அவர்களுக்காகக் கையாட்டி, விடைபெற்றான்.

''என்னவோ உம்மகன்கிட்ட நிறைய பேசணும்னியே, நம்பர் போட்டுத் தரேன், பேசு!'' என்று நக்கலாகச் சொன்ன கணவர் முத்துக்குமாரசாமியைப் பார்த்து, மரகதத்தால் சிரிக்க மட்டுமே முடிந்தது.

கும்பகோணம் தாண்டி, ஒரு குக்கிராமத்தில் பிறந்தவன்தான் விஷ்வா. கடிச்சம்பாடி முதலியாரின் சினிமா கொட்டகையில், ரஜினி படங்களை எச்சில் வழிய பயமும் ஆச்சர்யமுமாய்ப் பார்த்தவன். இன்று என்னென்னமோ கம்ப்யூட்டர் படிப்பெல்லாம் முடித்துவிட்டு, முன் அறிமுகம் இல்லாத சென்னையில் ஃப்ளாட் வாங்கி, ஹோம் தியேட்டர் அமைத்து, கார்



டைனோசர்

ரோஷிணி

பொம்மை!

ஷெட் தவிர பாக்கி எல்லாவற்றையும் ஏசி பண்ணி... தலைகொள்ளாத பெருமைதான் பெற்றவர்களுக்கு. என்றாலும் இப்படிச் சாப்பிடக்கூட நேரமில்லாமல் காலில் சக்கரம் கட்டியவனாய்த் திரிவதில்தான் பெரிய வருத்தம்! முப்பது முடிந்து மூன்று வருஷமாகிவிட்டது! சீக்கிரம் கல்யாணம் பண்ணிடணும்.

'**பொ**ங்கல், தீபாவளி பண்டிகை என்று முன்னெல்லாம் வருஷத்துக்கொரு முறையாவது ஊர்க் காற்றை உள்ளிழுக்க



ஓடோடி வருபவன்! இந்த முறை அதுவுமில்லை!' எண்ணியபடியே விஷ்வாவுக்குப் பிடித்த வத்தல் குழம்பு, அப்பளம், அரிசி பாயசம், பருப்புசிலி... என டேபிளில் அடுக்கினாள் மரகதம். கடிகாரத்தையும், வாசலையும் நொடிக்கொரு முறை மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தபோது, விஷ்வா ஃபோன் செய்தான். ''லஞ்சுக்கு என்னை எதிர்பார்க்காதீங்க...''

''என்னமோ போ!'' என்று அலுத்துக் கொண்டு, ''அப்படி என்ன வேலை? சோறு, தண்ணி, தூக்கம் இல்லாம?'' என்று மரகதம் ஆதங்கப்பட்டபோது, ''கிளம்பும் போதே சொன்னேன் நான்! உம் பிள்ளை மியூசியத்துல உள்ள டைனோசர் பொம்மை மாதிரி! எட்டி நின்னு கண்ணாடிக்கு வெளியேருந்து பார்க்கலாம்; தொட முடியாது! பேசலாம், பதிலிருக்காது! பெருமைப்பட்டுக்கலாம், ஆனா பிரயோஜனம் கிடையாதுன்னு நீதான் குதிச்சுக்கிட்டுக் கிளம்பினே!'' என்று பதிலுக்கு மரகதத்தின் மேல் பாய்ந்தார் முத்துக்குமாரசாமி.

''**ஸா**ருக்கு லைட்டா பீபீ இருக்கு! நைட்ல ரெண்டு சப்பாத்தியும், சாலட்டும்தான் சாப்பிடுவாங்க; உங்களுக்கு என்ன செய்யட்டும்மா?'' சுந்தர் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று யோசிக்கும் முன், முப்பது வயசுக்காரனுக்கெல்லாம்கூட இரத்தக் கொதிப்பு வருமா என்ற கவலை மரகதத்தைக் குடைய ஆரம்பித்தது.

''ஒன்றும் வேண்டாம்!'' என்பது போல் அவனிடம் தலையசைத்து விட்டு, மதியம் செய்ததையே இருவரும் காலி பண்ணி, துணிமணிகளை அடுக்கிக் கொண்டு ரெடியாக உட்கார்ந்திருந்தார்கள். இரவு 10.30 மணிக்கு பஸ். அதற்குள்

சிடுமூஞ்சி தேவதை!

'கருவாப்பையா' பாட்டு நடிகர் ஹரிகுமாரை பட்டிதொட்டியெங்கும் பாப்புலராக்கி விட்டது. இதே ஸ்டைலில் இப்போது அவர் நடிக்கும் 'திருத்தம்' படத்திலும் பாடலொன்று இருக்கிறதாம். பிரவீன் மணி இசையில், யுகபாரதி எழுதியிருக்கும் 'சிடுமூஞ்சி தேவதையே' பாடல், அடுத்த கட்டத்துக்கு ஹரிகுமாரைக் கொண்டு செல்லும் என்கிறார்கள். படப்பிடிப்பு வெற்றிகரமாக முடிந்ததும் மகிழ்ச்சியில் திருத்தம் படக்குழு. சாயக்குடி அருவியில் குளித்து கும்மாளம் போட்டு வந்திருக்கிறது. சூட்டோடு சூடாக படத்தின் மற்ற வேலைகளை முடித்துத் திரையிட முனைப்புக் காட்டி வருகிறார்கள்.

விஷ்வா வந்துவிட்டால் தேவலை...

வந்தான்! வெண்கலக் கடையில் புகுந்துகொண்ட யானைபோல்... ''ஏய்! அறிவில்லை? எத்தனை தடவை சொல்றது உனக்கு? எல்லாத்தையும் ப்ரீஃப்கேஸ்ல ரெடியா வையின்னு... ஷிட், கெட் மீ தட் ரெட் கலர் ஃபோன் டைரி மேன்! வேஸ்ட் ஆஃப் டைம்! வேஸ்ட் ஆஃப் டைம்! ஷிட்! உன் சீட்டைக் கிழிக்கிறேன் பார்... இன்னிக்கு!'' என்று சுந்தரைக் கடித்துக் குதறிவிட்டு, டையைத் தளர்த்தி சோபாவில் பொத்தென்று விழுந்தான். வேர்த்துக் களைத்துப் போயிருந்தான். ஊருக்குக் கிளம்புவதைச் சொன்னாலும் கோபத்தில் சீறி, ராக்கெட் மாதிரி வானத்துக்கு எகிறிவிடுவானோ என்ற பயம் வேறு!

''என்னப்பா தேடற...? சொல்லேன்...! நான் வேணா...''

''உங்களுக்குத் தெரியாதும்மா...நீங்க கொஞ்சம் சும்மாயிருங்க! அந்த டைரிய மட்டும் இப்ப கொண்டு வரல... ஷிட்!'' என்று மீண்டும் வெடித்தான்.

வாலாட்டும் நாய் போல் அவனையே சுற்றிச் சுற்றி வரும் சுந்தரை நிமிஷமாய் எடுத்தெறிந்து பேசுவது ஏனோ முத்துக்குமாரசாமிக்குப் பிடிக்கவில்லை! தவிர, இந்த ரெண்டு நாளில், மகன் தன் முகம் பார்த்து நாலு வார்த்தைகூடப் பேசாதது என்னவோ போலிருந்தது. இப்போதும் கூட, அவன் வந்தது சிவப்பு டைரிக்காகத்தான் என்கிற நிஜம் அவரை இன்னும் அதிகமாய்ச் சுட்டது! 'இனி நாம் தேவையில்லை என்ற நினைக்கிறானோ?' என்கிற சந்தேகம் சின்னதாய்க் கிளம்பிப் பெரிதாய் வாட்டத் தொடங்கியது... ப்ச! மரகதத்துக்கு இதொன்றும் புரியப் போவதில்லை. சேணம் கட்டிய குதிரை போல், சமையல், சாப்பாடு, எண்ணெய்க் குளியல், செம்மண் கோலம், சுந்தர காண்டம்... என்பதான பார்வை அவளுடையது.

* 'திருத்தம்' ஹரிகுமார் - பிரியங்கா...



முத்துக்குமாரசாமி எழுந்து கொண்டார். ''தம்பி...'' என்று விஷ்வாவை அழைத்து, ''ஒனக்கு ஒஞ்ச ஒழிஞ்ச நேரத்துலயாவது எங்க ரெண்டு பேரோட பேரும், விலாசமும் அந்த சிவப்பு டைரில இருக்கான்னு தேடு... இருந்தா வீட்டுக்கு வா. பஸ்சுக்கு நாழியாயிட்டது! நாங்க புறப்படறோம்!'' என்று சொல்லிவிட்டு மரகதத்தையும் இழுத்துக்கொண்டு தெருவில் இறங்கி நடக்கலானார். ●

UTILISE THIS OPPURTUNITY IN THIS SUMMER HOLIDAYS


Netherland based MNC looking for House Wifes, VRS,business people parttime/full time, as business partners for their expansion.



Interested people please call

Rajkumarv : 9841277026

Magesh : 9994747047



Enjoy Pournami & PRADOSAM AT KAILASH MANASAROVER

திருக்கயிலாயம் – மானஸரோவர்

புறப்படும் தேதிகள் : 18.06.07, 18.08.07, 16.09.07

காட்மாண்டிலிருந்து டயோட்டா கார் மூலம் திருக்கயிலாயம் சென்று தரிசித்து பின் காட்மாண்டு வருவதற்கு 16 நாட்கள் ஆகும். கட்டணம் ரூ.52,007/- மட்டுமே.

திருக்கயிலை பயணத்தின் போது உங்களுக்கு சேவை செய்ய எட்டு ஆண்டுகள் அனுபவம் உள்ள நாங்களே உங்களுடன் வருகின்றோம். சம்பள ஆட்களை அனுப்பவது இல்லை

எங்கள் வெற்றிக்கு இதுவே காரணம்

ஜுலை, ஆகஸ்ட்	15 நாட்கள் அமர்நாத் யாத்திரை (ஹெலிகாப்டர் வசதி உண்டு).
பிரதி மாதம்	அந்தமான் டூர்: கப்பலில் - 10 நாட்கள், விமானத்தில் - 5 நாட்கள்
பிரதி மாதம்	10 நாட்கள் பூரி, கொனார்க், கொல்கத்தா, காசி, கயா, அலகாபாத்.
செப்டம்பர்-17	12* சோதிர்லிங்கம் - 30 நாட்கள், நவசோதிர்லிங்கம் - 16 நாட்கள்.
பிரதி மாதம்	மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து. ஐரோப்பா, சீனா, மொரீசியஸ்.

Special Care for Senior Citizens


குழுவாக வருபவர்களுக்கு கட்டண சலுகை உண்டு. தனியாகவும் தாங்கள் விரும்பும் இடங்களுக்கு சுற்றுலா மற்றும் திருப்பயணம் நடத்தி தருகின்றோம்.

பெங்களூரில் தொடர்புக்கு
கயிலைமணி ரவிகுமார்
22879745

மனோகர் டிராவல்ஸ்
2/176, பெரியண்ணா வீதி, (கலைமகள் ஆரம்பபள்ளி வீதி)
ஈரோடு - 638 001.
போன்: 2269940. மொபைல்: 94433 80159
E-mail : manohartravvels@package tours4u.com




கைலாஷ் டிராவல்ஸ்
11, வீராசாமி வீதி, பெரியமேட்,
சென்னை - 600003.
போன்: 42053923. மொபைல்: 94433 80154
E-mail : kailashtravels@package toure4u.com



கிரேஸியைக் கேளுங்கள்





• **மதுரை முருகேசன், திருச்சி - 18**

இன்று வரை 'விடை' சொல்ல முடியாத 'வினா'வாக இருப்பது எது...?

'கடவுளால் முடியாதது எதுவுமில்லை' என்று தன் பேரனிடம் கூறினார் ஒரு பெரியவர். 'தன்னாலேயே நகர்த்த முடியாத அளவுக்கு ஒரு கல்லைக் கடவுளால் படைக்க மடியுமா...? முடியாதா...?' என்று எதிர் கேள்வி போட்டான் பேரன்... 'முடியும்' என்றால் கடவுளால் கல்லை நகர்த்த 'முடியாது' என்று ஆகி விடும்... 'முடியாது' என்றால் கடவுளால் அப் பேர்ப்பட்ட கல்லைப் படைக்க 'முடியாது' என்று ஆகிவிடும்... 'கல்லுளி மங்கன்' போல் முழித்தார் பெரியவர்...

• **இ.பு.ஞானப்பிரகாசம், மடிப்பாக்கம்**

கல்கி வாசகர்களுக்காக ஒரு பிரத்யேக நகைச்சுவை மரபுக் கவிதை வழங்குங் களேன் ப்ளீஸ்....?

எனது வாடிக்கையான செங்கழுநீர்

கரப்பான் பெண்கள்

பிள்ளையாரிடம் வேடிக்கையாக வேண்டு கிறேன் வெண்பாவில்.... 'பாலும் தெளி தேனும்' மெட்டில் பாடிப் பயனடை யவும்....

'கமர்கட், கடலையுண்டை, குச்சிஐஸ்
மூன்றும்
சமர்ப்பிப்பேன்
நானுனக்கு என்றும்-
அமர்ந்திட்டு
செங்கழுநீர்
பிள்ளையாரே
சாப்பிட்டு ஜல்தி
யாய்
சங்கத் தமிழ்
மூன்றும் தா...'



* விசாகா ஹரி

• சொ.சுப்பராமன், உறையூர்

நானும் வெற்றிலை, பாக்கு, புகையிலை போடுவேன். நாடகம் எழுதப் பட்டணம் வரலாமா....?

வெற்றிலை, பாக்கு, புகையிலை பழக்கத்தை நான் விட்டுவிட்டேன். உங்களுக்கு அந்த டெக்னிக்கை சொல்லித்தர நான் உறையூர் வரலாமா....?

• வீ.பெரியசாமி, தேனூர்

கரப்பான்பூச்சிக்கு எல்லாப் பெண்களும் பயப்படுகிறார்களே ஏன்....?

நான் புலிக்குப் பல் தேய்த்து விடுவேன்... சிங்கத்துக்குத் தலை சீவி விடுவேன்... ஆனால், பாத்ரூமில் 'க.பூச்சி' இருந்தால் போலீஸ் பந்தோபஸ்தோடுதான் குளிக்கச் செல்வேன்... அப்ப நான் என்ன பொம்பளையா..?

• என்.உமா, மேற்கு மாம்பலம்

விசாகா ஹரியின் சுந்தர காண்டம் டி.வி.டி. பார்த்தீர்களா....?

பூச்சிக்கு பயப்படுவது ஏன்?

வால்மீகியின் சுந்தர காண்டத்தில் அனுமான் 'கண்டேன் சீதையை' என்று சமஸ்கிருதத்தில் சொல்வார்... விசாகா ஹரியின் சுந்தர காண்டத்தைப் பார்த்ததில் நான் 'வால்மீகியைக் கண்டேன்', 'கம்பரைக் கண்டேன்', 'தியாகய்யரைக் கண்டேன்', 'துளஸிதாசரைக் கண்டேன்...' ஆறுதலான விஷயம்... வயதாகிக் கொண்டிருக்கிறது என்று நினைத்த நான், விசாகா ஹரியின் ஞானத்துக்கு முன்னால் பொடிப் பையனாகி விட்டேன்....

• பாலு, நாமக்கல்

'ராமன்' காலத்தில் தம்பியுடையான் படைக்கு அஞ்சான் என்பார்கள்...'மோகன்' காலத்தில் எப்படி....?

மாது பாலாஜிபோல தம்பியுடையான் மேடைக்கு அஞ்சான்....

• காமினி, வடபழனி

எழுதும்போதே நீங்கள் ரசித்த நாடக ஜோக்....?

கிரேஸி கோஸ்ட் நாடகத்தில்... ஆவி உலகத்தில் 'அப்பா பேய்-தாத்தா பேய்' சம்பாஷணை....

அப்பா பேய்: டேய் அப்பா... இங்க வாடா..!

தாத்தா பேய்: அடப்பாவி... உன்னைவிட 20 வயசு பெரியவன்... என்னை 'டா' போட்டுப் பேசறியே..!

அப்பா பேய்: செத்த கணக்கை வச்சுப் பாத்தா INFACT நான்தான் உன்னைவிட 20 வயசு பெரியவன்... நீ சாகறச்சே உனக்கு நாற்பது வயசுதான்... ஆனா நான் அறுபது வயசுலதான் செத்தேன்... 60 பெருசா..? 40 பெருசா..? சொல்லு பெருசு..? (பதில் சொல்ல முடியாமல் தாத்தா பேய் முழி முழிக்கும்...)

+2க்குப் பிறகு..?

அள்ள அள்ளப்



நீங்களும் ஆரம்பிச்சுட்டீங்களா!


எம்.பி.பி.எஸ். இன்ஜினீயரிங், பி.காம்., பி.ஏ. என வழக்கமான பிரிவுகள் பற்றி அனைவருக்கும் தெரிந்திருக்கும். தெரியாத படிப்புகளும் ஏராளமாக இருக்கின்றன. அனைத்தும் வேலை வாய்ப்பு சிறப்பாக உள்ள துறைகள்தான். இதோ அந்த லிஸ்ட்....

ஹோட்டல் மேனேஜ்மெண்ட் :

ப்ளஸ் டூ முடித்தவுடன் பி.எஸ்சி. ஹோட்டல் மேனேஜ்மெண்ட் கோர்ஸில் சேரலாம். மூன்றாண்டு படிப்பு. சென்னை, காஞ்சிபுரம், வேலூர், சேலம், நாமக்கல், தருமபுரி, கோயமுத்தூர், ஈரோடு, தஞ்சை, திருச்சி, திண்டுக்கல், மதுரை நகரங்களில் உள்ள சில கல்லூரிகளில் இந்தப் பட்டப்படிப்பு உள்ளது. ஔரங்காபாத்தில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் மூன்று வருட டிப்ளமா கோர்ஸ் நடத்துகிறது.

இன்ஸ்ட்டியூட் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மெட் கேட்டரிங் டெக்னாலஜி அண்ட் அப்ளைட் நியூட்ரிஷன் மும்பை, டெல்லி, சென்னையில் உள்ளது. தேசியக் குழு (National Council) வின் கீழ் இயங்கும் சில கேட்டரிங் கல்வி நிறுவனங்கள் இதற்கான பயிற்சிகளை அளிக்கின்றன. இந்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு இது. டிப்ளமோ பெறுவதற்கு மூன்று வருடங்களும், பட்டப் படிப்புக்கு நான்கு வருடங்

படிப்புகள்



களும் தேவை. மூன்று வருடங்களுக்கான டிப்ளமா கோர்ஸில் 22 வாரங்கள் நான்கு அல்லது ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

மத்திய காலணிப் பயிற்சி மையம்

சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் 1957ம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் இந்த மையம், ஓர் இந்திய அரசு நிறுவனம். இது காலணித் தயாரிப்பில் டிப்ளமா படிப்பை வழங்குகிறது.

வேலைவாய்ப்பு, சுயவேலை என்று இரண்டு கோணங்களிலும் கைகொடுக்கிற கோர்ஸ்கள் உள்ளன. டிப்ளமா இன் ஃபுட்வேர் (Foot Wear) டிசைன் அண்ட் ப்ரொடக்ஷன் கோர்ஸ் இரண்டு வருடங்களுக்கானது. ப்ளஸ் டூ படித்தவர்கள் இதில் சேரலாம்.

இவை தவிர குறுகிய கால பயிற்சிகளும் உண்டு. டிசைன், ஷூ அப்பர் க்ளிக்கிங், ஷூ அப்பர் க்ளோஸிங், ஃபினிஷிங், காலணி தயாரிக்கும் கருவிகளைப் பராமரிப்பது, தோல் பொருள்கள் தயாரிப்பு போன்ற பலவகை கோர்ஸ்கள். ஒவ்வொன்றும் நான்கு வாரத்திலிருந்து பன்னிரண்டு வாரங்கள் வரை மாறுபடுகின்றன. இந்தக் குறுகிய கால கோர்ஸ்கள் வருடத்தின் எந்த நேரத்திலும் துவங்கக் கூடியவை. இவை தவிர, காலணி தொடர்பான பகுதி நேர வகுப்புகளும் நடைபெறுகின்றன.

ஒய்.எம்.சி.ஏ.

விளையாட்டுத் துறையை முழு நேரப் பணியாகக் கொள்ள விருப்பப்படுபவர்கள் ஒய்.எம்.சி.ஏ. அமைப்பில் சேர்ந்து படிக்கலாம். 'ஸர்டிஃபிகேட் கோர்ஸ் இன் பிஸிகல் எஜுகேஷன்' இரண்டு ஆண்டுகளுக்கானது. ப்ளஸ் டூ முடித்தவர்கள் இதில் சேரலாம். 'பேஸிக் கோர்ஸ் இன் பிஸிகல் எஜுகேஷன் அண்ட் ஸ்போர்ட்ஸ்' மூன்று வருடங்களுக்கானது.

பாச்சலர் ஆஃப் பிஸிகல் எஜுகேஷன் ஒரு வருட கோர்ஸ். எந்த ஒரு பட்டதாரியும் இதில் சேரலாம். மாஸ்டர் ஆஃப் ஃபிஸிகல் எஜுகேஷன் இரண்டு வருடங்களுக்கான பயிற்சி. இதைப் பயில ஏதாவதொரு பட்டம் வாங்கியிருப்பதுடன் B.P.Ed. கோர்ஸையும் படித்திருக்க வேண்டும்.

இந்தப் படிப்புகளை முடிப்பவர்கள் பொதுவான அரசுத் துறைகளிலும், சில குறிப்பிட்ட தனியார் நிறுவனங்களிலும் கூட ஸ்போர்ட்ஸ் கோட்டாவில்

ஜி.எஸ்.எஸ்.



வேலைக்குச் சேரலாம். தவிர, படித்து முடித்த பிறகு பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றில் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுத் துறை ஆசிரியராகலாம். ஜிம்களில் பயிற்சியாளராகலாம். ஹெல்த் இன்ஸ்பெக்டர் ஆகலாம்.

சிறுதொழில் சேவை மையம்

மத்திய அரசு ஏற்படுத்தியுள்ள அமைப்பு இது. சிறுதொழில் அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது. இதன் பணிகள் மண்டல அலுவலகங்கள் மூலம் நடக்கின்றன. இதன் தென்மண்டல தலைமை அலுவலகம் சென்னை கிண்டியில் செயல்படுகிறது. கிளை அலுவலகங்கள் கோவை, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ளன.

இதன் கம்ப்யூட்டர் பிரிவில் அளிக்கப்படும் படிப்புகள் :

1. தகவல் தொழில்நுட்பத்தில் மாஸ்டர்ஸ் டிப்ளமோ (ஒரு வருடப் பயிற்சி)
2. மென்பொருள் பொறியியலில் ஹானர்ஸ் டிப்ளமோ (ஒன்றரை வருடம்)
3. கம்ப்யூட்டர் அப்ளிகேஷனில் டிப்ளமோ (ஒரு வருடம்)
4. ஆடோகாடில் டிப்ளமோ (மூன்று மாதங்கள்)
5. மல்டி மீடியா மற்றும் அனிமேஷனில் டிப்ளமோ (மூன்று மாதங்கள்)
6. நெட் வொர்க்கிங்கில் மாஸ்டர்ஸ் டிப்ளமோ (நான்கு மாதங்கள்)

இவை தவிர கால்சென்டர், ரெஃப்ரிஜிரேஷன் மற்றும் செல்போன் சர்வீஸ் ஆகியவற்றில் அவர்கள் அளிக்கும் பயிற்சிகள் வேலைவாய்ப்புகளை அளிப்பனவாக உள்ளன.

> **கால்சென்டர். ரெஃப்ரிஜிரேஷன் மற்றும் செல்போன் சர்வீஸ் ஆகியவற்றில் அவர்கள் அளிக்கும் பயிற்சிகள் வேலைவாய்ப்புகளை அளிப்பனவாக உள்ளன.**

இயந்திரப் பொறியியல், மின் அணுவியல், மின் பொறியியல், உலோகவியல், உலோக நிறைவுப்பணி, வேதியியல், கண்ணாடி மண்பாண்டப் பிரிவு, உணவுப் பொருள் தயாரிப்பு, பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை தயாரித்தல் போன்ற துறைகளிலும் பயிற்சி தரப்படுகின்றன.

தற்போதைய சூழலில் அதிக வேலை வாய்ப்புள்ள கால்சென்டர் பயோ இன்ஃபர்மேடிக்ஸ், உணவுப் பொருள் தயாரிப்பு, மேலாண்மை பயிற்சி, இன்டீரியர் டெகரேஷன் ஆகியவற்றிலும் பயிற்சிகள் உண்டு. பல வருடங்கள் படிக்க வேண்டாம் என்பது முக்கிய வசதி.

(பட்டியல் தொடரும்)

"இத்தனை பக்குவத்த எதிர்பார்க்கல!"



★ ராதிகா செல்வி

மத்திய உள்துறை இணை அமைச்சராக்கப்பட்டிருக்கிறார் திருச்செந்தூர் தொகுதி தி.மு.க. எம்.பி. ராதிகா செல்வி. தமது கணவர் வெங்கடேச பண்ணையார் கடந்த ஆட்சியில் என்கவுன்ட்டரில் சுட்டுக் கொல்லப்பட, நியாயம் கேட்கப் புறப்பட்ட ராதிகா செல்வியை அரவணைத்து எம்.பி.யாக்கி அழகு பார்த்த தி.மு.க., இன்றைக்கு அமைச்சருமாக்கி அவர் மீதான பிடிப்பை அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறது.

''2004 எம்.பி. தேர்தலின்போதுதான் எனக்கு ராதிகா செல்வி அறிமுகம். அப்பொழுது தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கேட்டு, கட்சித் தலைமையிடம் மனுச் செய்திருந்தவர்களில் நானும் ஒருவன். எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆனாலும் ராதிகா செல்வியின் வெற்றிக்காக, தொகுதியில் கடுமையாகப் பணிபுரிந்தேன். 'இவர் வாய்ப்பினை இழந்தவராயிற்றே, தொகுதிக்குள் உண்மையாக வேலை பார்ப்பாரா?' என்கிற சந்தேகம் ராதிகா செல்விக்குத் துளியும் ஏற்படவேயில்லை. அந்த உயர்ந்த பண்புதான் அவரை இந்த உயரத்துக்கு இட்டுச் சென்றிருக்கிறது எனக் கருதுகிறேன்'' என்கிறார் திருச்செந்தூர் நகர இந்திய மருத்துவர்கள் சங்கச் செயலாளரான டாக்டர் வெற்றிவேல்.



★ வெற்றிவேல்



★ திலகவதி பாலன்

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அறங்காவலர்களில் ஒருவரான திலகவதி பாலன், ''பொதுவாகவே தென் மாவட்டங்களில் வெங்கடேச பண்ணையார் குடும்பத்துக்கு நல்ல செல்வாக்கு. தொகுதிக்குள் ராதிகா செல்வியை அனைவரும்



★ யோகராணி, இந்திராணி

அக்கா... அண்ணி... மகளே... மருமகளே என்றுதான் பாசமுடன் அழைப்பார்கள். பெரிய பண்ணையார் குடும்பத்து மருமகள் என்கிற கர்வம் சிறிதும் இல்லாத அவர் எம்.பி. ஆன பிறகுதான், திருச்செந்தூர் மக்களவைத் தொகுதிக்குள் பெருமளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அதிகரித்துள்ளன!'' என்கிறார்.

''திருச்செந்தூர் மக்களவைத் தொகுதிக்குள் இதுவரை மினி பஸ் போகாத குக்கிராமங்கள் பலவற்றுக்கும் சாலை வசதி அமைத்துத் தந்து, மினி பஸ் போக்குவரத்துக்கு வழிகண்டவர் ராதிகா செல்வி. ஆறுமுகனேரி டூ மூலக்கரை மூன்று கி.மீ தூரம், சற்று குறுகலான சாலை. இருபுறமும் உள்ள வயல்களிலிருந்து நான்கடி இடம் கையகப்படுத்தப்பட வேண்டும். இழப்பீட்டுத் தொகை எதுவும் வேண்டாம் என மறுத்து, இடம் தர முன் வந்துள்ளனர் அப் பகுதி விவசாயிகள். இந்த சாலையோர வயல்களில் பெரும்பாலானவை ராதிகா செல்வி குடும்பத்துக்குச் சொந்தமானவை'' என்று மூலக்கரை ஊராட்சி மன்றத் தலைவர் குமரேசன் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட, ''எங்கள் ஊர் வடபத்ர காளியம்மன் மிகவும் சக்தியுள்ள தெய்வம். அவள் அருளால்தான் இந்த மண்ணோட மருமகளுக்கு மத்திய அமைச்சர் பதவி கெடைச்சிருக்கு. ராதிகா செல்வி துணிச்சலான பொண்ணு. எம்.பி. ஆனதுக்கப்புறம் தொகுதிப் பிரச்னைகளை சுமூகமாகத் தீர்த்து வைக்குது. இவ்வளவு பக்குவமா நடந்துக்கும்னு யாருமே நெனைக்கலை. கார்ல போகும்போது கிராமப் பகுதிகள்ல தெரிஞ்ச முகங்களைப் பார்த்துட்டாப் போதும். காரை நிறுத்தச் சொல்லி அவுங்ககிட்டே ரெண்டு வார்த்தையாவது பேசிட்டுத்தான் போகும்!'' என்கின்றனர் மூலக்கரையைச் சேர்ந்த யோகராணி, இந்திராணி இருவரும். முறையே இருவருக்கும் ராதிகா செல்வி மருமகள், பேத்தி முறை வேண்டுமாம்.



★ பாலசந்திரன்

''ராதிகா செல்விக்குத் திருமணம் ஆனதிலிருந்து அவரை கவனித்து வருகிறேன். எம்.பி. ஆன பின் அவரிடம் ஒரு முதிர்ச்சி தெரிகிறது. பல ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த தூத்துக்குடி - திருச்செந்தூர் அகல ரயில் பாதைத் திட்டம், தற்போது அவரது தீவிர முயற்சிகளின் பலனாகச் செயல் வடிவம் பெற்று பணிகள் நிறைவு பெற இருக்கிறது'' என்கிறார் எழுத்தாளர் ரமணிச்சந்திரனின் கணவரும் மூலக்கரை கிராமத்தைச் சேர்ந்த வருமான பாலச்சந்திரன்.



★ குமரேசன்

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

தயாநிதி மாறன் அளவுக்கு ராசா செயல்படுவாரா?


நீங்கள் கேட்டவை
தராசு



• செல்வாக்கும்...



• ...செயல்பாடும்!



• ஏற்கத்தக்க யோசனைகள்

1. வே.ராக்கேஷ், சென்னை - 42

? ராகிங் எஃப்.ஐ.ஆர். குறித்து...?

! நீதித்துறையும் சட்டமும் அச்சுறுத்துவது அவசியம்தான். ஆனால் அதை மட்டும் நம்பினால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படவும் கூடும். எனவே, கல்லூரி முதல்வரும் நிர்வாகிகளும் சீனியர்களுடன் பேசி, இந்தக் கொடுமைக்குப் பதில், மேளதாள வரவேற்புக்கு வழிவகுக்க வேண்டும். மாணவர் சக்தி அப்போது ஆக்கபூர்வமாக வெளிப்படும். இதற்கு ஆகக் கூடிய செலவை நிர்வாகமே ஏற்க வேண்டும்.

2.எல்.வெங்கட்ராமன், கும்பகோணம்

? தயாநிதி மாறன் அளவுக்கு ராஜா அத்துறையில் செயல்பட மாட்டார் என்பது எனது கருத்து... என்ன சொல்கிறீர்கள்?

! என்னுடைய கருத்தும் அதுவே. கருணாநிதிக்கு நெருங்கியவர் என்பதால் பெற்ற செல்வாக்கு மட்டுமே தயாநிதி மாறனின் வெற்றிக்குக் காரணமல்ல. அவர் மெய்யாலுமே அசாதாரண அறிவுடனும் ஊக்கத்துடனும் செயல்பட்டார். ஆனால், நேர்மையாக நடந்து கொண்டாரா என்பது நமக்குத் தெரியாது.

3. லலிதா செல்லப்பா, சென்னை - 75

? கருத்துக் கணிப்புக்கும் உண்மைக்கும் இடையே உள்ள தூரம் என்ன...?

! அந்தரங்கச் சுத்தமான செயல்பாட்டுக்கும் கள்ளம் புகுந்த உள்ளத்துக்கும் இடையில் உள்ள தூரம்தான்! அலுப்பறியாத உழைப்புக்கும் அள்ளித் தெளித்த அவசரக் கோலத்துக்கும் இடையில் உள்ள தூரம்.

4.பி.பத்மா, அரங்கநாதபுரம், புது அன்பழகன், கூடுவாஞ்சேரி. ☐

? ஆன்மிகம் என்பது நல்லொழுக்கம், அன்பு காட்டுதல் ஆகியவற்றுக்கான பாதை



* முன்னேற்ற முனைப்பாடு!

என்கிறபோது சிலர் அதை விட்டுவிட்டு, தலையில் தேங்காய் உடைப்பது போன்ற மூட நம்பிக்கைகளில் ஈடுபடுகிறார்களே? உயர் ஜாதியினர் என்றழைக்கப்படுவோர் இப்படி நடந்துகொள்வதில்லையே?

! இதுபோன்ற கொடூரங்கள் ஜாதி சார்ந்தவை அல்ல; அறியாமையே அடிப்படை. மூட நம்பிக்கையை ஒழிக்காத கல்வியும் அவற்றை நீக்க முன்வராத மடாதிபதிகளும் ஆன்மிக உபதேசிகளும் இருந்தும் பயன் என்ன?

5. பூங்கா பெரியசாமி, அரியலூர்

? ''திறமை மிக்க இந்தியர்கள் வெளி நாடுகளுக்கு வேலை தேடிச் செல்வதில் தவறில்லை; அது ஒரு நேர்மையான முன் னேற்றம்தான்'' என்று மத்திய அரசு சொல்வது சரியா?

! எதிர்மறையான முன்னேற்றம்தான்; நேர்மையான முன்னேற்றம் அல்ல. பிற நாடுகளின் இலாபம் இந்தியாவின் நஷ்டமே. விஞ்ஞான உலகுக்கே இலாபம் என வாதாடலாம். ஆனால் அந்த விஞ்ஞான வளர்ச்சியின் பலன்கள் விஞ்ஞானியின் தாய்நாட்டுக்கு உடனுக்குடன் கிடைப்பதில்



* இளமையும் 'உ'ரமும்!

லையே!

6. ரா.ஜெசிந்தா,

ஆவணத்தாங்கோட்டை

? தமிழக சட்டசபைக்குப் புதிய கட்டடம் கட்ட முதல்வர் முன்வந்தது நல்ல விஷயம் தானே?

! ஏற்கெனவே சட்டமன்றம் உள்ள இடம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. ஏராளச் செலவில் பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதை மாற்றுவது பெருமைக்குரியதல்ல. பிரிட்டனில் பார்லிமெண்ட்டையோ, பிரதமர் இல்லமான நெ 10, டௌனிங் தெருவையோ மாற்ற கனவிலும் நினைக்க மாட்டார்கள்.

7. எம்.பாஸ்கர், திண்டுக்கல்

? ''கலைஞரின் பொன்விழாச் செலவுக் கணக்குகளைத் தரத் தயார்; அதே சமயம் வளர்ப்பு மகன் திருமணச் செலவுக் கணக்குகளை ஜெ. தருவாரா?'' என்று ஆற்காடு வீராசாமி கேட்கிறாரே?

! அவர்தான் தரவில்லை; கெட்ட பெயர் வாங்கித் தேர்தலிலும் தோற்

❒ ரூ.100/- முதல் பரிசைப் பகிர்ந்து கொள்ளும் இருவர்:

பி.பத்மா,
அரங்கநாதபுரம், கோவை.
புது-அன்பழகன்,
கூடுவாஞ்சேரி, காஞ்சிபுரம்

✱ ரூ.50/- இரண்டாம் பரிசு பெறுபவர்:

அ.பழநி,
தெங்கம்புதூர்

றார். நீங்களாவது நல்ல பெயரெடுங்களேன்; சால்ஜாப்பு சொல்லாமல் வரவு - செலவுக் கணக்கு காட்டுங்களேன்!

8.இரா.புவனேஸ்வரி, சென்னை - 81

? ''நாத்திகனின் வேலையே கடவுளை இழுத்துப் பேசுவதுதானே'' என்கிறாரே கலைஞர், இது குறித்து..?

! இழுத்துப் பேசலாம்; இழிவுபடுத்திப் பேச உரிமையில்லை. உதாரணமாக, ''கடவுள் இல்லை; நான் நம்பவில்லை'' என்று கூறலாம்; ஆனால், ''கடவுளை நம்புகிறவன் முட்டாள்'' என்று கூற யாருக்கும் உரிமை இல்லை. அது பிறர் சுதந்திரத்தில் தலையிடுவதாகும்; அரசியல் சாசனத்துக்கு முரணானதாகும்.

9. ரூபாவதி சௌந்தர்ராஜ், தேனூர்

? இனி ரேஷன் கடைகளுக்கு ஞாயிற்றுக் கிழமை விடுமுறையாமே, வரவேற்கலாமா?

! முழு, முட்டாள்தனமான அரசு உத்தரவுகளை வரவேற்பதானால் இதையும் வரவேற்கலாம். தெரிந்தே செய்யும் தவறுகளை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

10.வசீகரன், சென்னை - 18

? அடுத்து பிரதமர் பதவிக்குக் குறிவைப்பேன் என்கிறாரே உ.பி.யில் வென்ற மாயா?



! இப்போது உ.பி.யில் முதல்வர் ஆனது போல மக்கள் ஆதரவுடன் பிரதமர் ஆனால் வரவேற்கலாம். குறுக்கு வழியில் குறி வைத்தால் அவரும் நாமும் குட்டிச்சுவர் தான்!

11. அ.பழநி, தெங்கம்புதூர். ★

? To become a leader, be a leader என்பது ஆங்கிலப் பழமொழி; அதன்படி அப்பழுக்கற்ற, முன்மாதிரியான தலைமை பண்புடைய அரசியல் தலைவர்கள் இப்போது உள்ளனரா? இனியும் வருவார்களா?

! தேடி ஏமாற்றமடையாமலிருக்க வேண்டுமானால், எழுத்துகளைக் கொஞ்சம் மாற்றிப் போட்டுக்கோங்க - To become a dealer, be a dealer என்று... நிறைய பேரை அடையாளம் காண்பீர்கள்!

12. ஜி.பாலசுப்ரமணியன், விருதுநகர்

? தேசிய ஒருமைப்பாடு கருதி நதிநீர்ப் பிரச்னையில் அமைதி காக்க வேண்டியுள்ளது என்கிறாரே கலைஞர்?

! அமைதி காப்பதில் தவறில்லை; அது செயலின்மையாக மாறிவிடக் கூடாது. ''தென்மாநில முதல்வர்கள் மாநாடு, பிரதமர் தலைமையில் நடைபெற வேண்டும்; தமிழகத்தில் நதம் (மேற்கு நோக்கிப் பாயும் ஆறு) இல்லாததால் நதிநீர் விஷயத்தில் தமிழகம் முன்னுரிமை கோர வேண்டும்'' என்ற ராமதாஸ் யோசனைகள் ஏற்கத்தக்கவை.

வாசக தராசுகளே!

எந்த பதில் சிறந்த பதில்? இவ்வார பதில்களுள் மிகச் சிறந்ததன் எண்ணைக் குறிப்பிட்டு, 'வாசக தராசு 3.6.07, கல்கி, சென்னை - 32' என்ற முகவரிக்கு (அஞ்சலட்டையில்) அனுப்புங்கள். அதிக வோட்டுகளைப் பெறும் பதிலைக் குறிப்பிட்டு அனுப்பும் வாசகர்களுள் ஒருவருக்குக் குலுக்கல் முறையில் ரூ.100/ பரிசு!

கல்கி 6.5.07 இதழில் வெளியான பதில்களுள் அதிக ஆதரவு பெறுவது கேள்வி எண்: 13 அதனைத் தேர்வு செய்து பரிசு பெறுபவர்: **முத்து ஆனந்த், வேலூர்.** வாழ்த்துகள்!

வளம் தரும் கோயில் - 8

"எல்லாம் என் தலையெழுத்து!" என்று வாழ்க்கையில் ஏதேனும் ஒரு கட்டத்திலாவது சலித்துக் கொள்ளாதவர்கள் இருக்கிறார்களா?! அவ்வாறு இருப்பின், அவர்களுடைய தலையெழுத்து மிகச் சரியாக எழுதப்பட்டதாக இருக்க வேண்டும்! வேடிக்கை ஒரு பக்கம் இருக்க, எப்படிப்பட்ட தலையெழுத்தையும் ஆழ்ந்த இறை பக்தியாலும் பிரார்த்தனையாலும் மாற்ற முடியும் என்கிற உன்னத கோட்பாடு நம் பாரம்பரியத்தில் இருக்கிறது.

"நான் என் செய்யும் கோள் என் செய்யும்?" என்று ஞானசம்பந்தர் கேட்டதும், "கற்றுணை பூட்டி கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று திருநாவுக்கரசர் பாடியதும் பிரார்த்தனையின் வலிமை தந்த வைராக்கியத்தினால் தானே!

இந்த உணர்வுக்கு சாட்சி சொல்லிக் கொண்டு நிற்கும் திருத்தலம் திருப்பட்டூர். திருச்சி - பெரம்பலூர் (தேசிய நெடுஞ்சாலை) மார்க்கத்தில், சிறுகனூர் அருகே, மேற்கு நோக்கி கிளைத்துச் செல்லும் சாலையில் இருக்கிறது இந்தச் சின்னஞ்சிறு கிராமம்.



* பிரம்மா



* கோயில் தோற்றம்

நாம் சென்று சேர்ந்த மாலை வேளையில், இங்குள்ள பிரம்மபுரீசுவர் ஆலயத்தில் சுவாமியும் அம்பாளும் பிரதோஷ காலத்துக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். சிரத்தையுடன் ஆஜராகியிருந்த கிராம மக்கள் கைகூப்பி வணங்க, அருகம்புல்லில் அடர்த்தியான மாலையணிந்து, கண்களை மறைக்கும் அளவுக்குத் தலையில் பூச்சுமை தாங்கி நின்றார் நந்திகேசுவரர். பாஸ்கர குருக்கள் நைவேத்தியத்தை எடுத்து வைத்து, மணியை அடித்து, பிரதோஷ வழிபாடைத் துவக்கினார். அர்ச்சனை தீப, தூப, ஆராதனைகள், எல்லாமே நந்திக்குத் தான் முதலில்... அப்படியே கூட்டம் பின் தொடர்ந்து வந்து உள் பிராகாரத்தில் நிற்க, அங்கே கொலுமண்டபத் திரைக்குள் சென்றார் குருக்கள். சில வினாடிகள் சென்று திரை விலக, பல்லக்கில் பிரம்மபுரீசுவரரும், அவரது ஈசுவரியும் அலங்கார அழகுடன் பல்லக்கில் காட்சி தந்தனர். நாதஸ்வர இசை முழங்க, பக்தர்கள் தலைக்குமேல் கைகூப்பி "சம்போ மஹாதேவா!

சீதா ரவி

திருத்தி எழுதும் திருப்பட்டூர்!

ஐந்து வகை எண்ணெய் கலந்து, முப்பத்தாறு தீபங்கள் ஏற்றி, சிறிதும் பெரிதுமான சில நியமங்கள் செய்தால் தலையெழுத்து மாறும்!

சிவாய நம!'' என்றெல்லாம் கோஷமிட, பூஜைகளையும் உபசாரங்களையும் களிப்புடன் ஏற்றுக்கொண்டு, திருச்சுற்றை வலம் வரத் தயாராயினர் அந்த திவ்ய தம்பதி. திடகாத்திரர்களான ஊர் இளைஞர்கள் தோள் தூக்க, பல்லக்கு புறப்பட்டு பிராகாரத்தை வலம் வந்தது. சிந்தூர வண்ணச் சேலையில் அம்பாளின் பொன்முகம் மேலும் பிரகாசிக்க, அவ்வழகு தன்னில் ஓர் அம்சம் என்ற பெருமிதத்தில் ஈசனின் முகம் மின்ன, இருவர் அரவணைப்பும் கிடைத்த சுகத்தில் கந்தப் பெருமான் மலர்மாலைகளிடையே புதைந்துபோய் மகிழ்ந்து கொண்டிருந்தார்.

நாதஸ்வர கோஷ்டியும் கிராம மக்களும் முன் - பின் தொடர, அம்பாளும் ஈசுவரனும் பிராகாரத்தின் நான்கு புறங்களிலும் நின்று விச்ராந்தி செய்து கொண்டு நிலைக்குத் திரும்பினர்.

அதன் பிறகுதான் மூலவரான பிரம்மபுரீசுவரருக்கு அர்ச்சனை செய்து தீபாராதனையும் பிரசாதங்களும் அளித்தார்கள். உத்ஸவருக்கு சற்றும் குறையாத அழகுடையவர் இந்த மூலவர். அம்பாள் பிரம்மஸம்பத் கௌரி அதே பிராகாரத்தில் இல்லாமல் அடுத்துள்ள தனிக்கோயிலில் கம்பீரமாக நிற்கிறாள். பிரதோஷம் என்பதால், மூலஸ்தான மூர்த்தங்களுக்கும் அலங்காரம் விசேஷமாக இருக்கின்றன.

எல்லாவற்றையும்விட பெரிய விசேஷம் இந்த இரு கருவறை

❋ பல்லவர் காலத்து நந்தி...?



களையும் அடுத்து, கோயில் வளாகத்துக்குள்ளேயே இருக்கும் சிறிய நிலப்பரப்பில் காத்திருக்கிறது. அதைக் காணும் முன் இத்தலத்துக்குப் பெயரை வாங்கித் தந்த பிரம்மாவைப் பார்த்துவிடுவோம்.

பிரம்மாண்டமான பிரம்மாதான்! மூலஸ்தானத்தை அடுத்து, உள் பிராகாரத்திலேயே இவருக்குத் தனி சன்னதி. முழுதும் மஞ்சள் காப்பு தரித்துக் கொண்டு குளுமையாய் இருக்கிறார். இவ்வாறு மஞ்சள் / அரைத்த சந்தனக் காப்பு சார்த்துவது தோஷ நிவர்த்திக்கான பிரார்த்தனையின் ஓர் அங்கம் என்கிறார்கள். நேர்ந்து கொண்ட பக்தர்கள் தங்கள் கையாலேயே இதைச் செய்ய வேண்டும்; புளியோதரை உருண்டைகள் பிடித்து ஒரு குறிப்பிட்ட வரிசையில் அடுக்கி நைவேத்தியம் செய்து வினியோகிக்க வேண்டும்; ஐந்து வகை எண்ணெய்களைக் கலந்து 36 தீபங்கள் ஏற்ற வேண்டும். இன்னும் சிறிதும் பெரிதுமான நியமங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் செய்தால் தலையெழுத்து மாறும்; தடைகள் நீங்கும் என்று சொல்கிறார்கள். விரும்புவோர் செய்யலாம் அல்லது வெறுமே தரிசனம் செய்துவிட்டு, "எனக்கு நீ விதித்ததை ஏற்கும் பக்குவத்தையும் பலத்தையும் நீயே கொடுத்துவிடு என்று சின்னதாக ஒரு பெட்டிஷன் போட்டுவிட்டு நிம்மதியாக, சந்தோஷமாக வந்துவிடலாம்.

சரி, இந்த பிரம்மாவுக்கு இவ்வளவு மகிமை ஏன் என்றுதானே கேட்கிறீர்கள்..? கதை இருக்கிறது - ஆதியில் பிரம்மனுக்கு ஐந்து தலைகள் இருந்தனவாம். பரமேசுவரனைப் போலவே தனக்கும் ஐந்து தலைகள் என்கிற அகங்காரம் கண்ணை மறைத்துவிட்டது! அதை அடக்கி, பாடம் கற்பிக்க ஒரு தலையைக் கொய்து, படைப்பு ஆற்றலையும் பிரம்மாவிடமிருந்து நீக்கிவிட்டாராம் ஈசுவரன். உணர்ந்து, வருந்தி, திருந்தி, பிரம்மா முறையிட்டபோது சிவன் ஐந்தாவது தலையைத் திருப்பித்தராவிட்டாலும் படைப்பு ஆற்றலை மீண்டும் பிரம்மாவுக்கு வழங்கியிருக்கிறார். அவ்வாறு பிரம்மாவின் தலையெழுத்தே மாறிய தலம்தான் திருப்பட்டூர் என்பதால் இந்த பிரம்மாவிடமே வேண்டிக் கொள்வது வழக்கமாகியிருக்கிறது!

பிரம்மா சன்னதிக்கு அருகிலேயே திருச்சுற்று மண்டபத்தில் பதஞ்சலி முனிவரின் ஜீவ சமாதி இருக்கிறது.

பதஞ்சலி முனிவர், நடராஜருக்குப் பூ பறிக்க ஏதுவாக, தமது உடலின் கீழ்ப் பாகத்தில் பாம்பு வடிவத்தைக் கொண்டிருந்தார்; மரங்களில் சர சரவென்று ஏறி பூக்களைக் கொய்வார் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். யோக சாஸ்திரத்தை நிர்ணயித்தவரும் இவரே என்றும் ஏற்கிறோம். இத்தகைய மகான்கள், சித்த புருஷர்களுக்கே உரிய ஆற்றலுடன் சூக்ஷ்ம வடிவத்தில் இன்னமும் நம்மிடையே இருப்பதாகக் கருதுவது நமது மரபு; பண்பாடும் கூட. இதற்கேற்ப, திருப்பட்டூரில் பதஞ்சலி முனிவர் ஸ்தூல சரீரத்தைத் துறந்து, சூக்ஷ்ம



★ நந்திகேசுவரருக்குப் பூஜை

ரூபம் கொண்டு உறைகிறார். லிங்க வடிவம் ஒன்று சமாதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அதன் பின்னணியில் பதஞ்சலி முனிவர் வரை படம் ஒன்று, தற்கால கற்பனையாக வடிக்கப்பட்டு காட்சி தருகிறது. அமைதியான சூழலில் இப்பகுதியில் நுண்ணிய அதிர்வுகளை உணரமுடிகிறது.

திருச்சுற்று வலம் முடித்து, பிரம்ம புரீசுவரியையும் தரிசித்துவிட்டு, அவள் சன்னதியையொட்டிய பரந்த வளாகத்துக்குள் சென்றால், பன்னிரண்டு சிறு சிவாலயங்கள் தனித்தனியே காட்சி தருகின்றன. பஞ்ச பூத ஸ்தலங்கள் தவிர, இந்தியாவின் முக்கியமான சிவாலயங்களின் பிரதிநிதித்துவ கோயில்கள் இவை. நடப்பதற்கு ஓர் ஒற்றையடிப் பாதை மட்டுமே இருக்கிறது. கரடுமுரடான சுற்றுச்சூழல் என்றபோதிலும் அரிய, அழகான அமைப்புகளில் ஒவ்வொரு குட்டிக் கோயிலும் கட்டப்பட்டிருக்கிறது. இங்குள்ளவற்றுள் மிகப் பழைமை வாய்ந்ததாகக் காட்சி தருவது கைலாச நாதருக்கான கோயில். பல்லவர் காலத்துக் கட்டுமானம். விமான அமைப்பும், பிராகாரத்தின் உயரமும் எதிரே உள்ள நந்தியின் தத்ரூபமும் காலத்தை எடுத்துச் சொல்லுகின்றன.

பூஜை பொறுப்புகளையெல்லாம் குறைவின்றி முடித்துவிட்டு இந்த வளாகத்தை நமக்குச் சுற்றிக்காட்டும் பாஸ்கர சிவாச்சார்யார், இவ்வளாகத்தைத் தொல்பொருள் ஆய்வுத் துறை பொறுப்பேற்றுப் பராமரிக்க வேண்டும் என்று ஆவல் தெரிவிக்கிறார். அதற்கான வேண்டுகோள் மாவட்ட கலெக்டரிடம் தரப்பட்டு அவரது கோப்புகளில் காத்திருப்பதாகவும் சொல்லுகிறார்.

பிரம்மபுரீசுவரர் கோயிலின் வருமானம் இந்தப் பன்னிரு கோயில் வளாகத்தையும் பராமரிக்கக் காணாது. திறந்தவெளியில் வரிசையாக நிற்கும் இவற்றைச் சீர் செய்து திருத்தமாக்கினால், ஜீவ களையுடன் இருப்பதோடு இவற்றின் அருமை பெருமையும் ஊரறிய, உலகறிய பிரகாசிக்கும்.

மிகுந்த அக்கறையுடன் விஷயங்களை விளக்கும் பாஸ்கர சிவாச்சார்யாரிடம் ''எங்கே பயிற்சி பெற்றீர்கள்?'' என்று கேட்கிறோம்.

''அதெல்லாம் ஏதும் பெறவில்லை. நான் படித்தது பட்டப்படிப்புதான். ஆனால், இந்தக் கோயிலில் பூஜை செய்வதற்கு ஆள் கிடைப்பது சிரமமாக இருந்தது. என்னைப் பொறுப்பேற்கச் சொன்னார்கள். எப்படியோ, பிரம்மபுரீசுவரர்தான் என்னை ஆட்கொண்டு வழிநடத்திக் கொண்டிருக்கிறார்...'' என்கிறார்! அவர் தலையெழுத்தைத் திருத்தமாகத்தான் எழுதியிருக்கிறார் பிரம்மபுரீசுவரர்!



* பிரதோஷ காலம்

தொடர்புக்கு :


தொலைபேசிகள் : 0431-2650439, 9443817385

ஈஓ : ஜி.சம்பத்குமார், தொலைபேசி : 9443124558

மின் அஞ்சல் : thirupatturbranmapurishwarar@org.com

படங்கள் : **திரு அரசு**

“இனி எதிர்காலத்தில் இவர்களை நம்பிப் பயனில்லை என்ற முடிவுக்கு கலைஞரை தள்ளிவிட்டு விட்டன தயாநிதி–கலாநிதியின் செயல்பாடுகள்!”



படம் : ஸ்ரீஹரி

ஜூன் 3ல் அறிவிப்பு வெளியிடப்பட்டு, ஆகஸ்ட் 15ல் உதயமாகவிருக்கிறது கலைஞர் (?) டீ.வி.!

தயாநிதி மாறனை மத்திய அமைச்சரவையிலிருந்து நீக்குவது என்று முடிவெடுத்தபோதுகூட தொலைக்காட்சி துவங்க வேண்டும் என்ற எண்ணம் தி.மு.க.வில் இல்லை. ஆனால், அதன் பிறகு மாமல்லபுரம் ஜி.ஆர்.டி. கடற்கரை ஹோட்டலில் கலைஞர், துரைமுருகன், ஸ்டாலின் உள்ளிட்டோரின் ஆலோசனையின்போதுதான் தனி டீ.வி. சேனலுக்கான விதை போடப்பட்டது. மதுரைச் சம்பவங்களைத் தொடர்ந்து, சன் செய்திகளில் அழகிரியை வன்முறையாளராகச் சித்திரித்தது கலைஞரை ரொம்பவே அப்செட்டாகிவிட்டது. என்னதான் பிரச்னையாக இருந்தாலும், குடும்பத்து உறுப்பினரையே அம்பலப் படுத்திய தயாநிதி - கலாநிதியின் செயல்பாடுகள், ‘இனி எதிர்காலத்தில் இவர்களை நம்பிப் பயனில்லை’ என்ற முடிவுக்கு கலைஞரைத் தள்ளிவிட்டு விட்டன. இந்த யோசனைக்குத் தோதாக, கைவசம் தொலைக்காட்சி சாட்டிலைட் விண் தொடர்பு உரிமமும், தொழில்நுட்ப வசதியும் இருந்ததால், டீ.வி. துவங்குவதில் முழு மூச்சாக இறங்கிவிட்டது தி.மு.க.!



‘‘இதற்கும் தி.மு.க.வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ‘கலைஞர் டீ.வி.’ என்று பெயர் வைத்திருப்பது பொதுவாகக் கலைஞர்களைக் குறிக்கும்’’ என்று ராஜ் தொலைக்காட்சித் தலைவர் ராஜேந்திரன் சொல்வதைச் சிறு குழந்தைகூட நம்ப மறுக்கும். மத்தியில் ஆட்சியில் இருப்பதால் சேனல் நடத்த உடனே உரிமை பெறுவது என்பது தி.மு.க.வுக்குப் பெரிய காரியமில்லை. தயாநிதி மாறனின் அதிகார பலத்தில் ராஜ் தொலைக்காட்சி வெகுவாகவே முன்பு பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதை ஒரு பழிதீர்க்கும் பாணியில் ராஜ் தொலைக்காட்சி செயல்படுத்தும் என்றாலும்கூட ‘நாளை நம்மைக் கறிவேப்பிலையாகத் தூக்கியடித்து

இனி சன் டீ.வி. என்னவாகும்?





● ராஜேந்திரன்



விடுவார்களோ' என்ற பயமும் அவர்களுக்கு இல்லாமல் இல்லை.

சரி, இனி சன் டீ.வி. என்னவாகும்? ''அறிவாலய கட்டடத்தில் இருக்கும்வரை, தி.மு.க.வைப் பற்றியோ, கலைஞரைப் பற்றியோ எந்தவிதப் பாதகமான செய்திகளையும் அது சொல்லாது. சொன்னால், நீண்ட நாட்களுக்கு அந்தக் கட்டடத்தில் இருக்கவும் முடியாது. கழுத்தைப் பிடித்துத் தள்ளும் முன் வேறு இடத்துக்குப் போய் விடும். அதன் பிறகு சன் டீ.வி.யின் போக்கைக் கவனிக்க வேண்டும்'' என்கிறார்கள் தி.மு.க. பிரமுகர்கள்.

தமிழகத்தில் உள்ள ஆறு மாநகராட்சிகளின் கேபிள் வினியோகம், சுமங்கலி கேபிள் விஷன் வசம் உள்ளது. இதை கலாநிதியிடமிருந்து பிடுங்குவதில் அவசரம் காட்ட வேண்டாம் என்று தி.மு.க. பிரமுகர்கள் சொல்லி வருகிறார்கள். கலைஞர் டீ.வி.க்குப் பொதிகை தொலைக்காட்சியின் முன்னாள் இயக்குநர் நடராஜன் பொறுப்பாக இருப்பார் என்று சொல்லப் படுகிறது. மேலும் கலைஞர் டீ.வி. வருவதால் சன் டீ.வி. மட்டுமல்லாமல் தங்கபாலு டீ.வி.யும் வசந்த் டீ.வி.யும் கலங்கித்தான் போயிருக்கின்றன. இதற்கிடையில் சென்னை எம்.ஆர்.சி. நகர், நந்தம்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள சொந்தக் கட்டடங்களுக்கு சன் குழும அலுவலகமும், ஸ்டுடியோவும் குடி பெயரலாம் என்கிறார்கள்.

இனி தயாநிதி - கலாநிதி குடும்பத்துக்கும் கலைஞர் குடும்பத்துக்கும் நெருக்கமே ஏற்படாதா என்றால், ''என்றைக்கு ஆட்சியைக் கலைப்போம் என்று அ.தி.மு.க.காரர்களைப் போல தயாநிதி உள்துறைச் செயலாளரிடம் பேசினாரோ, அன்றே கலைஞர் மனமுடைந்து போய் விட்டார். இனி அரசியல் ரீதியாக எந்த உறவும், ஆதரவும் அவர்களுக்கு இருக்காது'' என்கிறார்கள் தி.மு.க. முக்கிய பிரமுகர்கள். இதனிடையே விரைவில் தமது கட்சிக்கென தனி சேனல் துவங்கப் போவதாக அறிவித்திருக்கிறார் விஜயகாந்த்!

- ப்ரியன்



ஆறுதல் மெழுகுவர்த்தி!

டயாபடீஸுக்கான நவீன சிகிச்சையை வெளியிட்டு பெரியதொரு சேவை செய்து விட்டீர்கள்!

- ச.நாராயணன்,
பாளையங்கோட்டை

'டிரைவிங் லைசென்ஸ் பெறுவது எப்படி' பயனுள்ள வகையில் இருந்தது. இதுபோன்ற கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடவும்!

- எஸ்.ராமசாமி, ஈரோடு

சினிமா குப்பைத் தொட்டியில் 'தங்கர்பச்சான்' போன்ற மெழுகுவர்த்திகள் வந்திருப்பது ஆறுதலானது!

- இரா.இராஜேந்திரன்,
மயிலாடுதுறை

'இறங்கி வா இதயா' சிறுகதை எங்களின் இதயத்தைத் தொட்டது. இரண்டே பக்கங்கள் எனினும்

இலட்ச ரூபாய் பரிசுப் போட்டி முடிவுகள் அடுத்த இதழில்...

இனிமை, இளமை!

- சரஸ்வதிபஞ்சு, திருச்சி

'நொண்டிச் சேவல்' சிறுகதையில் சேவலின் ஆசையை நிறைவேற்றிய மாதவனுக்குக் கைகொடுக்க மாலதி வந்தது அவன் செய்த புண்ணியமே!

- பி.சிவா,
பாளையங்கோட்டை

சேனையைப் பயிரிடுவதால் விவசாயிகளுக்குப் பலவிதத்திலும் நன்மை என்பதை படிக்கும்போது, ஊர் ஊருக்குச் சேனையைப் பயிரிடலாம் போலிருக்கிறதே!

- இராஜேந்திரன், லால்குடி

கலைஞர் 50 ஸ்கேன் ரிப்போர்ட் படிக்கும்போது சாதனைகள் ஆச்சரியமாகவும், பின்னடைவுகள் அதிர்ச்சியாகவும் இருந்தன.

- கா.சங்கர், சாலை அகரம்

தவிர்க்க இயலாத காரணத்தால் 'ராசிபலன்' பகுதி இந்த இதழில் இடம்பெறவில்லை. அடுத்த இதழில் வழக்கம்போல் வெளிவரும்.

ரா. பார்த்திபன்



சிரிக்காம... சீரியஸா... சிந்திக்க வேண்டிய...

ஒரு மனிதரை நாம் என்னவாகப் பார்க்கிறோம் - அவர் தன்னை என்னவாகப் பார்க்கிறார் என்பதற்கான வித்தியாசம், எந்த அளவையினாலும் கணக்கிட இயலா நிலையில் இருப்பதைப் பார்க்கலாம்.

'வெற்றிக் கொடிகட்டு' படத்தின் பாடல் காட்சிக்காக நானும் செல்வி மீனாவும் வெளியூர் + மாலை + மலை + மரத்தடியில் (வேர்க்)கடலை போட்டுக் கொண்டிருந்தோம். சற்று தூரத்தில் ஒருவர் சைக்கிளை தன் மீது சாய்த்தபடி சில்ஹவுட்டில் நின்றிருந்தார். 'சில்ஹவுட்' என்றால், குறிப்பிட்ட பிம்பத்தின் பின்புறம் பரந்து விரிந்து கிடக்கும் வெளிச்சத்தில் அப்பிம்பம் நிழல்போல கருமையாய்த் தெரியும். ஆனால், மஞ்சள் வெயில் தன் உருவத்தில் படும்போது கரிக்கோடுகளால் வரைந்த உருவம்போல அவர் இருந்தார்.

அவரை நான் பார்த்தேன் - ஆனால் கவனிக்கவில்லை, கவனத்தில் கொள்ளவுமில்லை. மீனாவுடனே பேசிக் கொண்டிருந்தேன். மீனாவின் உதடுகள் என்னிடம் பேசிக் கொண் டிருக்க, அவர் பார்வை சைக்கிளைசாத்தனாரிடம் சென்றிருந்தது.

''அந்த ஆளப் பாருங்களேன்... என்னையே எப்படிப் பாக்குறாருன்னு'' - மீனா.

பார்த்தேன்; எரிந்த தீக்குச்சியின் தலையைப்போல் இருந்தது அந்த சைக்கிளை சாத்தனாரின் முகம். கைத்தறி நனைத்து, பிழிந்து தொங்கவிட்டால் எப்படி முறுக்கிக் கொண்டிருக்குமோ... அப்படி நரம்புத் தளர்ச்சியால் முறுக்கிக் கொண்டிருந்தன அவருடைய கால்கள். சைக்கிள் ஹேண்ட்பாரில் கோழி ஒன்று 'சிக்கன் 65' ஆகத் தயாராக இருந்தது.

குட்டிப் புகைவண்டி ஒன்று அவருடைய

ஜிகினா-8

உதட்டுத் தண்டவாளத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

மீனாவுக்கும் எனக்கும் ஆச்சர்யம் தாங்கவில்லை. 'சைக்கிளைசாத்தனார்' யாரை + ஊரைப் பற்றியோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை!

கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸில் தேவைப்பட்ட உருவத்தைத் தவிர மற்றவற்றை 'எரேஸ்' செய்து விடுவதைப் போல மீனாவைத் தவிர, அந்த லொகேஷனையே 'ரப்பர்' எடுத்து அழித்துவிட்டார்.

மீனாவிடம் லுக்கை 'மெய்ண்டெய்ன்' செய்திருக்கச் சொல்லிவிட்டு நகர்ந்தேன்.

ரயில் பெட்டிப் பட்டாசை போல, அவர் தன் பார்வையைக் கொளுத்தி மீனாவின் மேல் விட்டுக் கொண்டிருந்தார்.

பின்புறமாக வந்த நான், அவர் தோள் மீது கையை வைத்தேன். அவர் என் கையை மட்டும் பார்த்துவிட்டு (ஆளையே பார்க்காமல்) மீண்டும் மீனாவை ஒரு கை பார்த் தார் - பார்வையில்.

அதர்ம சங்கடம் ஆகிவிட்டது எனக்கு. குரல் கொடுத்தேன். ஒரு வழியாகக் காதை என்னிடத்திலும் கண்ணைப் பழைய இடத்திலும் வைத்தபடியே பதிலளித்தார்.

''நமக்கு என்ன தொழிலுங்க?''

''விவசாயந்தேன்...''

''புள்ளைங்க எத்தனை?''

'' அது கெடக்கு பத்துப் பதினைஞ்சு...''

''அப்ப பொண்டாட்டிங்க?''

(ஒருமுறை என்னைப் பார்த்துவிட்டு) ஒரு கைவிரல் அத்தனையையும் விரித்துக் காட்டினார்.

''அஞ்சு பேரா?'' (அதிர்ச்சியுடன் நான்) ஒரு மென்னகையுடன், ''அதுல ஒரு பொண்டாட்டி மட்டும்தான் நம்பளோடது; மத்ததெல்லாம், இன்னொருத்தரோட... ரொம்ப வருஷமா கல்யாணமே ஆகாத... அப்படி இப்படி...'' என்று உதடு அசைத்தல், கண்ணடித்தல், விரலால் சைகை காட்டுதல் மூன்றையும் சேர்த்துச் செய்து தன்னுடைய மன்மதாயணத்தில் தகாத காண்டங்களை விளக்கினார்.

என் கண்ணும் காதும் இடம் மாறிக் குழம்பி, நிலைக்கு வந்தும் நம்பவே முடியவில்லை. அவருடைய உருவத்துக்கும், அவர் உருவாக்கியிருக்கும் காம சூத்திரத்துக்கும் சம்பந்தமே இல்லாமல் இருந்தது. ஆச்சரியம் அடங்கும் முன் ''இந்த வெடக்கோழிகூட ஒரு ஜடக் கோழி வீட்டுக்குத்தேன்'' எதுகை மோனையுடன் ஓர் எக்குத்தப்பான தோரணையுடன் பேசினார்.

அங்கிருந்தபடியே திரும்பி நான் மீனாவைப் பார்த்தேன். மீனா 'என்ன?' என்பதைப் போல சைகையால் என்னிடம் கேட்டார். என்னென்பேன் ஏதென்பேன்.

மீண்டும் அவரைப் பார்த்தேன். கரும்பு மட்டுமே அவர் கையில் 'மிஸ்ஸிங்'. அவரைச் சொல்லித் தப்பில்லை. வயது அரை சதத்தைத் தாண்டியிருந்தாலும், அவர் தன்னுடைய பந்து வீச்சில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார். ஆறாவது விக்கெட்டாக மீனாவையும் வீழ்த்த பந்தைத் தன்னுடைய அழுக்குக் கறை வேட்டியில் தேய்த்து விட்டு, ஓடி வந்து கொண்டிருக்கிறார். எப்படியும் இன்னும் ஒரு அரை மணி நேரம் 'சைட்' அடித்து மீனாவை 'ரைட்' கொடுத்துவிட முடியும் என்பது அவ(ர்) நம்பிக்கை!

அந்த நிகழ்ச்சி



யில்தான் எனக்கே ஒரு தத்துவம் உறைத்தது. அவரைப் பற்றி ஊர் என்ன நினைத்தது என்பது அவருக்குத் தெரிய வாய்ப்பில்லை. முயற்சியினால் ஒன்று இரண்டாகி ஐந்தை எட்டியபோது, ஐந்து ஆறாவதற்கு இன்னும் கொஞ்சம் உழைப்பைத்தானே உதிர்க்க வேண்டும்.

எங்கள் படப்பிடிப்பு முடிந்து 'பேக்கப்' சொன்ன பிறகும், அவருடைய கேமரா மட்டும் மீனாவின் மீதே இயங்கிக் கொண்டிருந்தது. பாவம்!

கடந்த ஐந்து வருடங்களில் எங்கள் வீட்டில் கிட்டத்தட்ட நூறு பணிப்பெண்கள் மாறி இருப்பார்கள்.

அதில் ஒரு பெண்மணி... கிட்டத்தட்ட வயது 35 இருக்கும். உடல் பருமன் என்று சொல்வதே, குறைத்துச் சொல்வதைப்போல அதிக பருமனாக இருப்பார்.

தன்னைத் தூக்கிக்கொண்டு அவர் எங்கள் வீட்டுக்கு வந்து செல்வதே பாவமாக இருக்கும்.

கருநீல வண்ணத்தில் வேறு இருந்தார். குழந்தைகளிடம் அவர் அன்பாக நடந்துகொண்டது அவரிடம் இருந்த 'ப்ளஸ் பாயிண்ட்.'

'குடைக்குள் மழை' படப்பிடிப்பு பல்லாவரத்தில் இரவு பகலாக நடந்துகொண்டிருந்தது. ஒருநாள் நேரமின்மையால் குழந்தைகளை படப்பிடிப்புக்கு என்னைப் பார்க்க வரச் சொல்லியிருந்தேன் - தடித்த பெண்மணிதான் கூட்டி வந்தார். அதற்கு முன் எப்போதும் இல்லாத வகையில் இரண்டு மூன்று முறை, ஒரு பித்தளைத் தட்டில் புளிசாதத்தை வைத்துக் கொடுப்பதைப் போல செயற்கையாகச் சிரித்தும் வைத்தார். படமும் வெளியாகி ஊத்திக்கொண்டது.

அடுத்த படத்துக்கு ஒரு புதுமுகத்தை அறிமுகப்படுத்தலாம் என நினைத்துக் கொண்டிருந்தேன். கடைசியில் அது நமீதா என முடிவானது. இதற்கிடைப்பட்ட காலத்தில் அந்தத் தடித்த பெண்மணி வேலையை விட்டும் சென்றிருந்தார்.

அவர் இடத்துக்குப் புதிதாக வேலைக்கு வந்தவர் ஒரு வயதான பெண்மணி. அவர், குழந்தைகளிடம் ஒருமுறை அந்தத் தடித்த பெண்மணி ஏன் வேலையை விட்டு நின்றுவிட்டார் என்பதற்குக் காரணத்தைச் சொல்லியிருக்கிறார்.

அந்தக் காரணம்... உங்க அப்பா புது கதாநாயகி தேடிக்கிட்டிருந்த தனாலதான்... அந்த சான்ஸ் தனக்குக் கிடைக்கும்ங்கிற நம்பிக்கையாலதான் அந்தப் பொம்பளை இங்க வேலை செஞ்சதாம்.

பல்லாவரத்துப் படப்பிடிப்புக்கு வரச் சொன்னதுகூட குழந்தைகளைப் பாக்குற சாக்குல தன்னைப் பாக்கறதுக்குத்தான் உங்கப்பா வரச் சொல்லியிருப்பாருன்னு அது நெனைச்சதாம்!

இனிமே அந்த சான்ஸ் நமக்கு இல்லேன்னு ஆனதுக்கப்புறம் எதுக்கு உழைக்கணும்னு போயிடுச்சாம்!' '

இது சிரிக்காமல் சீரியஸாக சிந்திக்க வேண்டிய விஷயம்.

இப்போதெல்லாம் நான் ஒருவரைப் பார்க்கும்போது அவர் தன்னை என்னவாகப் பார்த்துக் கொண்டிருப்பார் என்ற பார்வையுடனும் பார்க்கிறேன்.

(மின்னும்...)

கல்யாணப் பொண்ணு மேல காதல் வர்ற இன்னொரு லவ் ஃபிலிம். அதை லவ்லியா கொடுத்திருக்காரு இயக்குனர். ஹீரோ, மணப்பெண் மேல கண்ணுபோட, அந்த நேரம் பார்த்துத் திருமணம் தடைபட, 'அடிச்சாச்சு லக்கி ப்ரைஸ்'னு சொல்லி காதலிக்க ஆரம்பிக்கிற ஹீரோ, பல போராட்டங்களுக்குப் பிறகு நாயகியைக் கைப்பிடிக்கறாரு.

வைஜெயந்திமாலா பையன் சுசின்தான் ஹீரோ. சும்மா சொல்லக்கூடாது... அந்தக் காலத்துல அம்மா இருந்த மாதிரியே துறுதுறுன்னு அலைபாய்ற கண்களோட காதலையே காதலிக்க



நினைத்தாலே...

வைக்கிறாரு. இயல்பான காமெடி கைகொடுக்க, நெஞ்சுல பச்சக்னு ஒட்டிக்கிறாரு.

புதுமுகம் நர்க்கிஸ், புது முகமா தெரியல. நடிப்பும் அழகும் கலந்த கலவை. சுசினுக்குத் தான் எந்த விதத்திலும் குறைச்சல் இல்லைன்னு நிரூபிச்சிருக்காங்க.

இவங்களோட தோழியா வர்ற சந்தோஷி நல்ல தேர்வு. துணைக் கதாபாத்திரத்தை தூக்கி நிறுத்தறாங்க. கிருஷ்ணாவோட நகைச்சுவைக்கு நகையாம இருக்கறவங்க ரொம்பக் கம்மி. குழந்தைகள் பண்ற குட்டிக் குட்டி அரட்டை ரசனைக் குறும்புகள்.

வசனம் பரதன். ஷார்ப் நைஃப்னு சொல்லலாம். இசை விஜய் ஆண்டனி. பின்னணியைவிட மெட்டுக்கள்ல உத்வேகம் அதிகம். எந்தப் பாட்டும் போரடிக்கல. 'இளையராஜா - ரஹ்மான்' பாட்டு கூடுதல் சந்தோஷத்த கொப்பளிக்க வைக்குது. மதியோட ஒளிப்பதிவு, காட்சிகளை யதார்த்தமா பதிவு பண்ணியிருக்கு.

திரைக்கதை, தயாரிப்பு, இயக்கம் விஸ்வாஸ் சுந்தர். காதலை மென்மையா கையாண்டு, அன்பை அழகா வெளிப்படுத்தியிருக்குற இயக்குநருக்கு செல்லுலாய்டு பூங்கொத்து தரலாம்!

- லஜ்ஜாவதி

மறக்காதீங்க ரீடர்ஸ்...!

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

வாசகர் சந்திப்பு

சனிக்கிழமை - 09.06.07
சேலம்
இடம்: ஸ்ரீ வாசவி சுபிட்ஷா ஹால்,
ஸ்ரீ சுகவனேஸ்வரர் கோயில் அருகில்,
சேலம் - 1.
தொலைபேசி: 2451494
நேரம்: மாலை 4.25

ஞாயிற்றுக்கிழமை - 10.06.07
வேலூர்
இடம்: டார்லிங் ரெஸிடென்ஸி,
118, ஆபீஸர்ஸ் லைன், வேலூர்-1.
தொலைபேசி: 2213001
நேரம்: மாலை 4.25

சனிக்கிழமை - 23.06.07
கும்பகோணம்
இடம்: ஹோட்டல் வெங்கட்டரமணா
(மாடி),
டி.எஸ்.ஆர். பெரிய தெரு,
காந்தி பார்க் அருகில்
நேரம்: மாலை 4.25

ஞாயிற்றுக்கிழமை - 24.06.07
திருச்சி
இடம்: ஹோட்டல் அஜந்தா,
மத்தியப் பேருந்து நிலையம் அருகில்
நேரம்: மாலை 4.25

உங்கள் ஊரில் கல்கி

அன்பு வாசகர்களே!

கல்கி நிறுவனத்திலிருந்து மதிப்புமிக்க வாசகர்களாகிய உங்களைச் சந்திக்க உங்கள் ஊருக்கே வருகிறது கல்கி ஆசிரியர் குழு. இந்தச் சந்திப்பில் நீங்கள் உங்கள் குடும்பத்தோடு அவசியம் கலந்துகொண்டு, 'கல்கி' வார இதழைப் பற்றிய உங்களுடைய மேலான யோசனைகளையும் கருத்துகளையும் பரிமாறி, ஆக்கபூர்வமான யோசனைகளின் மூலம் கல்கி இதழை மேலும் மிளிரச் செய்ய உதவ வேண்டுகிறோம்.

இதயத்தை இதமாக்கும் 'கலகல' நிகழ்ச்சிகளும், இன்ப அதிர்ச்சியூட்டும் பரிசுப் போட்டிகளும் உண்டு.

அவசியம் கலந்துப்பீங்கதானே!

- ஆசிரியர் குழு


கல்கி
குடும்பத்துடன் படிக்க...
கல்கி
3.6.2007
இணைப்பு
அன்றும்...
...இன்றும்
4
14
அத்தனை
பேரும்
ரத்தினங்கள்!
8
அரைக் கோட்டு
அண்ணாச்சி!
10
போட்டியை
வரவேற்கிறோம்!


வரலாறு





● 1931-ல் வங்கி வர்த்தகம் துவங்கிய கட்டடம்

விண்ணை நோக்கி விஜயா வங்கி!



ஸ்ரீ அட்டாவர் பாலகிருஷ்ண ஷெட்டி



● முல்கி சுந்தர் ராம் ஷெட்டி

விஜயா வங்கி, 75 ஆண்டுகளைக் கடந்து வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறது.

1930-களில் தெற்குக் கர்நாடகப் பகுதியில் உள்ள விவசாயிகள், வறுமையினால் கந்து வட்டிக்காரர்களிடம் சிக்கி நிலத்தையே இழந்தனர்.

அவர்களுடைய துன்பத்தைப் போக்கவே விடுதலைப் போராட்ட வீரரான அட்டாவர் பாலகிருஷ்ணா தம்முடன் பதினான்கு பிரமுகர்களைச் சேர்த்துக் கொண்டு மங்களூரில் 1931-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 23-ஆம் தேதியன்று விஜயா வங்கி லிமிட்டெடைத் துவக்கினார். விஜயதசமி அன்று துவக்கப்பட்டதால் விஜயா வங்கி என்று பெயரிட்டார்கள்.

கிட்டத்தட்ட ஆறு வருடங்கள் வங்கியின் தலைவராக இருந்து, நல்ல அடித்தளத்தைப் போட்டவர் பாலகிருஷ்ண ஷெட்டி. 1937-ல் தேர்தலில் போட்டியிட்டு, எம்.எல்.ஏ.வும் ஆனார். அதன் பிறகு சென்னை ராஜதானியில் அமைச்சராகப் பணியாற்றினார். இருந்தும் வங்கியின் வளர்ச்சியில் தொடர்ந்து தனிக் கவனம் செலுத்தி வந்தார் பாலகிருஷ்ண



எழிலான எழும்பூர் கிளை!

விஜயா வங்கியின் எழும்பூர் கிளை முன் மாதிரிக் கிளையாக விளங்குகிறது. முற்றிலும்



ஷெட்டி.

1962 முதல் 1979 வரை, சுந்தர் ராம் ஷெட்டி தலைவராக இருந்த கட்டத்தில்தான், வடக்கு - வடகிழக்குப் பகுதிகளில் ஏராள மான கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன. நாகாலாந்தில் காட்டுப் பகுதியில் இருக்கும் நாகின்மோரா என்ற கிராமத்தில் கிளையைத் துவக்கியது படு துணிச்சலான காரியம்.

முல்கியில் ஊழியர்கள் பயிற்சிக் கல்லூரி துவங்கப்பட்டது. 1971ல் அந்நியச் செலா வணியைக் கையாளும் உரிமம் விஜயாவுக்கு வழங்கப்பட்டது. 1972ல் விவசாயிகளின் தேவைகளைக் கவனிக்க தனிப்பிரிவு துவங் கப்பட்டது. 1976ல் நவம்பர் 19-ஆம் தேதி. ஒரே நாளில் பல்வேறு மாநிலங்களில் 60 கிளைகளைத் திறந்து சாதனை படைத்தார் சுந்தர்ராம் ஷெட்டி.

வங்கியின் 400-ஆவது கிளை பெங் களூரில் துவக்கப்பட்டது. மங்களூரிலிருந்து தலைமை அலுவலகத்தை பெங்களூருக்கு மாற்றி விட்டார் சுந்தர் ராம் ஷெட்டி.

1980ல் விஜயா வங்கி நாட்டுடமையாக் கப்பட்டது.

துவக்க நாள் முதல் இன்று வரை 62000 கோடிக்கு வர்த்தகம் செய்திருக்கிறது வங்கி, அதில் 18000 கோடியைச் சென்ற ஒரு நிதி யாண்டிலேயே செய்திருக்கிறது.

குளிர் சாதன வசதி, பத்து ஒற்றைச் சாளர கவுண்ட்டர்கள். வாடிக் கையாளர்கள் வெகு நேரம் காத்திருக்க வேண்டியதில்லை. காத்திருக்கும் நேரம் மென்மையான இசை நம் காதுகளை வருடி, அமைதிப்படுத்துகிறது. பக்கத்திலேயே ஏ.டி.எம்., லாக்கர் வசதியும் உண்டு.



* குமாரசாமி

"750 கோடிக்கும் அதிகமாக இந்தக் கிளையில் வர்த்தகம் செய்கிறோம்" என்கிறார் உதவிப் பொது மேலாளர் குமாரசாமி.

விஜயா விசுவாசிகள்!

ஆர்.எஸ்.கே.கருமாறன் (திண்டுக்கல்): "வாங்கிய கடனை ஒழுங்காக குறித்த நேரத்தில் திருப்பிக் கட்டினால் வட்டியைக் குறைத்து கொள்வார்கள். இது ஒன்று போதாதா? என் அப்பா கோதண்டராமன் திண்டுக்கல் அருகே ஒரு பொறியியல் கல்லூரி துவக்க விஜயா வங்கி உதவி செய்தது. பல ஆண்டுகள் கழித்து, சென் னையில் பாலிதீன் பைகள் உற்பத்தி தொழிற்சாலை தொடங் கவும் பெரிய உதவியது.



* கருமாறன்

நவல்கிஷோர் ராத்தி (சென்னை): பழைய இரும்புத் தகடுகளை வாங்கி விற்கும் தொழிலுக்குப் பல வங்கிகளை உதவுமாறு அணுகினேன். பயனில்லை. சென்னை, மைலாப்பூர் விஜயா கிளை ஓ.டி. வசதி செய்து கொடுத்து, பிரச்னையைத் தீர்த்து வைத்தது.




* காந்திமதி

முரளி (விவசாயி, ராமநாயக்கன் பேட்டை, வாணியம்பாடி): கரும்பு, வாழை, நெல் பயிரிடுகிறோம். எங்களுக்கு விஜயா வங்கி இரண்டு லட்சம் வரை ஓ.டி. வசதியும், டிராக்டர் வாங்க மூன்றரை லட்சமும் கொடுத்தார்கள். அதையும் ஒழுங் காக திருப்பிச் செலுத்திவிட் டோம்.



* நவல்கிஷோர்


காந்திமதி (சென்னை): என் அப்பா இருபது வருடங்களுக்கும் மேலாக விஜயாவின் வாடிக்கை யாளர். என்னுடைய அழகு நிலை யம், ப்ளே ஸ்கூல், உணவகம் என என் எல்லா முயற்சிகளுக்கும் விஜயா வங்கியின் சென்னை வடபழனி கிளை பெரிய அளவில் உதவி செய்தது.



* முரளி

வாடிக்கையாளர்களின் அனுபவம்





• பாலகிருஷ்ண ஷெட்டி

வரலாறு



• சூர்யண்ணா ஷெட்டி



• வெங்கப்பா புஞ்சா



• ஜெகநாதபலால்

நிறுவிய இயக்குநர்கள்



• ஹிரியண்ணா ஹெக்டே



• அந்தயா ஷெட்டி



• வெங்கப்பா ஷெட்டி

அன்றும்...



• மஞ்சப்பா ஹெக்டே



• நாராயண பண்டாரி



• மஹாபால ராய்



• மஹாபால அத்பத்தய்யா



• கிருஷ்ணய்யா ஹெக்டே



• நாகண்ணா ஹெக்டே



• ராமகிருஷ்ண புஞ்சா

வங்கிகளின் நர்சரி!

மங்களூர், உடுப்பி ஆகிய நகரங்கள் அடங்கியுள்ள தெற்குக் கர்நாடகப் பகுதியை வங்கிகளின் நர்சரி அல்லது தொட்டில் என்று சொல்கிறார்கள். காரணம் இன்றைக்கிருக்கும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விஜயா வங்கி, சிண்டிகேட் வங்கி கார்ப்பரேஷன் வங்கி, கனரா வங்கி ஆகியவை இந்தப் பகுதியில் தோன்றியவை.

பொது மேலாளர்கள்



• ஹரி பிரகாஷ் ஷெட்டி



• ரத்னாகர் ஹெக்டே



• ஜெயராம் ஷெட்டி





• பூவப்பா ஆல்வா



• ஷாமசுந்தர ஷெட்டி



• திவாகர் ஹெக்டே



• ஸ்ரீதரா



...இன்றும்

* பிரகாஷ் பி. மால்யா

இன்றைய இயக்குநர்கள்

எதிர்காலத்தில்...

1978 கிளைகளுடன் விஸ்வரூபமாக வளர்ந்திருக்கும் வங்கி, வரும் இரண்டு மாதங்களில் ஆயிரமாவது கிளை யைத் துவக்கிவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள். 2010 வருடத்தில் ஒரு லட்சம் கோடி வர்த்தகம் செய்ய வேண்டும் என்ற குறியீட்டுடன் முனைந்து செயலாற்றிக் கொண்டிருக் கிறார்கள்.



* டி. வள்ளியப்பன்



* ராய்




* வெங்கடப்பா



* மல்லிகார்ஜுன எஸ். மதிஹுர்

"விஜயா என்றால் வெற்றி!"



* பிரிஜ் மோகன் ஷர்மா



* அசோக்குமார் ஷெட்டி



* அசோக்குமார்



* வைத்யநாதன்



* ரத்னாகர் ஷெட்டி



* வசந்த் குமார் ஷெட்டி



* நவீன் குமார் ஹெக்டே



* மஞ்சய்யா ஷெட்டி



* ஜெயகர் ஷெட்டி



* மோகன்தாஸ் ஷெட்டி

வெள்ளியும் பொன்னும்!

வெள்ளி விழா ஆண்டை எட்டியபோது சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு வர்த்தகம் செய்த விஜயா வங்கி, பொன் விழாவின் போது 600 கோடியை விஞ்சியது.



இது புதுசு...



கொண்டாடுவோம்

சென்ற ஆண்டின் இறுதியில் விஜயா வங்கியின் செயல் இயக்குநர் வள்ளியப்பன் சண்டிகர் நகரில் உள்ள விமானத் தள வி.ஐ.பி. அறையில் விமானத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தார். அப்போது திடீரென உள்ளே நுழைந்த மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம், வள்ளியப்பனைப் பார்த்து ''இங்க என்ன பண்றீங்க?'' என்று கேட்டார். ''இங்கு ஒரு கிளை திறந்தோம்'' என்று வள்ளியப்பன் சொன்னதும், ''கிராமப் பகுதியில் நிறைய கிளைகளைத் தொடங்குங்கள். என் தொகுதியில் கொத்தமங்கலம் என்ற உள்தங்கிய கிராமம் இருக்கிறது. அங்கு இருப்பவர்கள் சிங்கப்பூரில் வர்த்தகம் செய்பவர்கள். நீங்கள் அங்கு முயன்று பார்க்கலாமே...'' என்றார் நிதி அமைச்சர்.



பெங்களூர் திரும்பியவுடன் சென்னைப் பொது மேலாளர் ரத்னாகர் ஷெட்டியைத் தொடர்பு கொண்டார் வள்ளியப்பன். உடனே அந்தக் கிராமத்துக்குச் சென்று பார்த்து அறிக்கை தரச் சொன்னார். தொடர்ந்து என்ன நடந்தது? ரத்னாகர் ஷெட்டி சொல்கிறார்:

''திருச்சி - காரைக்குடி பாதையில் கானாடுகாத்தான் என்ற இடத்திலிருந்து உள்ளே செல்ல வேண்டும். 300 குடும்பங்கள் இருக்கும். நல்ல வசதியான கல்வீடுகள். அந்தக் கிராமத்தில் ஏதோ டீ கிடைக்குமே தவிர வேறெதுவும் கிடைக்காது. வங்கிக் கிளைக்கு இடம் பிடிப்பது கஷ்டமாக இல்லை. ஆனால் வேறு பல முனைகளில் சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. முதலில் டெலிஃபோன் கனெக்ஷன். நாங்கள் இப்போது திறக்கும் எல்லாக் கிளைகளையுமே Core Banking Solution-உடன்தான் திறக்கிறோம். இதற்கு நல்ல தரமான தகவல் தொடர்பு தேவை. ஆனால் கொத்தமங்கலத்துக்கு பள்ளத்தூர் தொலைபேசி நிலையத்திலிருந்துதான் கேபிள்கள் வருகின்றன. அவை பழைய கேபிள்கள்.

தொடர்ந்து சிறப்பான சேவையை வழங்க முடியாத கேபிள்கள். எங்கள் வங்கி தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் தயங்கினார்கள். கடைசியில் சாட்டி லைட்டைப் பயன்படுத்துவது என்று முடிவு செய்து VSAT தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினோம். இதற்கு பி.எஸ்.என்.எல். மற்றும் டாடா நெட் உதவி செய்தன. இவ் வசதியை நிறுவ ஒரு மாத காலமாயிற்று

அடுத்தது தங்கு தடையின்றி, சீரான மின் விநியோகம். அதுவும் அங்கு சாத்தியமில்லை என்று தெரிய வரவே, மரபுசாரா எரிசக்தியான சூரிய ஒளியைப் பயன்படுத்தி, மின்சாரத்தைப் பெற்றோம். இதன் காரணமாக ஏ.டி.எம்., ஏ.ஸி., கம்ப்யூட்டர் என்று எல்லா அத்தியாவசிய சாதனங்களும், மின் தடை இல்லாமல் இயங்குகின்றன. எங்களுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் வாங்க மதுரை அல்லது திருச்சிக்குத்தான் ஓட வேண்டியதாகிவிட்டது. வேலைக்கு வந்த ஆட்கள், ''என்ன பேஜாரு ஸார்... நல்ல சாப்பாடு சாப்பிட ஆறு கிலோ மீட்டர் போக வேண்டியிருக்கிறதே...'' என்று அலுத்துக் கொண்டார்கள்.

கொத்தமங்கலம் கிளையைத் திறக்க நாங்கள் பட்ட கஷ்டங்கள் எல்லாம் இந்த வருடம் பிப்ரவரி ஒன்பதாம் தேதி மறந்து போய் விட்டன. அன்றுதான் மத்திய நிதியமைச்சர் கிளையைத் திறந்து விட்டு எங்கள் வங்கியின் செயல்பாடுகளை, ஊழியர்களின் உழைப்பை மனதாரப் பாராட்டினார்'' என்று சந்தோஷப்படுகிறார் ரத்னாகர் ஷெட்டி.

கோர் பாங்கிங், ஏ.டி.எம். தொடர்புக்கு VSAT-ஐப் பயன்படுத்தி சோதனையோட்டம் பார்த்தவுடன், வங்கி கேட்ட தரை வழித் தொடர்பை நிதானமாக ஏற்படுத்திக் கொடுத்ததாம் பி.எஸ்.என்.எல்.

கொத்தமங்கலத்தை!

> “இப்போது திறக்கும் எல்லாக் கிளைகளையும் Core Banking Solution -உடன்தான் திறக்கிறோம்”



விடியலை நோக்கி...






மூல்கி சுந்தர் ராம் ஷெட்டி வங்கித் தலைவராக இருந்தபோது 1965-ஆம் வருடம் உருவாக்கப் பட்டது விஜயா வங்கி லோகோ. இந்த அரைக் கோட்டு நடுத்தர வயது இளைஞர் பாக்கெட்டுக்குள் கைகளை நுழைத்துக் கொண்டு பணிவோடு இருப்பார். வங்கியின் திட்டங்களுக்கு ஏற்ப பல அவதாரங்கள் எடுப்பார்.

அரைக் கோட்டு அண்ணாச்சி!

முதலில் இந்த லோகோ அறிமுகப்படுத்தப் பட்டபோது 'ஏர் இந்தியா' தரப்பிலிருந்து முணுமுணுப்பு எழுந்ததாம்! 'எங்கள் மகாராஜா பாணியைப் பின்பற்றுவது போலிருக்கிறதே!' என்று குரல்கள் வர, இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளை வங்கி நிர்வாகம் விளக்கி, ஏற்க வைத்தது.




மினி விஜயா

விஜயா வங்கியின் மினி வடிவம்தான் விஸ்வேஸ்வரய்யா கிராமீன் வங்கி. மாண்டியா மாவட்டத்தின் விவசாயிகளுக்கு முழு அளவில் உதவி செய்து வரும் இந்தக் கிராமப்புற வங்கி, விஜயா வங்கியின் வழி காட்டுதலிலும், கட்டுப்பாட்டிலும் இயங்கு கிறது. 25 கிளைகள் உள்ளன.

எங்கும், எதிலும்...

மாண்டியா, தார்வார், ஹாவேரி ஆகிய மூன்று மாவட்டங்களில் மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள் ஆகியவை உருவாகப் பெருமளவில் உதவி செய்கிறது விஜயா. சாலைகள், பாலங்கள், மின் நிலையங்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், சிறிய துறைமுகங்கள் என்று தொழில்துறை வளர்ச்சிக்கு விஜயா உதவி செய்யாத பிரிவுகளே இல்லை.






ஐந்து நாட்கள் பயிற்சி. அவருடன் 32 பேர் (கைதிகள் தான்) கலந்து கொண்டனர்.

''பேப்பர் பை தயாரித்தல், பால் பொருட்கள் தயாரித்தல் ஆகியவற்றில் பயிற்சி கொடுத்தோம். அவர்களுக்கு ஒரே உற்சாகம்! அவர்களுடைய விடியலுக்காகத்தான் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சி முடித்த கைதிகளின் கண்களில் நம்பிக்கை ஒளி தெரிந்தது. விடுதலையான சில கைதிகள் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு சுயதொழில்கள் துவங்கியிருக்கிறார்கள்'' என்கிறார் மூத்த மேலாளர் மணிமேகலை.

திருந்தி வாழ வேண்டும்!

கர்நாடக மாநிலம் மாண்டியாவைச் சேர்ந்த விஸ்வநாத் ஒரு சிறு திருட்டுக் குற்றத்துக்காகச் சிறையில் அடைக்கப்பட்டார். நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த அவரிடம் ஜெயில் அதிகாரி ''விஜயா வங்கி, உன்னைப் போன்றோருக்குச் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி கொடுக்கிறது. நீ அதில் சேர விரும்புகிறாயா?'' என்று கேட்க, ஓகே சொன்னார் விஸ்வநாத்.



வெற்றித் துளிகள்!

- ★ மார்ச் 2006-ல் நிகர லாபம் 126.88 கோடி. ஆனால் மார்ச் 2007-ல் நிகர லாபம் 161.14 சதவிகித வளர்ச்சியடைந்து, 331.34 கோடியைத் தொட்டிருக்கிறது!
- ★ வங்கி துவக்கியதிலிருந்து மார்ச் 2006 வரை மொத்த வர்த்தகம் 44,771 கோடிதான். ஆனால் கடந்த நிதியாண்டில் மட்டும் 17,477 கோடிக்கு வர்த்தகம் நிகழ, மார்ச் 2007-ல் இந்தத் தொகை 62,248 கோடியாக உயர்ந்திருக்கிறது.
- ★ திரும்பி வாராக் கடன் விகிதம் (என்.பி.ஏ) 0.85 சதவிகிதத்திலிருந்து மார்ச் 2007-ல் 0.59 சதவிகிதமாகக் குறைந்து விட்டது!
- ★ வங்கியின் செயல்பாடு உறுதியாக இருப்பதைக் காட்டும் அளவுகோலான நிகர வட்டி வரம்பு (Net Interest Margin) 3.41 சதமாக இருக்கிறது.
- ★ டெபாஸிட் தொகை கடந்த ஒரே வருடத்தில் 27,709 கோடியிலிருந்து 37,605 கோடியாக உயர்ந்திருக்கிறது.
- ★ வினியோகிக்கப்பட்ட கடன் தொகை 17,062 கோடியிலிருந்து 24,644 கோடியாக உயர்ந்திருக்கிறது!





போட்டியை

விஜயா வங்கியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராகப் பதவி வகிக்கும் பிரகாஷ் பி.மால்யா வட கர்நாடகா பகுதியைச் சேர்ந்தவர். பொருளாதாரத்தில் பட்ட மேற்படிப்பு முடித்த இவர், 1973-ல் கனரா வங்கியில் துவக்க நிலை அதிகாரியாகப் பணியில் சேர்ந்தார். அடுத்த 29 வருடங்களில் அதன் பொது மேலாளர்களுள் ஒருவராக உயர்ந்தார். 1994-ல் புது தில்லியில் ஹவுஸ்காஸ் என்ற கிளையில் தலைமை மேலாளராகப் பணியாற்றியபோது, அந்தக் கிளையை முற்றிலும், கணினிமயமாக்கி, உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெற்றார். கனரா வங்கியின் முதல் கணினிமயமாக்கப்பட்ட கிளை அதுதான்.



2005 ஜூலையில் சிண்டிகேட் வங்கியின் செயல் இயக்குநராக நியமிக்கப்பட்ட மால்யா, அந்தப் பொறுப்பில் ஒன்பது மாதங்கள்தான் இருந்தார். அந்தக் குறுகிய கால கட்டத்தில் சிண்டிகேட் வங்கியின் நிகர லாபம் 536 கோடியைத் தொட்டுச் சாதனை படைத்தது. 2006-ஆம் வருடம் ஏப்ரல் ஒன்றாம் தேதி விஜயா வங்கியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராகப் பதவி ஏற்றார். இவர் இந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்ட அதே நாளில்தான் செயல் இயக்குநராக வள்ளியப்பனும் பொறுப்பேற்றுக் கொண்டார். இருவரும் இணைந்து ஒரே வருடத்தில் பல புதிய குறியீடுகளைத் தொட்டு அசத்தினார்கள். "வங்கிகளுக்கிடையிலான வர்த்தக ரீதியான போட்டிகளை வரவேற்கிறோம். அதுவே எங்கள் ஆரோக்கியத்துக்கு ஆதாரம்" என்கிறார் மால்யா :

அந்நிய வங்கிகளின் ஆதிக்கம் பெருகி வரும் நிலையில் விஜயா வங்கி போன்ற பாரம்பரிய வங்கிகளின் நிலை எப்படியிருக்கிறது?

பி.மால்யா: வங்கித் துறை இன்று

போட்டி நிறைந்ததாக மாறி வருகிறதென்று நான் ஒப்புக் கொள்கிறேன். இதற்குக் காரணம் அந்நிய நாட்டு வங்கிகள் மட்டுமல்ல; கடந்த சில வருடங்களில் துவக்கப்பட்ட நமது நாட்டு வங்கிகளும்தான். ஆனால், பொதுத் துறை வங்கிகள்- விஜயா உட்பட- எந்த விதத்திலும் பீதி அடைய வேண்டியதில்லை. இதற்கு முன்னுதாரணமாக, பஞ்சாப் நேஷனல் வங்கி, கனரா வங்கி இந்தியன் வங்கி மற்றும் கார்ப்பரேஷன் வங்கிகளைச் சொல்லலாம். இந்த வங்கிகள் கடந்த காலங்களில் எந்தவிதமான வங்கிகள், பொதுத் துறை வங்கிகளின் வர்த்தகத்தைக் கைப்பற்றி விட்டது போல் ஒரு மாயத் தோற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது தவறு. நமது நாட்டு வங்கிவர்த்தகம், 75 முதல் 77 சதவிகிதம் வரை பொதுத் துறை வங்கிகள் மூலமாகவே

வரவேற்கிறோம்!

பிரகாஷ் பி.மால்யா

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்

தாக்குதல்களையும் சமாளித்து, நிமிர்ந்து நிற்க முடியும் என்று நிரூபித்துக் காட்டியிருக்கின்றன. பொதுத்துறை வங்கிகள் நாட்டின் மண்ணோடு கலந்தவை. எங்களுடைய வாடிக்கையாளர்கள் எங்களோடு உணர்வு பூர்வமாக இணைந்தவர்கள். புதிய தலைமுறை நிகழ்கிறது.

எங்கள் ஊழியர்கள் எந்தச் சவாலையும் சந்திக்கத் தயாராக இருக்கிறார்கள். போட்டிகளை நாங்கள் வரவேற்கிறோம். அவை எங்களை மேன்மேலும் சுறுசுறுப்பாக இயங்கச் செய்யும். அதுவே எங்கள் ஆரோக்கியத்துக்கு ஆதாரம்.

பொதுத் துறை வங்கிகள் நவீனப்படுத்



• ரத்னாகர் ஷெட்டி

தமிழகத்தில்...

விஜயா வங்கியின் முதல் தமிழ்நாட்டுக் கிளை 1967-ல் சென்னை பாரிமுனை மூர் தெருவில் துவக்கப்பட்டது. இன்று அறுபது கிளைகள் மற்றும் ஐந்து அலுவலகங்கள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. சுமார் 50 லட்சம் மட்டுமே வர்த்தகமாகக் துவக்கத்தில் கொண்டிருந்த தமிழ்நாடு கிளைகள், கடந்த மார்ச் மாதக் கணக்குப்படி3540 கோடிக்கு வர்த்தகம் செய்துள்ளன. சென்னை மண்டலப் பொதுமேலாளர் ரத்னாகர் ஷெட்டி. செப்டெம்பர் 2006-ல் பொது மேலாளராக இவர் பொறுப்பேற்ற பின் தமிழ்நாட்டுக் கிளைகள் விரைவுப் பாதையில் போய்க் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள் ஊழியர்கள். "விஜயா கிசான் அட்டை என்ற ஒரு புதிய அட்டையை விவசாயிகளின் வசதிக்காக வழங்கியிருக்கிறோம். இதுவரை 467 அட்டைகளை வழங்கி, கடந்த நிதியாண்டில் மட்டும் 219 கோடி விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் வழங்கியிருக்கிறோம். 222 சுய உதவிக் குழுக்களுக்கு 222 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம்" என்கிறார் ரத்னாகர் ஷெட்டி.

தப்பட்டு வருகின்றன. அதே சமயம் கிராமப் புறங்களில் பரவலாகச் செயல்பட்டு வருகின்றன. கிராமப்புற வங்கிகள் நவீனமாவதை ஏற்கத் தயாராகிவிட்டார்களா?

மால்யா: என்ன இப்படிக் கேட்டுட்டீங்க? கிராம மக்கள் நவீனங்களை மகிழ்ச்சியுடன் ஏற்கிறார்கள். உதாரணமாகச் சொல்வதென்றால், சமீபத்தில் தமிழ்நாட்டில் செட்டிநாடு பகுதியிலுள்ள கிராமமான கொத்தமங்கலத்தில் எங்கள் வங்கியின் கிளை திறந்தோம். அந்தக் கிளையில் ஏ.டி.எம். வசதி உள்ளது! ஆன்-லைன் வியாபாரம் செய்யும் வசதி உண்டு; கிராம மக்கள் உற்சாகமாக இந்த வசதிகளைப் பயன்படுத்துகிறார்கள்.



“போட்டியே எங்கள் ஆரோக்கியத்துக்கு ஆதாரம்!”

தமிழ் நாட்டில் உங்கள் வங்கியின் செல்பாடுகளைப் பற்றிக் கூறுங்கள்!

மால்யா: கிசான் (விவசாயி) கார்டு என்ற திட்டத்தை நாங்கள் முதலில் கோயமுத்தூரில்தான் அறிமுகப்படுத்தினோம். இந்தக் கார்டைப் பயன்படுத்தி எந்த நேரமும் ஏ.டி.எம்.மில் விவசாயிகள் பணம் எடுக்கலாம். தமிழ் நாட்டில் விஜயா வங்கிக்கு 65 கிளைகள் உள்ளன. இவற்றில் 50 கிளைகள் Core Banking Solution (சி.பி.எஸ்.)படி இணைக்கப்பட்டுள்ளன. இந்த வருடம் ஆகஸ்ட் மாதத்துக்குள் எல்லாக் கிளைகளுக்கும் சி.பி.எஸ். வசதி செய்து முடிக்கப்பட்டு விடும். மிக விரைவில் தமிழ் நாட்டில் பல கிளைகள் துவக்கப்படவுள்ளன.

பல வங்கிகள் வங்கிப் பணியைத் தவிர வேறு வகைப் பணிகளிலும் இறங்குகின்றனவே; விஜயா வங்கி என்ன செய்யப் போகிறது?

மால்யா: இப்போது காப்பீட்டுச் சேவையையும் நாங்கள் (பஞ்சாப் நேஷனல் வங்கியின் மூலமாக) செய்து வருகிறோம். மென்பொருள் வடிவமைப்பு, தங்க வர்த்தகம் என்று கால் பதிப்பதற்கான திட்டங்கள் பரிசிலனையில் உள்ளன.

விஜயாவின் விடாக் கண்டர்கள்!



உ. பாண்டியன்

வராக் கடனை வசூலிப்பதில் விஜயாவின் ஊழியர்கள் துப்பறியும் நிபுணர்கள் போலச் செயல்பட்டு வருகிறார்கள்! சென்னையில் பல லட்சங்கள் கடன் வாங்கி விட்டு, திருப்பிச் செலுத்தாமல், அமெரிக்காவுக்கு ஓடி, அங்கு பெட்ரோல் பங்க் வைத்து ஓஹோவென்று வாழ்ந்தார் ஒருவர். வங்கியின் அதிகாரி ஷகிலாவுக்கு இந்தத் தகவல் தெரிய வந்திருக்கிறது. உடனே தூதர் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு, டெலிஃபோன் டைரக்டரி மூலம் அந்த நபரின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள்! ‘‘நான் இங்கிருக்கும் தகவலை சென்னையில் வேறு யாருக்கும் சொல்லி விடாதீர்கள்!’’ என்ற நிபந்தனையுடன் பணத்தைத் திருப்பிச் செலுத்தி விட்டார். இந்தத் தகவலை நமக்குச் சொன்ன சென்னை மண்டலத் துணைப் பொது மேலாளர் பாண்டியன் ‘‘ஊழியர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சொந்த நிறுவனம் போல விஜயா வங்கியை நினைத்து, உழைத்து வருகிறார்கள்’’ என்கிறார்.

உயிர்வரம்



விஜயா வங்கியை நிறுவிய பண்ட் சமூகத்தினர் பூதல பாண்(டி)ய மரபைச் சேர்ந்த இவர்கள். போர்ப்படை வீரர்கள். காலப் போக்கில் நிலம் கைவசப்படவே, விவசாயிகளானார்கள்.

பூதல பாண்(டி)யன் தனது ஆட்சியில் பெரிய கப்பல் ஒன்றை உருவாக்கினான். அதற்குச் சோதனை ஓட்டம் துவக்குவதற்கு முன் உயிர்ப்பலி கொடுக்க விரும்பினாள் அவனது அக்கா. தனது மகனைப் பலி கொடுக்க ஒப்புக்கொண்டார். பலி நாளன்று, வான் தூதுவர் ஒருவர் தோன்றி, இறந்த சிறுவனுக்கு உயிர் கொடுத்தாராம்! இதைத் தொடர்ந்து, தனது சொத்துக்களையெல்லாம் அக்கா மகனுக்குக் கொடுத்து விட்டானாம் பூதல பாண்(டி)யன்.



அலிய சந்தானா!

இந்த மன்னனின் வம்சாவழியில் வந்த பண்ட் சமூகத்தினர், அக்கா மகனுக்குச் சொத்துக்களை எழுதி வைக்கும் பழக்கத்தை மேற்கொண்டனர். இதற்குத்தான் அலிய சந்தானா என்று பெயர்! இந்தப் பழக்கம் தற்போது கடைபிடிக்கப்படுவது குறைந்து வருகிறதாம்!

விவசாயிகளுக்காக...

மங்களூரில் இயங்கும் விஜயா கிராமப்புற வளர்ச்சி நிறுவனம், விவசாயிகளின் சாகுபடி தொடர்பான பிரச்னைகளைத் தீர்க்க மிகவும் உதவியாக இருக்கிறது.



நேர்காணல்

புதுக்கோட்டையைச் சேர்ந்த டி. வள்ளியப்பன், திருச்சி செயிண்ட் ஜோஸப் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு முடித்தவர். 1970-ல் இந்தியன் நேற்று பணியில் சேர்ந்த இளைஞனைப் போல் துள்ளலுடன் சொல்கிறார் வள்ளியப்பன். அவருடன் ஒரு சந்திப்பு:

உங்கள் துவக்க கால வங்கிப் பணியைப் பற்றிச் சொல்லுங்களேன்!

வள்ளியப்பன்: அப்போதெல்லாம்



ஒவ்வோர் ஊழியரும் வங்கி இலாபகரமாக இயங்க வேண்டுமென்ற உணர்வுடன் உழைத்து வருகின்றனர்

வங்கியில் துவக்க நிலை அதிகாரியாகப் பணியில் நுழைந்தவர். கிளை மேலாளர் பொறுப்பிலிருந்து, பொது மேலாளர் வரை பல்வேறு பொறுப்புகளை இந்தியன் வங்கியில் வகித்து முத்திரை பதித்தவர். இன்று விஜயா வங்கியின் செயல் இயக்குநராக உயர்ந்திருக்கிறார். இவரது பணியைப் பாராட்டி 2007-ஆம் ஆண்டின் தேசிய மஹான் ஸ்ரீ ரத்ன விருது வழங்கப் பட்டிருக்கிறது. ''புதுமையாக எதாவது செய்து கொண்டே இருக்கணும்'' என்று



கிளை மானேஜர்கள் உயரமான நாற்காலியில்தான் உட்கார்ந்திருப்போம். ஆயிரம் பக்க லெட்ஜரைப் பல தடவை புரட்ட வேண்டி வரும். ஆதலால் இரவானால் கைவலி எடுத்துக் கொள்ளும்! அப்போதெல்லாம் கிளை ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையே ஒரு தனிப்பட்ட நெருக்கம் இருக்கும். இருதரப்பினரும், தங்கள் சொந்த சுக, துக்கங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். இந்த 'பர்சனல் டச்' வங்கியின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்தது. ஆனால் இன்று சூழலே மாறி விட்டது. இப்போதெல்லாம் கஸ்டமர்கள் வங்கிக்கு வந்த உடனே வேலை நடக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். சிலர் வீட்டிலிருந்தபடியே வங்கி வேலைகளை

முடிக்க முடியுமா என்று பார்க்கிறார்கள். இப்படி மாறி வரும் சூழலுக்கு ஏற்ப பல வங்கிகள் வலைத் தளம் மூலமாக வங்கியில் உள்ள கணக்கை அணுகும் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. எங்களுடைய அடுத்த கட்டப் பயணமும் அதுதான்! Core Banking Solution என்னும் வசதி இன்று எங்களின் 978 கிளைகளுள் 433 கிளைகளில் உள்ளது. இதன் மூலம் மதுரை கஸ்டமர் டெல்லிக் கிளையில் கூட தனது கணக்கை இயக்க முடியும். நாடு முழுதும் 171 ஏ.டி.எம்.கள் உள்ளன.

ஒரு பக்கம் நவீனமயமாக்கல், மற்றொரு பக்கம் ஊழியர்கள் விருப்ப ஓய்வில் போவது என்ற நிலையில் வங்கியின் பணிகள் எப்படி ஈடுகட்டப்படுகின்றன?

புரிந்துகொள்ளலாம். 17 மண்டலங்களில் உள்ள எங்கள் பொது மேலாளர்களுடன், பெங்களூரில் தலைமையகத்தில் இருந்தபடியே வீடியோ கான்ஃபரன்ஸிங் முறையில் கலந்துரையாடி வேலைகளை விரைவுபடுத்துகிறோம்.

அடுத்த இலக்கு?

வள்ளியப்பன்: 50,000 கோடியைத் தாண்டி வர்த்தகம் செய்யும் நாங்கள் இப்போது நடுத்தர வங்கி. 2010-க்குள் ஒரு லட்சம் கோடியை எட்டி, பெரிய வங்கியாக மாற வேண்டும் விஜயா வங்கி. அதை நோக்கியே எங்கள் பயணம்!

அத்தனை பேரும் ரத்தினங்கள்!

டி.வள்ளியப்பன், செயல் இயக்குநர்

வள்ளியப்பன்: எங்கள் ஊழியர்கள் ஒவ்வொருவரும் ரத்தினங்கள். அவர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவித்தால், வங்கி இலாபகரமான பலன்களைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை. ஆயிரம் கிளைகள், பதினோராயிரம் ஊழியர்கள், ஏழு லட்சம் வாடிக்கையாளர்கள். வங்கியின் மொத்த வர்த்தகத்தை, வேலை செய்யும் ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகுத்துப் பார்த்தால் ஒவ்வோர் ஊழியரும் வங்கி இலாபகரமாக இயங்க வேண்டும் என்ற உணர்வுடன் உழைப்பதைப்



விளையாட்டு



விருது வங்கி!

பெங்களூர் விஜயா வங்கியின் முதல் தளத்தில் இரண்டு பெரிய கண்ணாடி பீரோக்களில் கோப்பைகளும், பதக்கங்களும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. எல்லாம் விஜயா ஊழியர்கள், தடகளம் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பெற்றவை. ''முல்கி சுந்தர் ராம் ஷெட்டி தலைவராக இருந்தபோது ஸ்போர்ட்ஸ் கிளப் துவக்கப்பட்டது. ஊழியர்களிடையே சிறந்த வீரர்களை உருவாக்குவதற்கு முயற்சி மேற்கொண்ட அதே சமயத்தில், புகழ்பெற்ற வீரர்களையும் எங்கள் வங்கியில் சேர்த்துக் கொண்டோம். கிரிக்கெட் வீரர்கள் கும்ப்ளே, ஸ்ரீநாத், தடகள ஓட்டக்காரர் அஸ்வினி நாச்சப்பா ஆகியோர் எங்கள் ஊழியர்கள்தான்! அவர்கள் விளையாட்டில் உயர்ந்த பட்ச விருதான அர்ஜுனா விருதினைப் பெற்றார்கள். பிறகு எங்கள் கபடி வீரர் ஹொன்னப்பாவும் அர்ஜுனா விருது பெற்றார். திலீப் என்பவர் கூடைப் பந்து இந்திய டீமில் இடம் பெற்று ஒலிம்பிக் போட்டிக்குச் சென்றார்'' என்கிறார் சீனியர் மேலாளர் மைலப்ப ராய்.





தொகுப்பு: ப்ரியன்
படங்கள்: ராஜன்



கல்கி

குடும்பத்துடன் படிக்க...

3.6.2007

+16

இதழுடன் இணைப்பு 16 பக்கங்கள்

விண்ணை நோக்கி விஜயா வங்கி!



Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under
PMGs Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki Issue Dated 3.6.2007





Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.